~~297~~
112

# மக்கள் குழு ஒப்பந்தம்



ஆசிரியர்

முனைவர் சுந்தர சண்முகனார்

தமிழ் - அகராதித்துறைப் பேராசிரியர் (ஓய்வு)

புதுச்சேரி - 605 011

# மக்கள் குழூ ஒப்பந்தம்

ஆசிரியர்:

ஆராய்ச்சி அறிஞர்

முனைவர் சுந்தர சண்முகனார்

தமிழ்-அகராதித்துறைப் பேராசிரியர் (ஓய்வு)

புதுச்சேரி-11.

கிடைக்கும் இடம்:

சுந்தர சண்முகனார்

38, வேங்கடநகர், (இரண்டாம் தெரு)

புதுச்சேரி-605 011

முதல் பதிப்பு: ஆகஸ்ட் 1989

உரிமை: ஆசிரியர்க்கே

விலை: ரூ. 15-00

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பக வெளியீடு
புதுச்சேரி-11.

அச்சகம்

சபாநாயகம் பிரிண்டர்ஸ்,
73-A, கீழரதவீதி,
சிதம்பரம்-608 001.

## ஆசிரியர் முன்னுரை

சில விழா மலர்களிலும் சில இதழ்களிலும் சில சொற் பொழிவுகளிலும் யான் வெளியிட்டுள்ள கருத்துகள், கட்டுரைகள் வடிவத்தில் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தனிக் கட்டுரைகள் சிலவும் உண்டு.

இக்கட்டுரைகளுள் "மக்கள்குழு ஒப்பந்தம்" என்னும் முதல் கட்டுரை நூலின் தலைப்புப் பெயராக அமைந் துள்ளது. அதன் இன்றியமையாமை நோக்கி அதற்கு இந்தத் தகுதி அளிக்கப்பெற்றுள்ளது.

இந்த நூல் வெளியாவதற்கு ஓரளவு பொருள் உதவி புரிந்த புதுச்சேரி அரசுக் கல்வித் துறைக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

வழக்கம் போல் இந்நூலுக்கும் ஆதரவு நல்க அனைவரையும் வேண்டுகிறேன்.

இந்த நூலை நன்முறையில் அச்சிட்டுத்தந்த சபாநாயகம் அச்சகத்தாருக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

சுந்தர. சண்முகன்

## உள்ளுறை

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மக்கள்குழு ஒப்பந்தம் | — | 5 |
| 2. | ஆறும் ஊரும் | — | 19 |
| 3. | திருநாவலூர் | — | 27 |
| 4. | தே நாட்டுப் புறம்! | — | 39 |
| 5. | பிணியின்மை | — | 49 |
| 6. | பாடலி புத்திரமும் பாதிரிப்புலியூரும் | — | 54 |
| 7. | பாரதி தாசனாரைப் பற்றி | — | 69 |
| 8. | புகழ்ப் பத்து | — | 76 |
| 9. | வள்ளுவர் காட்டிய அரசியல் மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்ததா? | — | 85 |
| 10. | "தன்னெஞ்சே தன்னைச் சுடும்" | — | 91 |
| 11. | ஒரு நல்ல குறிக்கோள் | — | 96 |
| 12. | ஓவியக் கலையில் மகளிர் பங்கு | — | 100 |
| 13. | "சொல்லின் செல்வன் சொல்லாமல் சொன்னவை" | — | 107 |
| 14. | அருட்பா வாணர் | — | 112 |
| 15. | பழந்தமிழர் பண்பாடு | — | 120 |
| 16. | வேமன்னரின் அறிவுரை | — | 130 |
| 17. | குரு நானக்கின் படிப்பினைகள் | — | 134 |
| 18. | முச்சங்க காலத் தமிழிசை நூல்கள் | — | 138 |
| 19. | ஒரு புது முதலியாரின் அறிமுகம் | — | 156 |
| 20. | கவிக் குரல் | — | 159 |

# 1. மக்கள்குழு ஒப்பந்தம்

மங்களம் மங்கைப் பருவம் அடைந்தாள். தாய் தந்தைக்கு அவள் ஒரே பெண். அவள்மேல் அவர்களுக்கு உயிர். அவளை வெளியே அனுப்புவது இல்லை. ஆண் பிள்ளைகளோடு பழக விடுவது இல்லை. இவ்வளவு கண்ணும் கருத்துமாகக் காவல் காத்து வந்தார்கள். காவல் காத்து என்ன செய்வது? என்றைக்கு இருந்தாலும் மங்களம் அயலான் மனைவி தானே! அடுத்த ஊரிலிருந்து பெண் கேட்டார்கள். தாய் சரி என்றாள். தகப்பனுக்கு விருப்பம் இல்லை. குரங்கின் கையிலா பூமாலையைக் கொடுப்பேன் என்று கடிந்து பேசினார். பெண்ணுக்கு வந்தவர் மூக்கு உடைபட்டுச் சொல்லாமல் நழுவினார். நல்லவருக்கு அடையாளம் சொல்லாமல் போவது தானே!

இன்னொரு நாள் வேறு ஊரிலிருந்து பெண்கேட்க வந்தார்கள். தந்தை சரி என்றார். தாய்க்கு விருப்பம் இல்லை. கிளியை வளர்த்துப் பூனை கையிலா கொடுப்பேன் என்று அலறினாள். வந்தவருக்கு எப்படி இருக்கும்? முகத்தில் கரி பூசியது மாதிரி ஆயிற்று.

வந்த 'கிராக்கியை' எல்லாம் இப்படியே கத்தரித்து விட்டார்கள். காலமோ கடந்து விட்டது. கடைசியில் தாய் தந்தைக்கே கவலை உண்டாயிற்று. அவர்களே மாப்பிள்ளை தேடினார்கள். ஒருவனுக்குக் கட்டிக் கொடுத்தார்கள். நிறைய சீர்வரிசை செய்தார்கள். பெண்ணைப் பிரிய மனம் இல்லாமல் வழிகூட்டி அனுப்பினார்கள். ஒரே அழுகை. சும்மா தானா? பெண்ணைக் கொடுத்தோமோ கண்ணைக் கொடுத்தோமோ என்பார்களே!

அது இருக்கட்டும். இதற்கு முன் மங்களத்தின் பெற்றோர் அவளை வெளியில் அனுப்பவில்லை. ஆண்களுடன் பேச விடவில்லை. முதலில் பெண் கேட்டவருக்குக் கொடுக்கவில்லை. பிறகு அவர்களுக்கே அக்கறை ஏற்பட்டது. அயலான் ஒருவனுக்குக் கட்டிக் கொடுத்தார்கள்; சீர்வரிசையும் செய்தார்கள். இதன் காரணம் என்ன; இங்கே ஓர் உண்மை இருக்கிறது. நாம் கண்டுபிடிக்க வேண்டும். அதைக் கண்டுபிடிக்கத் துணைக்கு இதுபோல் இன்னும் ஓர் எடுத்துக்காட்டு பார்ப்போம்:

சாத்தூர் ஒரு சின்ன ஊர். சாமிநாதன் அந்த ஊருக்கே பெரிய மனிதர்; பெரிய பணக்காரர். அவருடைய ஒரே மகன் ஆறுமுகம் என்பவன். செல்வரின் ஒரேமகன் செல்லப் பிள்ளைதானே! "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" என்று பழமொழி சொல்வார்களே!

சாமிநாதன் எப்போது பார்த்தாலும் மகனோடு கொஞ்சிக் கொண்டே இருப்பார்; முத்தம் கொடுக்கச் சொல்லி அவனை அடிக்கடி தொந்தரவு பண்ணுவார். அவன் சில நேரம் கொடுப்பான் – சில நேரம் கொடுக்க மாட்டான். தராவிட்டால் விடுவாரா? இவர் முத்தம் கொடுக்கிறேன் என்று அவன் கன்னத்தைப் பிய்த்து இழுத்து விடுவார். பையனுக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

சாமிநாதன் மகனை அடிக்கவே மாட்டார்; திட்டவும் மாட்டார். யாராவது தெருப்பிள்ளைகள் அடித்துவிட்டால் அவர்களை நொறுக்கி விடுவார். ஒருநாள் இவர் மகனை அண்டை வீட்டு அப்பாவி அடித்துவிட்டான். அவன்மேல் இவர் வழக்குப் போட்டுவிட்டார். அப்பாடா! மகன் மேல் எவ்வளவு உயிர்!

ஆறுமுகத்துக்கு ஐந்து வயது நிரம்பியது. ஊரில் ஒரு சிறிய பள்ளிக்கூடம் உண்டு. அதன் ஆசிரியர் கண்டிப்பான பேர்வழி. ஏழைப் பையன் என்றும் பார்க்கமாட்டார்; பணக்காரப் பையன் என்றும் பார்க்க மாட்டார். எல்லோரும் அவருக்குப் பொது. அது சரிதானே! அது தெரிந்தும் சாமிநாதன் ஆறுமுகத்தை அவரிடம் படிக்கவிட்டார். மகன் தப்பு செய்தால் உடம்புத்தோலை உரித்துவிடச் சொன்னார். அம்மாடி, சிலர் இதை நம்பவே மாட்டார்கள்.

என்ன இது! மகனை அடித்த அண்டை வீட்டு அப்பாவி மேல் சாமிநாதன் வழக்குத் தொடுத்தார். அதே மனிதர் அதே மகனுடைய தோலை உரிக்கும்படி ஆசிரியரிடம் சொல்லி இருக்கிறார். இதன் காரணம் என்ன? இதிலும் ஏதாவது மறைபொருள் – இரகசியம் உண்டா? ஆமாம். நாம் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிப்போம். இன்னும் முயற்சி செய்து பார்ப்போம்.

நாட்டில் போலீஸ்காரர் இருக்கிறார்; அவர் சிலசமயம் நம்மில் சிலபேரை மிரட்டுகிறார்; சில சமயம் துரத்திப் பிடிக்கிறார்; சிலசமயம் தண்டனை கிடைக்கச் செய்கிறார். அவரோ மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் வாங்கிப் பிழைப்பவர். ஏன் அவர் மக்களை அப்படி செய்யவேண்டும்? அப்படி செய்பவரை மக்கள் ஏன் மதித்து வருகிறார்கள்?

நீதிபதி இருக்கிறார். அவர் சிலருக்குப் பணம் தண்டம் போடுகிறார்; சிலரைச் சிறைக்கு அனுப்புகிறார்; சிலருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கிறார். அவரும் மக்கள் வரிப் பணத்தில் வாழ்பவர்தான். ஏன் அவர் மக்களை அப்படி செய்ய வேண்டும். அப்படி செய்தும் மக்கள் அவரை மதிப்பது ஏன்?

நாட்டில் பல அரசு அலுவலர்கள் இருக்கிறார்கள். சட்டமன்றம் இருக்கிறது. அதில் பலர் அமர்ந்து இருக்கிறார்கள். அமைச்சர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கூடுகிறார்கள்; பல சட்டங்கள் போடுகிறார்கள். சில சட்டங்கள் நம்மில் சிலருக்குப் பிடிக்கவில்லை. ஒரு சட்டம் நமக்கு வேண்டியதை வேண்டா என்கிறது. ஒரு சட்டம் நமக்கு வேண்டாததை வேண்டும் என்கிறது. இன்னொரு சட்டம் நமக்கு வரியைச் சுமத்துகிறது. வேறு ஒரு சட்டம் சிலருக்குத் தண்டனை கொடுக்கிறது. இது ஏன்?

மக்களின் வரிப் பணத்தில் வாழும் அரசு அலுவலர்கள் மக்களுக்கே இப்படி செய்யலாமா? இதன் காரணம் என்ன? இங்கேயும் பெரிய புது இரகசியம் உண்டா? இதையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும். இதோ அதற்கு வழி. அந்த வழி என்ன என்று மேலே போவோம்.

மனிதன் இப்போது மாடமாளிகையில் வசிக்கிறான்; அல்வா சாப்பிடுகிறான்; அருமையான காபி குடிக்கிறான்; வைர நகை அணிகிறான்; வழ வழப்பான ஆடை உடுத்துகிறான்; வகை வகையான வண்டிகளில் ஏறிச் செல்கிறான்; பெரிய படிப்பு படிக்கிறான்.

ஆனால் பழங்கால மனிதன் இப்படியா இருந்தான்? அதுதான் இல்லை; மலைக் குகைகளில் வசித்தான்; மலைப் பொந்துகளில் வாழ்ந்தான்; காய் கனிகளைத் தின்றான்; விலங்குகளை வேட்டையாடி உண்டான்; துணிக்குப் பதில் மரப்பட்டை, தழை இவைகளைச் சுற்றிக் கொண்டான்; நடந்து சென்றான்; சரியாகப் பேசவே தெரியாது. — எங்கிருந்து படிப்பான்? கிட்டத்தட்ட விலங்கு போல் வாழ்ந்தான்,

இதை நம்ப முடியாதா? சான்று வேண்டுமா? இதோ சான்று! இப்போது மலைப் பக்கத்தில் வசிக்கும் வேடர் வில்லியரைப் பார்த்தால் தெரியும். இப்போதே இப்படி மாந்தர் இருப்பதைப் பார்க்கிறோம். இதைக் கொண்டு பழைய காலத்தைப் பற்றி நாம் நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

அப்போது விலங்கு போல் வாழ்ந்த மனிதன் இப்போது எப்படி இவ்வளவு நாகரிகம் அடைந்தான். இதை நாம் அடுத்தபடி ஆராய வேண்டும்.

விலங்கு என்ன செய்கிறது? ஓடி ஆடி இரை தேடுகிறது; கிடைத்ததைத் தின்னுகிறது; உறங்குகிறது; குட்டி போடு கிறது; இப்படி காலம் தள்ளுகிறது; அப்போதும் இப்படித் தான் செய்தது; இப்போதும் இப்படித்தான் செய்கிறது; இனி எப்போதும் இப்படித்தான் செய்யும். பழைய மனிதனும் இப்படித்தான் நடந்தான்.

ஆனால் மனிதனுக்கு விலங்கைவிட கூட ஓர் அறிவு உண்டு. அதுதான் பகுத்தறிவு. மனிதன் அறிவு புதுப் புது விதமாக வேலை செய்துகொண்டே போகும். நேற்று இட்லி என்றால் இன்றைக்குத் தோசை. நேற்று வெள்ளைச் சட்டை என்றால் இன்றைக்குக் கோடு போட்ட சட்டை. இப்படி மாற்றிக் கொண்டே இருப்பான். புதிது புதிதாகக் கண்டு பிடிப்பான்; புதிது புதிதாகச் செய்து பார்ப்பான். இந்தப் புது அறிவுதான் விலங்குபோல் இருந்தவனை நாகரிக மனிதனாக மாற்றியது. எப்படி மாறினான் என்று பார்ப்போமா?

ஆதியில் மனிதன் தானாக விளைந்த தானியத்தை உண்டான். அது வேண்டிய நேரத்தில் கிடைப்பதில்லை. வேண்டிய அளவும் கிடைப்பதில்லை. பார்த்தான்; தனக்கு

வேண்டியதைத் தானாகப் பயிர் செய்து கொண்டான். தன் கையே தனக்கு உதவி அல்லவா?

அன்று அவன் மலையிலும் மரத்திலும் வசித்தான். விலங்குகள் தொல்லை கொடுத்தன. அதனால் பாதுகாப்பான வீடு கட்டிக் கொண்டான்.

மானத்தைக் காக்கவும் குளிரைப் போக்கவும் தழை போதவில்லை. அதனால் அருமையான ஆடை நெய்து கொண்டான்.

மனிதன் தன் கருத்தை வெளியில் சொல்லத் தெரியாமல் இருந்தான்; ஏதாவது சொன்னாலும் உடனே காற்றில் கலந்து மறைந்து விடும்; அதனால் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டான்; எதையும் எழுதி வைத்தான். இப்படி கல்வி வளர்ந்தது.

அப்போது கற்களைத் தேய்த்தும் கட்டைகளைக் கொளுத்தியும் நெருப்பு மூட்டினான்; இப்போது மின் விளக்கு கண்டு பிடித்து விட்டான்; இதன்மூலம் இரவையும் பகலாக்கி விட்டான்.

காற்று இல்லாத நேரத்தில் முந்தி புழுங்கிக்கொண்டு இருந்தான். இப்போதோ மின்விசிறி 'கரகர' என்று சுற்று கிறது. மாமனார் வீட்டு மாப்பிள்ளை போல மனிதன் காற்று வாங்குகிறான்.

அப்போது வெளியூருக்குச் சேதி அனுப்ப வேண்டு மானால் ஆள் போக வேண்டும். வண்டி வசதி இல்லை. நீண்டநாள் பிடிக்கும். இப்போதோ அஞ்சல் (தபால்) கண்டு பிடித்திருக்கிறான். இன்னும் விரைவில் போக வேண்டுமா? தந்தி அடிக்கிறான். அது காலையில் அடித்தால் மாலையில் போய் விடுகிறது.

அது மட்டுமா? வானொலியில் பேசுகிறான். ஓர் இடத்தில் பேசினால் அது அப்போதே உலகம் முழுவதும் கேட்கிறது.

இவ்வளவுதானா? நன்றாய் இருக்கிறது! இன்னும் ஒன்று உண்டு. அது என்ன?

ஒருவன் ஓர் இடத்தில் பேசுகிறான். அவன் பேசுவதை உலகம் முழுவதும் கேட்கலாம் என்றோம். அது மட்டும் அன்று! அவனை அதே நேரத்தில் உலகம் எங்கும் பார்க்கலாம். இப்படி இப்போது புதிதாகக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இதற்கு "டெலிவிஷன்" (தொலைக்காட்சி) என்பது பெயர். இப்போது நிலா உலகிற்கே சென்று வந்து விட்டனர். ஆகா! என்ன புதுமை! என்ன புதுமை!! இறந்துபோன தாத்தா இப்போது வந்தால் இதை நம்பவே மாட்டார் – 'சத்திய'மாகவே நம்ப மாட்டார் – ஏதோ இது மாய மந்திரம் என்பார். ஆனால் இது முழு உண்மை. இதைக் கண்டுபிடித்த மனிதன் மூளையை என்ன என்று புகழுவது? நாமும் முயற்சி செய்தால் இன்னும் இதுபோல் எவ்வளவோ செய்யலாம்.

ஆதியில் விலங்குபோல் வாழ்ந்த மனிதன் இவ்வளவு தானா செய்தான்? இன்னும் பலே பலே காரியம் எல்லாம் செய்திருக்கிறான். அவன் குடும்ப வாழ்க்கையை எடுத்துக் கொள்வோமே!

விலங்கு இனத்தில் கணவன் மனைவி என்ற கட்டுப்பாடு உண்டா? இல்லை. இது போலவே ஆதி மனிதரும் இருந்தனர். இன்னான் மனைவி இன்னாள்; இன்னாள் கணவன் இன்னான் என்று கிடையாது. ஒருவனுக்கு ஒருத்தியே, ஒருத்திக்கு ஒருவனே என்ற கட்டுப்பாடும் இருக்கவில்லை. முரடர்கள் எளியவர் பெண்களைக் கற்பழித்து வந்தனர்.

இந்த விலங்கு வாழ்க்கையிலே யாருக்கு யார் தகப்பன் என்று முறை கண்டுபிடிக்க முடியுமா? குழந்தையை அக்கறையாக வளர்ப்பவர் யார்?

ஆனால் இப்படியே விட்டுவிடவில்லை. நாள் ஆக ஆகச் சிலர் இதில் கருத்தைச் செலுத்தினர்; ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தனர்; முறையாகப் பெண் கேட்டனர்; பெண் கொடுத்தனர். ஒழுங்கான குடித்தனம் நடத்தி வந்தனர்.

அதனால் இன்னானும் இன்னாளும் கணவன் மனைவி என்ற முறை ஏற்பட்டது. இன்னார் பிள்ளை இன்னார் என்று அறிய முடிந்தது. பிள்ளையை வளர்க்கும் அக்கறை பெற்றோருக்கு உண்டாயிற்று; பிள்ளைக்குக் கல்வி வேண்டுமே! ஆசிரியரைத் தேடினர்; அவரிடம் ஒப்படைத்தனர்; அவர் பொறுப்பாகக் கவனித்துக் கொண்டார்.

ஐயையோ! இங்கே இன்னொரு முக்கியமான சேதியை மறந்து விட்டோமே! அதையும் நினைவுக்குக் கொண்டு வர வேண்டும். அது என்ன?

மேலே பல நல்ல காரியங்கள் சொன்னோம். அவைகளை மனிதன் செய்தான். எப்படி செய்தான்? எந்தக் கால முதல் செய்தான்? செய்யும்படி யார் தூண்டினார்கள்? செய்வதற்கு என்ன வசதியிருந்தது? இந்த கேள்விகளுக்குப் பதில் தேவை. இது மிகவும் இன்றியமையாதது. இங்கேதான் பெரிய இரகசியம் புதைந்து கிடக்கிறது. அதை நாம் தோண்டி எடுக்க வேண்டும். எடுப்போம்.

ஆதியில் மனிதர் ஊர் ஊராகக் கூடி வாழவில்லை. காட்டுமிறாண்டிகளாகக் கண்ட இடங்களில் திரிந்து வந்தார்கள். ஒருவர்க்கு ஒருவர் ஒற்றுமை இல்லை. ஒருவரை ஒருவர் சாப்பிடப் பார்த்தனர். சொந்த நன்மையே

பெரிதாய்த் தெரிந்தது. பிறரைப் பற்றிக் கவலையே கிடையாது. இப்படி இருந்து வந்தார்கள். இப்போதும் ஒரு சிலர் இப்படி இருக்கிறார்கள் அல்லவா?

இதனால் வலியவன் மெலியவனை வாட்டி வதைத்தான். மெலியவன் பொருளை வலியவன் பறித்துக் கொண்டான். சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்கி விடுகிறது அல்லவா?

இது அப்போதே சிலருக்குப் பிடிக்கவில்லை. பெரிய மனம் படைத்த பெரிய மனிதர் அப்போதும் இருந்திருப்பார் அல்லவா?

பெரிய மனிதர்கள் ஒன்றுகூடினார்கள்; ஒரு வட்டாரத்தில் இருந்த மனிதரை எல்லாம் ஒன்று சேர்த்தார்கள்; ஒற்றுமையாக ஓர் இடத்தில் வாழவைத்தார்கள்; அந்த இடத்துக்கு ஒரு பேர் வைத்தார்கள். அது ஓர் ஊர் ஆயிற்று.

ஊர்மக்கள் தங்களுக்குள் ஒரு தலைவனை ஏற்படுத்தினர்; அவனுக்குத் துணையாக இன்னும் சிலரை அமர்த்தினார்கள். உள்ளூரில் யாராவது கலகம் செய்தாலும் சரி—வெளியூரார் யாராவது கலகம் செய்தாலும் சரி—அவர்களை அடக்கத் தலைவன் ஒரு படை அமைத்தான். இது மட்டுமா? இன்னும் எவ்வளவோ செய்தான்!

ஊரில் குற்றம் செய்பவரைக் கண்காணிக்கக் காவலரை (போலீசுகாரரை) நியமித்தான். குற்றவாளிகளைத் தண்டிக்க நீதிபதி ஏற்பட்டார். படிப்புச் சொல்லிக் கொடுக்க ஆசிரியர்; நோய் போக்க மருத்துவர்; இப்படி பல வசதிகள் ஏற்பட்டன. கூடி வாழாமல் மனிதர் தனித் தனியாய் வசித்தால் இந்த நன்மைகள் கிடைக்குமா? ஒற்றுமையின் பயன் இப்போது தெரிகிறதே!

இந்த விதமாக ஊர்த் தலைவன் ஊரை ஆண்டு வந்தான். அவனை அரசன் என்று மக்கள் அழைத்தனர். அரசரைப் பற்றி நாம் எவ்வளவோ கதைகள் கேட்டிருக்கிறோம் அல்லவா?

இப்படி பெரிய மனிதர் முயற்சியால் அரசன் தோன்றினான். அரசனால் அரசாங்கம் ஏற்பட்டது. அதன்மூலம் பல வசதிகள் கிடைத்தன. இந்தக் காலம் முதலே மனிதர் பல நல்ல காரியங்கள் செய்ய முடிந்தது.

இந்த விதமாக உலகத்தில் பல அரசர்கள் தோன்றினார்கள். பல அரசாங்கங்கள் தோன்றின. ஒவ்வொரு அரசருடைய நிலமும் ஒவ்வொரு நாடு என்று சொல்லப்பட்டது. தேசம் என்று சொல்லுவதும் உண்டு. ஒவ்வொரு நாட்டு அரசரும் மக்களும் ஒற்றுமையாய் வாழ்ந்தனர். தங்கள் தங்கள் நாட்டின்மேல் அளவு கடந்த பற்று கொண்டார்கள். இது யாருக்கும் இயற்கைதானே!

இன்னொன்றும் மனிதருக்கு இயற்கைதான். அதுதான் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்வது. அப்பாடா! உலகத்தில் அரசரோடு அரசர்கள் எத்தனையோ சண்டைகள் போட்டார்கள். எத்தனையோ உயிர்கள் மாண்டன. எவ்வளவோ ஊர்கள் அழிந்தன. எவ்வளவோ பொருள்கள் கெட்டன.

உலகத்தின் தலைவர்கள் ஒன்று கூடினார்கள். நமக்குத் தான் தெரியுமே! இப்போது முன்காலம் போல் அரசர்கள் இல்லை. மக்களே தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சட்டசபை உண்டு. இதில் உள்ள தலைவர்களும் அமைச்சர்களுமே நாட்டை ஆளுகிறார்கள் அல்லவா! இப்படியாக உள்ள பல நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கூடிப் பேசினார்கள். ஒரு சங்கம் ஏற்பட்டது. எங்கேயாவது சண்டை நடந்தால் இந்தச் சங்கம் கண்டிக்கும்; தடுக்கும்.

இதற்கு 'ஐக்கிய நாடுகள் சங்கம்' என்பது பெயர். இதன் முயற்சியால் எத்தனையோ சண்டைகள் நின்று விட்டன.

ஓர் ஊரார் ஒன்று சேர்ந்தாலே பல நன்மைகள் உண்டு. உலகத்தார் ஒன்று சேர்ந்தால் சொல்லவா வேண்டும்? சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போலத்தான்! அது சரி, இப்படியே சொல்லிக் கொண்டு போகிறோமே! பெரிய இரகசியத்தைக் கண்டு பிடிப்பது எப்போது?

ஆமாம்! ஆமாம்! இதோ வந்து விட்டோம். அங்கே கொண்டுபோய் விடும் பாதைதான் இது! பெரிய இரகசியத்தின் பக்கத்தில் நெருங்கிக் கொண்டே இருக்கிறோம்; நெருங்கியும் விட்டோம்.

இப்போது தெரியலாமே! ஒருவன் தன் கண்ணான பெண்ணைக் கட்டிக் கொடுப்பது எதற்கு? தன் உயிர்க்கு உயிரான பிள்ளையை ஆசிரியரை நம்பி ஒப்படைப்பது எதற்கு? போலீசுகாரர் ஏன்? நீதிபதி ஏன்? அதிகாரிகள் ஏன்? சட்ட சபை ஏன்? தலைவர்கள் ஏன்? அமைச்சர்கள் ஏன்?

இந்த ஏற்பாடுகள் இல்லாவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? மனிதன் மறுபடியும் விலங்கு வாழ்க்கைக்குப் போய்விடுவான். கண்டவன் மனைவியைக் கற்பழிக்க நினைப்பான். கணவன் மனைவி இல்லை. பெற்றோர் பிள்ளை இல்லை. குடும்பம் இல்லை. கல்வி இல்லை. இன்பம் இல்லை. துன்பம் துன்பமே!

இது மட்டுமா? ஒருவனை ஒருவன் அடிப்பான். பொருளைத் திருடுவான். பிறருக்கு உதவமாட்டான். தான் வாழ்ந்தால் போதும் என்று நினைப்பான். தன் வசதிக்காகப் பிறரைக் கெடுப்பான். இப்படி நடக்கும். கேட்டுக்

கேள்வி ஏது? தடி எடுத்தவன் தண்டல்காரன் – அவ்வளவு தான்! போலீசா? அரசாங்கமா? யார் கேட்பது? ஏன் – இப்போதும் சிலர் இப்படி இருக்கிறார்கள் அல்லவா?

எனவே, இப்போது இரகசியம் புரியலாம் என்று நினைக்கிறேன். பெண்ணைப் பிறன் ஒருவனுக்குக் கொடுப்பது – பிள்ளையை ஆசிரியரிடம் ஒப்படைப்பது - தண்டிக்கும் காவலர்கள், நீதிபதிகள், அரசர்கள், அரசு அலுவலர்கள் ஏற்பட்டது - இந்த ஏற்பாட்டை எல்லாரும் ஏற்றுக்கொண்டது – புதிது புதிதாய்ப் பல பொருள்களைக் கண்டுபிடித்து ஒருவர்க்கு ஒருவர் உதவிக்கொள்வது - முதலியன எல்லாம், மக்கள் குழுவிற்குள்-(சமுதாயத்திற்குள்) ஒருமித்து ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவேயாகும். இதுதான் 'மக்கள்குழு (சமுதாய) ஒப்பந்தம்' எனப்படும். இது இன்னும் பெரிய அளவில் வளர்ச்சி பெற்று, உலகில் பசி, பிணி, பகை, போர், களவு முதலிய தீமைகள் இன்றி, உலகம் நலத்தோடும், வளத்தோடும் வாழவேண்டும். அப்போதுதான், முழு சமுதாய ஒப்பந்தம் உருப் பெற்றதாகவும் வெற்றி பெற்றதாகவும் கருதப்பெறும்.

உலகில் உள்ள உயிர் இனங்களுள் மக்களும் ஓர் இனம் – மேலும் உயர் இனம். ஓர் உயிர் இனத்தின் இயல்பு அந்த உயிர் இனம் முழுமைக்கும் இருக்கக்கூடும். ஒரு பாம்பு ஒருவரைக் கடித்ததால் அவர் இறந்து விடின், அந்தப் பாம்பினம் முழுமைக்கும் நஞ்சு உண்டு என்று நம்பப்படும். ஒரு வாழைமரம் கனி தரின், அந்த இனத்து மரங்கள் அனைத்தும் கனி தரும் என்று நம்பலாம். இவ்வாறே, ஒரு மனிதன் தீமைகள் செய்யின், மற்ற மனிதர்களும் தீமை செய்யக் கூடியவர்கள் என்று ஏன் எண்ணக்கூடாது? பெரும்பாலார் செய்கிறார்களே! ஒரு சிலரே சூழ்நிலை வன்மையால் தீமை செய்யாமல் நன்மை செய்கின்றனர். ஒருவரது

வாழ்வு-தாழ்வில் மற்ற மக்களுக்கும் பங்கு உண்டு என்ற கொள்கை உருவாகி நம்பப்பட வேண்டும். இதற்காகத் தான் பெரியவர்கள், பிறர்க்கு உதவிசெய்ய வேண்டும் என்று வற்புறுத்திச் சென்றுள்ளனர்.

திருவள்ளுவரையே எடுத்துக் கொள்வோமே. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மணந்துகொண்டு குடும்பம் நடத்துவது பிறர்க்கு உதவி செய்வதற்கே யாம்-ஒருவர் முயன்று உழைத்து ஈட்டும் பொருள் எல்லாம் பிறர்க்கு உதவி செய்வதற்கேயாம் - என்றெல்லாம் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

" இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு". (81)

" தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு". (212)

என்பன திருவள்ளுவரின் குறள் பாக்கள். திருவள்ளுவர் இந்த அளவோடு விட்டாரா என்ன? கடவுள் தலைமேலும் கைவைத்துள்ளார்! உலகில் ஒருவன் இரந்தாவது (பிச்சை எடுத்தாவது) உயிர்வாழ நேர்ந்தால், இந்த உலகத்தைப் படைத்த கடவுள் அலைந்து திரிந்து அழிந்து போவானாக! - என்று உணர்ச்சி மேலிட்டுக் கூறியுள்ளார்:

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்" (1062)

என்பது குறள். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியார் இதனினும் பெரிய ஓர் அணுகுண்டைப் போட்டுள்ளார்:

பலர்க்கும் கிடைக்க வேண்டிய உணவை – நலத்தை ஒருசிலர் மட்டும் அகப்படுத்திக் கொண்டு வாழும் வஞ்சக

நிலைக்கு இனி இடம் இல்லை; ஒருவர் பல வகையில் வருந்தும்போது இன்னொருவர் அவருக்கு வேண்டியவற்றைச் செய்யாமல் வாளா பார்த்துக் கொண்டிருக்கும் வழக்கத்திற்கு இனி இடம் இல்லை; எனவே, இனி ஒரு விதி (சட்டம்) உண்டாக்குவோம்; அந்த விதியை எப்போதும் போற்றிக் காப்போம்; அதாவது: எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வழிவகுக்க வேண்டும். தனி ஒரு மனிதனுக்கு உணவு கிடைக்கவில்லையெனினும் உலகக் கூட்டுறவால் என்ன பயன்? - இந்த உலகத்தையே அழித்து விடவேண்டும்-என்று கொதித்துக் கூறியுள்ளார் பாரதியார். இவரது பாடல் பகுதியைப் பார்ப்போமே!

"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனி உண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி உண்டோ?
இனியொரு விதி செய்வோம் — அதை
எந்த நாளும் காப்போம்;
தனி யொருவனுக்கு உணவு இலையெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்பது பாரதியாரின் 'அணுகுண்டுப்' பாடல் பகுதி. இதுகாறுங் கூறியவற்றால் உலக மக்கள் அனைவரும் வளத்தோடும் நலத்தோடும் வாழ அனைவரும் ஆவனபுரிய வேண்டும்; இதுதான் மக்கள் குழு ஒப்பந்தம் - சமுதாய ஒப்பந்தம் ஆகும் - என்பது தெளிவு.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே"
— தாயுமானவர் பாடல்

"தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"
— திருக்குறள்

# 2. ஆறும் ஊரும்

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது ஔவை மொழி. உலகில் உள்ள ஊர்கள் எல்லாம் ஆற்றங்கரையிலேதான் உள்ளனவா? அல்ல. மற்ற ஊர்களினும் ஆற்றங்கரை ஊர்கள் பல்வகை வாய்ப்புகள் மிகப்பெற்றவை என்பது கருத்து.

**மருதம் :**

உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவற்றுள் நீரும் உணவும் முதன்மையானவை. நீர் இன்றி உணவுப்பொருள் இல்லை. எனவே, நீர் தாழ்ந்த நிலப்பகுதியிலே பண்டை மக்கள் நிலையாக உறைவிடம் அமைத்துத் தங்கலானார்கள். வானம் பார்த்த மண் பூமியினும் குளங்குட்டைகள் நிறைந்த பகுதி மேலானது. அதனினும், ஊற்றுக் கேணிகளும் ஏரிகளும் மிக்க பகுதிகள் முறையே மேலானவை. அவற்றினும், ஆற்றங்கரைப் பகுதிகள் மிகவும் மேலானவை. ஆற்றங்கரைப் பகுதிகளிலேயே, நெல் போன்ற உயர் பொருள்கள் விளையும் நன்செய் வயல்கள் உருவாகிப் பரந்து கிடக்கும். இந்த வயல் சார்ந்த பகுதிக்கே 'மருத நிலம்' என்பது பெயர்.

காடு சார்ந்த முல்லைநிலக் கொல்லைகளைவிட, மலை சார்ந்த குறிஞ்சிநிலப் புனங்களைவிட, கடல் சார்ந்த நெய்தல்நிலக் கானலைவிட, ஆற்றங்கரை சார்ந்த மருத நில நன்செய் வயல்களே மிக்க விலை மதிப்புடையவை. இதன் காரணம் அனைவருக்கும் விளங்கும்.

எனவேதான், ஆற்றங்கரைகளில் மக்கள் உறைவிடங்களை அமைத்துக் கொண்டனர். ஆங்கே நிலம் பெறமுடியாதவர்கள், வேறு இடங்களில் உறைவிடம் அமைத்துக் கொண்டு அவ்வம் மண்ணில் விளைந்தனவற்றை உண்டு வாழ்ந்து வந்தனர். வேறிடத்து மக்களினும், ஆற்றங்கரை மக்களே வாழ்க்கை வசதியிலும், கல்வி-கலைத்துறையிலும், நாகரிகத்திலும் மிகச் சிறந்திருந்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை.

**ஊர் :**

மக்கள் வாழும் குடியிருப்புக்களை, தமிழில் ஊர், புரம், பேட்டை, பாளையம், பாக்கம், பட்டினம், பதி, நகர், சேரி, பூண்டி, அகரம், குடி, குறிச்சி, வேலி, பாடி, குப்பம், சாவடி, பட்டு, பட்டி, கோட்டம், கோட்டை, கிராமம், வலசு, மங்கலம், கோயில், பள்ளி, கரை, துறை, மலை, கானல், காடு, குளம், ஏரி, தோப்பு, நாடு, குடிசை, சத்திரம், சமுத்திரம் முதலிய பெயர்களால் நாம் அழைக்கிறோம். இதனை,

* "பாக்கம், பட்டினம், பதி, நகர், சும்மை,
பூக்கம், சேரி, புரம், முட்டம், பூண்டி,
அகரம், குடியே, குறிச்சி, கோசரம்,
அகலுள், நொச்சி, இருக்கை, வேலி,
குப்பம், பாடி, குறும்பு, பாழி,
சிறுகுடி, தண்ணடை, உறையுள், எயிலொடு,
வாழ்க்கை, உட்படுத்து இருபத் தேழும்
நாடில் 'ஊர்' என நவின்றிசி னோரே"

"பட்டும், நொச்சியும், பள்ளியும் சிற்றூர்"

---

* சேந்தன் திவாகரம் – இடப் பெயர்த் தொகுதி – நூற்பா : 88, 94.

முதலிய திவாகர நூற்பாக்களாலும், உலக வழக்குப் பெயர்களாலும் அறியலாம்.

இப்பெயர்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக 'ஊர்' என்னும் பெயரே உலக வழக்கில் தலைமை தாங்குகிறது. நாம் புதியவர் ஒருவரைக் கண்டால், "உங்கள் ஊர் எந்த ஊர்?" என்று கேட்கிறோமே தவிர, "உங்கள் பட்டி எந்தப் பட்டி?" என்றோ; "உங்கள் பாக்கம் எந்தப் பாக்கம்?" என்றோ கேட்பதில்லை. கதை சொல்பவர்கள்கூட, 'ஒரே ஓர் ஊரிலே' என்று தொடங்குகிறார்களே யொழிய, 'ஒரே ஒரு குப்பத்தில்' என்றோ, 'ஒரே ஒரு புரத்தில்' என்றோ தொடங்குவதில்லை. ஓர் இடத்தைக் குறிப்பிடுவதானாலும், 'மன்னார்குடி என்னும் ஊரிலே' என்று குறிப்பிடுகிறார்களேயன்றி, 'மன்னார்குடி என்னும் சேரியிலே' என்றோ, 'மன்னார்குடி என்னும் பாளையத்திலே' என்றோ குறிப்பிடுவதில்லை. எனவே, 'ஊர்' என்னும் பெயர், மக்கள் குடியிருப்புக்களின் பொதுப் பெயர் என்பது புலனாகும். முற்கூறிய திவாகர நூற்பாவிலும்,

> "பாக்கம், பட்டினம்......இருபத் தேழும்
> நாடில் 'ஊர்' என நவின்றிசி னோரே"

என, பாக்கம். பட்டினம் முதலிய இருபத்தேழும் 'ஊர்' என்னும் பொதுப் பெயராலேயே சுட்டப்பட்டுள்ளமை காண்க.

இவ்வாறு, முல்லை நிலத்துக் குடியிருப்பாகிய பாடி, குறிஞ்சி நிலக் குடியிருப்பாகிய குறிச்சி, நெய்தல் நிலக் குடியிருப்பாகிய பட்டினம் முதலிய எல்லா - நிலத்துக் குடியிருப்புக்களையும் குறிக்கப் பயன்படும் 'ஊர்' என்னும் இப் பொதுப் பெயர், பண்டைக் காலத்தில், ஆற்றங் கரையை அடுத்த - நன்செய் வயல்கள் நிறைந்த மருத

நிலத்துக் குடியிருப்புக்களைக் குறிக்கவே பயன்படுத்தப் பட்டது. ஆயிரமாயிரம் ஆண்டுகட்குமுன், 'ஊர்' என்றால் ஆற்றங்கரை வயல் வளம்மிக்க மருதநிலக் குடியிருப்பு என்றுதான் பொருள். ஆற்றுக்கும் ஊருக்கும் உள்ள தொடர்பினை, தொல்காப்பிய - பொருளதிகார - அகத் திணை யியலிலுள்ள,

*"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"

என்னும் நூற்பாவின் உரை விளக்கத்தில், உரையாசிரியர் நச்சினார்க்கினியர் வரைந்துள்ள,

"முல்லைக்கு நீர் : கான்யாறு (காட்டாறு); ஊர்: பாடியும் சேரியும் பள்ளியும். குறிஞ்சிக்கு நீர்: அருவியும் சுனையும்; ஊர் : சிறுகுடியும் குறிச்சியும். மருதத்திற்கு நீர் : யாற்று நீரும் மனைக்கிணறும் பொய்கையும்; ஊர்: ஊர்கள் என்பனவேயாம். நெய்தற்கு நீர் : மணற்கிணறும் உவர்க்குழியும்; ஊர் : பட்டினமும் பாக்கமும். பாலைக்கு நீர் : அறுநீர்க் கூவலும் சுனையும்; ஊர் : பறந்தலை."

என்னும் உரைப்பகுதி நன்கு வலியுறுத்தும். மற்ற நிலத்துக் குடியிருப்புகளுக்கெல்லாம் தனித்தனிப் பெயர்கள் குறித்துள்ள ஆசிரியர், மருதநிலத்துக் குடியிருப்புக்கு மட்டும் 'ஊர்கள் என்பனவேயாம்' என 'ஊர்' என்னும் பெயரையே குறிப்பிட்டுள்ளமை காண்க. மற்றும், ஊரைக் கொண்டுள்ள மருதநிலத்திற்கே 'ஆற்றுநீர்' உரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் ஈண்டு இணைத்து நோக்கற் பாலது. இதனை, நாற்கவிராசநம்பி இயற்றிய 'அகப் பொருள் விளக்கம்' என்னும் நூலில் உள்ள,

---

* தொல் - பொருள் - அகம் - நூற்பா ; 18

"இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்......
பெருகிய சிறப்பின் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிணறு இலஞ்சி......
வருபுன லாடல் மருதக் கருப்பொருளே"†

என்னும் நூற்பாவும், மற்றும் பல்வேறு இலக்கிய ஆட்சிகளும் மேலும் உறுதி செய்யும்.

ஆறும் ஊரும் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பைக் கண்டறியவே இவ்வளவு வழி கடந்துவர வேண்டியிருந்தது. நாம் மேற்கொண்ட இந்தச் சிறிய ஆராய்ச்சியிலிருந்து, பழங்கால மக்கள் ஆற்றங்கரைப் பகுதியையே மிகவும் நாடினர் என்பதும், ஆற்றங்கரைக் குடியிருப்புகளே ஊர்கள் என அழைக்கப்பட்டன என்பதும், நாளடைவில் ஒரு நிலத்துக் குடியிருப்பைக் குறிக்கும் பெயர்கள் மற்ற நிலத்துக் குடியிருப்புகளையும் மாறிக் குறிக்கலாயின என்பதும் தெள்ளிதின் விளங்கும். மற்றும் இவ்வாராய்ச்சியிலிருந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத குறிப்பாவது. ஆற்றங்கரை ஊர்களே வாழ்க்கைக்கு வசதியான உறையுள்களாகும் என்னும் கருத்து. இதனை, திவாகர நிகண்டில் உள்ள,

* "பூக்கம், கொடிக்காடு, பூரியம், உறையுள்,
பாக்கம், அருப்பம், அகலுள், பதியே,
கோட்டம், வசதி, தாவளம், நியமம்
வாழ்க்கை, தண்ணடை, மருதநிலத்து ஊர்ப்பெயர்"

என்னும் நூற்பா தெளிவாகத் தெரிவிக்கிறது. ஆற்றங்கரை வயல் வளம் மிக்க மருதநிலத்துக் குடியிருப்புக்களைக்

---

† அகப்பொருள் விளக்கம் - அகத்திணையியல் - நூற்பா : 23.

* சேந்தன் திவாகரம் - இடப்பெயர்த் தொகுதி-99.

குறிக்கும் மேலுள்ள பெயர்களுள் உறையுள், வசதி, வாழ்க்கை என்னும் பெயர்கள் ஈண்டு விதந்து குறிப்பிடத் தக்கன. இம்மூன்று பெயர்களும் மருதநிலத்து ஊர்களே உறைவதற்கு ஏற்றவை - வசதியானவை - தங்கி வாழ்தற்கு உரியவை என்னும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றன வன்றோ?

**ஆற்றங்கரை ஊர்கள்:**

கைப்பூணுக்குக் கண்ணாடி எதற்கு? ஆற்றங்கரை ஊர் களின் வாழ்க்கை வசதிச் சிறப்பை, இலக்கிய இலக்கணங் களிலிருந்து சான்று காட்டித்தானா மெய்ப்பித்தாக வேண்டும்? இந்தக் காலத்து மக்கள் நேரிலே வாழ்ந்து பார்த்தே தெரிந்து கொண்டிருக்கிறார்களே!

இந்தக் காலத்தில் என்றென்ன - அந்தக் காலத்திலும்- எந்தக் காலத்திலும், வசதியான ஆற்றங்கரை வாழ்க்கையி லிருந்தே, கலை - கல்வி - நாகரிக வளர்ச்சிகள் தோன்றின- தோன்றும் என்னும் கொள்கைக்கு அடிப்படையிடவே இத்தனை சான்றுகள் பயன்படுத்தப்பட்டன.

எகிப்திய நைல் ஆற்றங்கரையிலும், மெசபட்டோமியா வின் (இராக்) யூப்ரடீசு, டைக்ரீசு என்னும் ஈராற்றங்கரை களிலும் (மெசபட்டோமியா என்பதற்கு, இரண்டு ஆறு களுக்கு இடைப்பட்ட இடம் என்பது பொருள்), இந்தியத் துணைக் கண்டத்தின் சிந்து ஆற்றங்கரை வெளியிலும் மாபெரும் வரலாற்றுப் புகழ் படைத்த நாகரிகங்கள் தோன்றியிருந்தமை உலகறிந்த உண்மையன்றோ? உலகின் பெருநகரங்கள் பல ஆற்றங்கரைகளில் அமைந்திருப்பதும் ஈண்டு எண்ணத்தக்கது.

பிரிட்டிசுப் பேரரசின் முதல் பெரிய நகரும் தலைநகரு மாகிய இலண்டன் நகரம். 'தேம்சு' (Thames) என்னும் ஆற்றின் கரையில்தானே உள்ளது! அதே பேரரசின் இரண்டாவது பெரிய நகரமாயிருந்ததும், பிரிட்டிசு இந்தியாவின் முதல் தலைநகராய்த் திகழ்ந்ததும், இப்போது இந்தியப் பேரரசின் முதல் பெரிய நகரமாய் விளங்குவது மாகிய கல்கத்தா நகரம், 'ஃஊக்ளி' (Hooghly) என்னும் ஆற்றின் கரையில்தானே அமைந்துள்ளது! ஆற்றல் அனைத்தும் படைத்துள்ள அமெரிக்கப் பேரரசின் முதல் தலைநகராயிருந்ததும் முதல் பெரிய நகராயிருப்பதுமாகிய நியூயார்க் நகரம் 'பாசேயிக்' (Passaic) என்னும் ஆற்றின் கரையில்தானே உள்ளது! இவை மட்டுமா? 'சாங்காய்' (சைனா), 'ராட்டர் டாம்' (ஃஆலந்து), 'ஃஆம்பர்கு' (செர்மனி), 'நியூ ஆர்லியன்சு' (லுய்சியானா), 'போனசு அயர்சு' (அர்செண்டினா) முதலிய பெருநகரங்கள் பலவும் ஆற்றங்கரைகளில்தானே அமைந்து திகழ்கின்றன!

சோழர்களின் தலைநகராய்த் திகழ்ந்த உறையூரும் புகாரும் காவிரியாற்றங் கரையிலும், பாண்டியரின் தலை நகராய் விளங்கிய மதுரை வைகையாற்றங் கரையிலும் அமைந்திருப்பதும் ஈண்டு ஒப்பிட்டு எண்ணற்பாலது.

மேற்கூறிய கல்கத்தா, இலண்டன், நியூயார்க் முதலிய உலகப் புகழ்பெற்ற மாபெரு நகரங்கள் ஆற்றங்கரைகளில் அமைந்திருக்கும் ஒன்றினோடு அவற்றின் பெருமை நின்று விடவில்லை. அவை, மிகப் பெரிய ஆற்றங்கரைத் துறை முகங்களும் உடையவை. இந்தியா பிற நாடுகளுடன் புரியும் வாணிகத்தில் மூன்றில் ஒரு பங்கு, ஆற்றங்கரையில் அமைந்துள்ள கல்கத்தா துறைமுகத்தின் வாயிலாகத்தான் நடக்கிறதாம். இலண்டன், நியூயார்க் முதலிய துறைமுகங் களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

**தெய்வத் தன்மை**

இவ்வாறு உழவு, வாணிகம், போக்குவரவு, குடிநீர் முதலிய பலமுனைத் திட்டங்களுக்குப் பயன்படுவதாலேயே ஆற்றங்கரைகளில் நகரங்கள் தோன்றி நாகரிகங்களை உருவாக்கின. ஆறுகள் தம் வளங்களால் மக்களை வளர்ப் பதனாலேயே, அவற்றைத் தெய்வத் தாயாக மதித்துப் போற்றி மக்கள் வழிபடுகின்றனர். ‘கங்கையம்மா, காவிரித் தாயே’ என்றெல்லாம் நம் மக்கள் அன்னையென, அழைத்து வழிபட, ஆப்பிரிக்க ‘நைல்’ ஆற்றங்கரை மக்களோ, ‘எங்கள் அப்பன் நீலன்’ என்பதாக ஆற்றை அப்பன் என அழைத்துப் போற்றுகின்றனராம்.

தமக்கு வேண்டிய வளங்களை வள்ளலென வற்றாது வாரிவழங்கும் ஆறுகளைத் தெய்வத்தன்மை உடையனவாக மதித்த மக்கள், அவ் வாறுகளிலே நீராடுவதிலும் அவற்றின் கரைகளிலே திருக்கோயில் எடுத்து இறை வழிபாடு செய்வதிலும் பேரின்பம் கண்டதோடு, அச் செயல்களைப் பெரிய அறமாகவும் கருதினர். *‘ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்’ என்று ஔவைப் பிராட்டி அருளிய அமிழ்த மொழியின் அருமை இப்போது புலனாகுமே!

---

* நல்வழி : 24.

# 3. திருநாவலூர்

**பாடல் பெற்ற பதி:**

ஒரு சிற்றூர் - மிக மிகச் சிறிய ஊர்; அங்கே, விரல் விட்டு எண்ணுமளவில் ஒருசில வீடுகள் – அவற்றிலும் கூரை வீடுகளே மிகுதி; ஒரு புறத்தே பாழடைந்த ஒரு சிறு கோயில் – பக்கத்தே தூர்ந்துபோன ஒரு குளம் – இவையே உள்ளன.

எனினும், இத்தகைய சிற்றூர், மாடமாளிகை கூட கோபுரம் நிறைந்த ஒரு மாபெரு நகரினும் பெரும் பெயர் பெற்றுப் பலருடைய வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியதா யிருப்பதுமுண்டு. அந்த ஊரை அத்தகைய பெருமைக்கு உரியதாக்கும் ஆற்றல் தமிழ்ப் பாடலுக்கு உண்டு. வேறு எத்தகைய வளங்களாலும் நலங்களாலும் ஓர் ஊருக்குக் கிடைக்கமுடியாத பெருமை, நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்றுள்ள தமிழ்ப் பாடல்களால் கிடைத்திருப்பது உலகறிந்த உண்மை. இந்தப் பேறு பெற்றுள்ள ஊர்கள் 'பாடல் பெற்ற பதிகள்' என்று பாராட்டப் பெறுகின்றன. இந்தப் பதிகளுள் திருநாவலூர் மிகவும் குறிப்பிடத்தக்கது.

சைவத் திருப்பதிகளுள் சீர்காழி தவிர, மற்ற பதிகட்கில்லாத தனிப்பெருஞ் சிறப்பு திருநாவலூர்க்கு உண்டு. எந்தப் பதியும், புராணங்களும் சிற்றிலக்கியங்களும் அருணகிரியாரின் திருப்புகழும் இன்னபிறவும் பெற்றிருப்பினும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் என்னும் தேவார ஆசிரியர் மூவருள் ஒருவரது தேவாரப்

பதிகப்பாடல் பெற்றிருந்தாலேயே 'பாடல்பெற்ற பதி' என்னும் பாராட்டுப் பெயருக்கு உரிய முழுத்தகுதியும் உடையதாக மதிக்கப்பட்டு வருகிறது.

**திருநாவலூர்:**

தேவார ஆசிரியர்கள் மூவருள் நாவுக்கரசர் பிறந்த ஊர் திருவாமூர்; ஞானசம்பந்தர் தோன்றியது சீர்காழி; சுந்தரரை ஈன்றெடுத்தது திருநாவலூர். இவற்றுள் திருவாமூர்க்குத் தேவாரப் பாடல் கிடைக்கவில்லை. சீர்காழிக்கும் நாவலூர்க்கும் உள்ளன. திருநாவலூர் தான் பெற்ற சுந்தரராலேயே பாடப்பெற்றுள்ளது. பல பதிகள்மேலும் தேவாரம் பாடிய சுந்தரரை ஈன்றதன் வாயிலாக, தன்னைப் போலவே வேறு பல ஊர்களையும் 'பாடல் பெற்ற பதிகள்' என்னும் பாராட்டுக்கு உரியதாக்கிய தனிப்பெருஞ் சிறப்பு திருநாவலூர்க்கு உண்டல்லவா?

ஒரு காலத்தில் முனையரையர் மரபு மன்னர்களின் தலைநகராயிருந்ததும் இப்போது திருநாவலூர் ஊராட்சி மன்ற ஒன்றியத்தின் தலைநகரா யிருப்பதுமாகிய திருநாவலூர், தென்னார்க்காடு மாவட்டத்திற்குள் திருக்கோயிலூர் வட்டத்தில், 'தென்கங்கை' யென்று திருநாவுக்கரசர், சேக்கிழார் முதலிய பெருமக்களால் சிறப்பித்துப் பாடப் பெற்றுள்ள 'கெடிலம்' ஆற்றின் வடகரையில் உள்ளது. கடலூரிலிருந்து திருக்கோவிலூருக்குச் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் (State Highways) பேருந்து வண்டியில் பயணம் செய்பவர்கள், பண்ணுருட்டிக்கு மேற்கே 11 கி.மீ. தொலைவில், அந் நெடுஞ்சாலையிலிருந்து தென்புறமாக ஒரு மாவட்டக் குறும்பாதை (District Road) பிரிவதைக் காணலாம். அங்கிருந்து அப்பாதை வழியே 3 கி.மீ. தொலைவு சென்றால் திருநாவலூரை அடையலாம். பேருந்துப் பாதையை ஒட்டினாற்போல ஊரும், சிவன்

கோயிலும் உள்ளன. புகைவண்டியில் வருபவர்கள், விழுப்புரம்-திருச்சி குறுக்குப் பாதையில் (Chord line) உள்ள 'பரிக்கல்' என்னும் நிலையத்தில் இறங்கித் தென்கிழக்காக 3 கி.மீ. சென்றால் நாவலூரைக் கண்டு களிக்கலாம்.

**பெயர்கள்:**

பண்டு நாவல்மரம் நிறைந்திருந்ததால் 'நாவலூர்' என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நாம் வாழும் இந்தியத் துணைக்கண்டத்திற்கு 'நாவலந் தீவு' என்னும் பெயருண்மை ஈண்டு ஒப்புநோக்கற் பாலது. (சுமார்) 2,500 மக்கள்தொகை கொண்ட இவ்வூர், மக்களின் பேச்சு வழக்கில் 'திரு நாம நல்லூர்' என்றே பெருவாரி யாகக் குறிக்கப்படுகிறது. 'இராசாதித்தபுரம்' என்னும் பெயரும் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

**நாவலூரரார் நால்வர்:**

சைவ உலகில் திருநாவலூரார் மிகமிக இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் நால்வர் பிறந்து வாழ்ந்த ஊர் நாவலூர். இத்த கைய சிறப்பு வேறு எந்தப் பதிக்கும் இல்லையன்றோ? எந்த நாயன்மார் நால்வராவார்: சுந்தரமூர்த்தி நாயனார், அவருடைய தந்தை சடைய நாயனார், தாய் இசைஞானி யார், சுந்தரரை எடுத்து வளர்த்தவரும் நாலலூர்ப் பகுதியை ஆண்டவருமாகிய நரசிங்க முனையரைய நாயனார் - என்பவராவர். இந்த நாவலூரில் பிறந்ததால் சுந்தரர்க்கு 'நாவலூரரர்' என்ற பெயரும் உண்டு.

சைவ உலகிற்கு நாயன்மார் அறுபத்துமூவரையும் உருவாக்கியளித்தவர் சுந்தரர் என்று சொன்னால் மிகை யாகாது. திருத்தொண்டத்தொகை என்னும் பதிகத்தில், நாயன்மார் அறுபத்து மூவரையும் தொகுத்துப் பாடியதன்

வாயிலாக அறுபத்து மூவரின் வரலாற்றை உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை சுந்தரர்க்கே உரியது — இல்லையில்லை. அவரை ஈன்றெடுத்த திருநாவலூர்க்கே உரியது.

**ஊர்களுக்குள் உயர்ந்தது:**

ஓர் ஊரோ, ஒரு நாடோ, இயற்கை வளத்தாலோ அல்லது செயற்கை வளத்தாலோ பெருமை பெறுவதில்லை- அங்கே பிறந்து வாழும் பெருமக்களாலேயே பெருமை பெறும் என்னும் கருத்து முற்ற முடிந்த முடிவு. திருநாவுக்கரசரும், சுந்தரரும் பிறந்ததால் நாடுகளுக்குள் சிறந்த நாடு திருமுனைப்பாடி நாடு என்று ஆன்றோர் பலரும் அறிவித்துள்ளனர். சேக்கிழார் பெரியபுராணத்தில்,

'மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு'.

எனத் திருமுனைப்பாடி நாட்டைச் சிறப்பித்துள்ளார். சிதம்பரநாதமுனிவர் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணத்தில்,

† 'அன்னநாட்டினில் ஆலால சுந்தரர் உதிப்ப
என்னையாள் வெண்ணெய் நாயகர் தடுத்தினி
தாண்டார்'...
நாட்டின் மேம்படுந் திருமுனைப் பாடிநா டென்றே
ஏட்டின் மன்னிய காப்பியக் கவிகளே
யிசைக்கும்.'

என்று புகழ்ந்துள்ளார். புலவர் வரந்தருவார் வில்லிபாரதத்தின் பாயிரச் செய்யுளில்,

---

* பெரியபுராணம் - திருநாவுக்கரசர் - பாடல் 11.

† திருப்பாதிரிப்புலியூர் புராணம் - திருநாட்டுப் படலம்: 103, 104.

"தேவரும் மறையும் இன்னமுங் காணாச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநாடு இந்தநன் னாடு'.

என நாவுக்கரசரும் சுந்தரரும் பிறந்துள்ள பெருமையைக் குறிப்பிட்டுப் புகழ்ந்துள்ளார். சுந்தரர் பிறந்ததால் திருமுனைப்பாடி நாடு நாடுகளுக்குள் சிறந்ததென்றால், அந்நாட்டினுள் அவர் பிறந்த திருநாவலூர் ஊர்களுக்குள் உயர்ந்தது என்னும் உண்மை சொல்லாமலே விளங்குமே. சுந்தரரை ஈன்றளித்ததின் வாயிலாக நாவலூர் நாட்டிற்கே பெருமை தேடித் தந்துள்ளதே!

**தலைநகர்த் தகுதி :**

பெரியோர்களைப் பெற்றெடுத்த பெருமையுடன் தலைநகர்த் தகுதியும் திருநாவலூர்க்கு இருந்தது. நாடுகளுக்குள் சிறந்தது திருமுனைப்பாடி நாடு என ஆன்றோர்கள் அறிவித்துள்ளதை முன்னர்க் கண்டோம். அந்தத் திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராகத் திருநாவலூர் ஒரு காலத்தில் திகழ்ந்தது. கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டளவில், 'முனையதரையர்' என்னும் அரச மரபைச் சார்ந்த நரசிங்கமுனையரையர் என்னும் மன்னர் திருமுனைப்பாடி நாட்டை ஆண்டதாகவும் அவர் சுந்தரரைத் 'தத்து' எடுத்து வளர்த்ததாகவும் சேக்கிழார் பெரிய புராணத்தில் தெரிவித்துள்ளார்.

* "தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி
நாடாளும் காவலனார் நரசிங்க முனையரையர்"

---

* பெரியபுராணம் – நரசிங்கமுனையரையர் – 1.

† "நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல்கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பினாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற்கேற்ப அன்பினால் மகன்மை கொண்டார்".

என்பன பெரியபுராணப் பாடல்கள். இது வெற்றுப் புராணச் செய்தி மட்டுமன்று; திருநாவலூர் மக்களும் வாழையடி வாழையாகச் செவிவழியறிந்து வைத்து இச் செய்தியைத் தெரிவிக்கின்றனர். சுந்தரரும் தமது தேவாரத்தில்,

"நாதனுக்கு ஊர் நமக்கு ஊர்நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயும்ஊர் அணிநாவலூர்"

என்று நாவலூர்க்கும் நரசிங்க முனையரையர்க்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மற்றும், முனையரையர் மரபினர் 'நரசிங்கன்', 'இராமன்' என்னும் இரு பட்டப்பெயர்களையும் மாறி மாறி வைத்துக்கொண்டு 'நரசிங்க முனையரையர்', 'இராம முனையரையர்' என மாறி மாறி அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த நரசிங்கன், இராமன் என்னும் பெயர்களை, திருநாவலூர் வட்டாரத்து மக்கள் மிகுதியாய் வைத்துக்கொள்வதாகத் தெரிகிறது. இதனாலும் முனையரையர் மரபினர்க்கும் நாவலூர் வட்டாரத்திற்கும் இருந்த நெருங்கிய உறவு அறியப்படும். இச்செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயின், திருநாவலூர் வட்டாரமே, நரசிங்கமுனையரையரின் தலைநகராய் இருந்

† பெரியபுராணம் – தடுத்தாட்கொண்ட புராணம்-5.

திருக்கக்கூடும் என நுனித்துணரலாம். இதற்குத் தக்க சான்று வேறு ஒன்றும் கூறமுடியும்.

திருநாவலூாரில் சிவன் கோயிலுக்கு எதிரேயுள்ள சிறிது மேடான நிலப்பகுதியை அவ்வூர் மக்கள் 'கச்சேரிமேடு' என அழைக்கின்றனர். 'கச்சேரி' என்பது அரசனது திருவோலக்க அவையைக் குறிப்பதாகும். அவ்விடத்தில் அரசவை கூடி அரசவினைகள் ஆராயப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அங்கே அரசவை கூடிற்றென்றால் அப்பகுதி தானே அரசனது தலைநகராய் இருந்திருக்கக் கூடும்? எனவே, நரசிங்கமுனையரையர் சுந்தரரை 'மகன்மை' (சுவீகாரம்) கொண்ட செய்தியைக்கொண்டும், 'கச்சேரி மேடு' என்னும் பழைய வழக்காற்றுப் பெயரைக் கொண்டும், திருநாவலூார் நரசிங்கமுனையரையரின் தலைநகரா யிருந்திருக்க வேண்டும் என உய்த்துணரலாம்.

நரசிங்கமுனையரையர் நலமும் வளமும் பெருக நாடாண்ட மாண்புடன், கனிந்த இறையன்பு மிக்கவராயும் திகழ்ந்தார். சிவன்பால் இவருக்கு இருந்த ஈடுபாடு வியத்தற் பாலது. இவர் திங்கள்தோறும் திருவாதிரை நாளில் சிவனுக்குச் சிறப்பு விழா நடத்தினார். அந்நாளில் வரும் சிவனடியார் அனைவர்க்கும் பொற்காசு பரிசளிப்பது இவர் வழக்கமாம். இத்தகு சிவத்தொண்டால் இவர் சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராக வைத்து வழிபடப் பட்டு வருகிறார். திருநாவலூார்க் கோயிலில் நரசிங்க முனையரையர்க்கு உருவச்சிலை உள்ளது. உலோகத்தாலான இந்தச் சிலை காண்பதற்கு மிகவும் கவர்ச்சியாயிருக் கிறது.

**சிவன்கோயில் :**

பாடல்பெற்ற திருநாவலூார்ச் சிவன் கோயிலின் பெயர் கள்; பக்தசனேசுவரர் கோயில், திருத்தொண்டீச்சுரம்,

இராசாதித்தேசுரம் என்பனவாம்; இறைவன் பெயர்கள்; நாவலேசுரர், பக்த சனேசுவரர் என்பன; அம்மன் பெயர்கள்: சுந்தரவல்லி, சுந்தரநாயகி, மனோன்மணி என்பன; கோயில் மரம் அதாவது தலவிருட்சம் நாவல் மரமாகும்.

இக்கோயில் சுந்தரரின் தேவாரப் பதிகம் பெற்றது; அதில் பதினொரு பாடல்கள் உள்ளன. இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் மேல் அருணகிரி நாதர் திருப்புகழ் ஒன்று பாடியுள்ளார். எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டளவில் சுந்தரரின் தேவாரப் பாடல் பெற்ற இப்பதி, ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே திருநாவுக்கரசின். தேவாரப் பாடலிலும் வைப்புப் பதியாக இடம் பெற்றுள்ளது. நாவுக்கரசர் தமது தேவாரத்தில் – பூவனூர்த் திருக்குறுந்தொகை எட்டாம் பாடலில்,

"பூவ னூர்தண் புறம்பயம் பூம்பொழில்
நாவ லூர்நள் ளாறொடு நன்னிலம்
கோவ லூர்குட வாயில் கொடுமுடி
மூவ லூருமுக் கண்ணனூர் காண்மினே".

என நாவலூரைக் குறிப்பிட்டுள்ளார். நாவுக்கரசர் நாவலூரின்மேல் தனிப்பதிகமும் பாடியேயிருப்பார். அது கிடைக்கவில்லை. அவர் பதிகங்கள் பல கிடைக்கவில்லை என்பது வரலாறு கண்ட உண்மை. பிற்காலத்தில் திருவெண்ணெய்நல்லூர் இராசப்பநாவலர் என்னும் புலவர் இவ்வூர்மேல் புராணம் ஒன்று பாடியுள்ளார். இந்தத் திருநாவலூர்ப் புராணத்தில் ஒன்பது பாகங்கள் உள்ளன. மொத்தச் செய்யுட்கள்: 514.

இவ்வாறு பல்வேறு பாடல்களைப் பெற்றுள்ள திருநாவலூர்ச் சிவன்கோயில் பார்த்து மகிழத்தக்கது. கிழக்கு நோக்கியுள்ள இக்கோயிலின் முதற் பெருவாயிலின்

மேல் பெரிய கோபுரம் எடுப்பாக நிற்கிறது. கோபுரத்திற்கு எதிரேயுள்ள மேட்டுப்பகுதி 'கச்சேரிமேடு' எனப்படுகிறது. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பே இக்கோயில் பல்லவ மன்னர்களின் பணிகளைப் பெற்றிருந்தது. பத்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் - அதாவது கி.பி. 935-ஆம் ஆண்டளவில், சோழப் பெருவேந்தன் முதல் பராந்தக சோழன் ஆண்டுகொண்டிருந்தபோதே, அவன் மூத்த மகன் இராசாதித்த சோழன் திருநாவலூர்க் கோயிலின் உட்பகுதியைக் கருங்கல்லால் கட்டுவித்தான். அவனது திருப்பணியைப் பெற்றதனால் இக்கோயிலுக்கு 'இராசாதித்தேசுரம்' என்னும் பெயரும் சூட்டப்பட்டது. அன்று திருநாவலூர் இராசாதித்தனது மேற்பார்வையில் இருந்ததால், 'இராசாதித்தபுரம்' எனவும் அழைக்கப்பட்டது. திருநாவலூர் ஒரு காலத்தில் தலைநகர்த் தகுதி பெற்றிருந்தது என்பதற்கு இஃதும் ஒரு சான்று. தந்தை பராந்தக சோழனது மேலாட்சியின் கீழ், மகன் இராசாதித்த சோழன் திருநாவலூரைத் தலைநகராகக் கொண்டு திருமுனைப் பாடி நாடு என்னும் நடுநாட்டுப் பகுதியைக் கண்காணித்து வந்திருக்க வேண்டும் என இதனால் உய்த்துணரலாம்.

இராசாதித்த சோழன் 944-ஆம் ஆண்டில், இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணதேவனைத் தக்கோலம் என்னும் இடத்தில் பொருது முறியடித்தான். ஆனால் முறியடித்த அன்றிரவே, இராட்டிரகூட மன்னனின் மைத்துனனாகிய அங்க குலத்துப் பூதுகன் என்னும் பூதராசன் சூழ்ச்சியினால் இராசாதித்தனைக் கொன்று விட்டான். *இந்தச் செய்தி பல கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. இராசாதித்தனுடன் தக்கோலம் வரை போர்புரியச் சென்ற படைமறவர்களும் தானைத்தலைவர்

---

* இந்திய சாசனங்கள்: தொகுதி 5 – பக்கம் 167; தொகுதி 6 – யக்கம் 51; தொகுதி 7 – பக்கம் 195

களும் தங்கள் மாமன்னனை இழந்து வறிதே திரும்பி வருகையில், இராசாதித்தனால் கட்டப்பட்ட திருநாவலூர்க் கோயிலில், இறந்துபோன அவன் பெயரால் பல திருவிளக்குகள் ஏற்றுவதற்கு அறக்கட்டளைகள் ஏற்படுத்திச்சென்றதாகப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருநாவலூர்ப் பெரிய கோயிலுக்குள், சிவன்கோயில் பகுதிக்கும் அம்மன்கோயில் பகுதிக்கும் இடையில் வரதராச பெருமாள் கோயில் இருப்பது குறிப்பிடத்தக்கது. சிதம்பரம் போல் திருநாவலூரிலும் சிவன்கோயில் எல்லைக்குள் பெருமாள் கோயிலும் இருப்பது 'ஒருவனே தேவன்' என்னும் பேருண்மையை விளக்குகிறதன்றோ? அடுத்து, மற்ற ஊர்க் கோயில்களில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கும் ஆலமர் செல்வனாம் தட்சணாமூர்த்தி இவ்வூர்க் கோயிலில் நின்ற கோலத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றும், கோயிலில் உள்ள பல்லவர் காலச் சிற்பங்கள் பலவும் பார்த்து மகிழத்தக்கன.

பெரிய கோயிலின் தென்கிழக்கு மூலையில் சுந்தரர் - பரவையார் - சங்கிலியார் ஆகியோர்க்கு ஒரு தனிக்கோயில் உள்ளது. இம்மூவர்க்கும் கோயிலில் மிக மிக அழகிய உலோக உருவச்சிலைகளும் உள்ளன. சுந்தரர் என்றால் சுந்தரரேதான் - அவரது சிலை அவ்வளவு சுந்தரமாக - அழகாகக் காட்சி தருகிறது.

இங்கே ஆண்டுதோறும் ஆவணி - உத்திரநாளில், தமது பாடலால் ஊருக்கும் கோயிலுக்கும் ஒருசேரப் பெருமை தேடித் தந்த சுந்தரரின் பிறந்தநாள் விழாவும், ஆடி-சுவாதி நாளில் அவர் வீடுபேறுற்ற நாள் விழாவும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சுந்தரர் பிறந்த மனை

இது என இன்றும் திருநாவலூாரில் ஒரு மனை சுட்டிக் காட்டப் படுகிறது. அந்த மனை கோயிலுக்கு வடபுறமாக மிக அணித்தே உள்ளது. அந்த மனையில் சுந்தரர் பெயரால் இப்போது ஓர் அழகிய 'நினைவு மாளிகை' கட்டப்பட்டுள்ளது.

திருநாவலூரில் பல்வேறு மரபு மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன. ஏறக்குறைய 105 கல்வெட்டுகளுக்கு மேல் இதுவரையும் கிடைத்துள்ளன. அக்கல்வெட்டுகளால் திருநாவலூரைப் பற்றிப் பல செய்திகள் தெரிந்துகொள்ளலாம்.

**சுந்தரர் தமிழ்:**

இறுதியாக, திருநாவலூரைப் பாடல் பெற்ற பதியாக உயர்த்திய சுந்தரரின் தேவாரப் பதிகத்திற்கு வருவோம். இப்பதிகத்திலுள்ள பதினொரு பாடல்களில் முதல் பத்தின் இறுதியிலும்,

'நாவலனார்க் கிடமாவது நம்திரு நாவலூரே'.
'நாயகனார்க் கிடமாவது நம்திரு நாவலூரே'.
'நடமாடியார்க் கிடமாவது நம்திரு நாவலூரே'.

என்பதாக, இன்றவனுக்கு இடமாவது திருநாவலூர் எனக் கூறி முடித்துள்ளார் சுந்தரர். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'நம் திருநாவலூர்' எனச் சுந்தரர் திருநாவலூரை உரிமை கொண்டாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறிய தமிழ் மரபில் வந்த பெரியார் சுந்தரராலும் ஊர்ப்பற்றை விடமுடியவில்லை போலும்! இவற்றிற்கெல்லாம் முடிமணியாகச் சுந்தரர் இறுதிப்பாடலாகிய பதினோராம் பாடலில்,

" நாதனுக்கு ஊர் நமக்கு ஊர் நரசிங்க
முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயும் ஊர் அணிநாவலூர்
என்று
ஓதநற் றக்கவன் றொண்டனா ரூரன் உரைத்த
தமிழ்
காதலித் துங்கற்றும் கேட்டவர் தம்வினை
கட்டறுமே".

என, நாவலூர் கடவுளுக்கும் ஊர் – தமக்கும் ஊர் என்று குறிப்பிட்டுள்ளார். ஆரூரன் என்னும் பிள்ளைமைப் பெயருடைய சுந்தரர், பாடலின் இறுதியில், தாம் உரைத்த தமிழைக் காதலிப்பவர் - கற்பவர் – கேட்டவர் தீவினைகள் கட்டறும் எனத் தெரிவித்துள்ளார். சுந்தரர் தமது பாடலைத் 'தமிழ்' என்னும் தண்ணிய பெயரால் சுட்டியிருப்பதும் அந்தத் தமிழைக் காதலித்துக் கற்கவேண்டும் எனக் குறிப்பிட்டிருப்பது மாகிய பான்மை வியத்தற்கும் நயத்தற்கும் உரியது. திருநாவலூரைப் 'பாடல் பெற்ற பதி' என்னும் பாராட்டுக்கு உரியதாக்கிய 'சுந்தரர் தமிழ்' வாழ்க!

# 4. தே நாட்டுப் புறம்!

**நாடும் நகரமும்:**

'தே நாட்டுப் புறம் - தே பட்டிக்காடு' என்றெல்லாம், நகரில் வாழும் கணவன், சிற்றூரிலிருந்து மணந்து கொண்டு வந்த தன் மனைவியை நோக்கிக் கேலியாக - விளையாட்டாக - வேடிக்கையாக அழைத்ததை நான் கேட்டிருக்கின்றேன். அதே நேரத்தில், மனைவி கணவனை நோக்கி, "நாங்கள் பட்டிக்காடாய் இருந்தால் போகிறது - நீங்கள் தான் டவுன்காரராயிருங்களேன் - நீங்கள் சாப்பிடும் உணவு தானியங்கள் நாட்டுப் புறத்திலிருந்துதான் வந்தாக வேண்டும் - இல்லாவிட்டால் தெரியும் உங்கள் நகர வாழ்க்கை" - என்று கூறியதையும் செவியுற்றிருக்கிறேன்.

'நெல்லு காய்ச்சி மரம்' (நெற்பயிர்) அறியாதார் சிலரும் உள்ள நகரங்களில் இப்போது நாட்டுப் புற இயலுக்குக் 'கிராக்கி' ஏற்பட்டிருக்கிறது; நாட்டுப் புற இயல் பல்கலைக் கழகப் பாடமாகவும் ஆராய்ச்சிப் பட்டத்திற்கு உரிய ஆய்வுப் பொருளாகவும் ஆட்சி புரிகிறது.

சிற்றூர் (கிராமத்து) மக்களையும் அவர்தம் பழக்க வழக்கங்களையும் நடைமுறைகளையும் இழிவாக எண்ணிய நகர மாந்தர் பலர், தாம் எண்ணி வந்த இழிவு நிலையை இப்போது ஒரு கலையாக மதிக்கத் தொடங்கி விட்டனர். அது குறித்துக் கட்டுரைகளும் நூல்களும் எழுதுதலும் கருத்தரங்கு நடத்துதலும் ஆராய்ச்சி செய்தலும் இன்று நடைபெற்று வருகின்றன.

**பட்டிக்காட்டானும் யானையும்:**

'பட்டிக் காட்டான் யானை கண்டாற் போல'-என்னும் பழமொழி, நிலைமையைத் தலைகீழாக மாற்றிக் காட்டு கிறது. கிராமத்தானைக் காட்டான் - பட்டிக் காட்டான் என நகரத்தார் குறிப்பிடுவது வழக்கத்தில் உள்ளது. தொடக்கத்தில் மக்கள் அனைவரும் காட்டில் வாழ்ந்தவர் களேயாவர். இக்கால நாகரிகம் இல்லாதாரைக் 'காட்டு மிறாண்டிகள்' என்று குறிப்பிடும் வழக்காறு ஈண்டு எண்ணத் தக்கது. பண்டைய காட்டுவாழ் மக்கள், காட்டில் சில பகுதிகளை வெட்டி வீடுகள் கட்டிக் குடியமர்ந்தனர். இந்தப் பகுதிகள் பின்னர் நகரங்கள் என்னும் பெயர் பெற்றன. 'காடு வெட்டி சோழன்' என்னும் பெயர்க் காரணமும், 'என்ன - அவர் காட்டை வெட்டி மலையைக் கட்டி விட்டாரா?' என்னும் வழக்காறும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கன. நாளடைவில் நாகரிகம் பெற்ற நகர மக்கள், காடுகளிலும் காடுகள்போல் மரங்கள் செறிந்துள்ள சிற்றூர்களிலும் வாழும் மக்களைக் காட்டான் - காட்டுப் புறத்தான் - பட்டிக் காட்டான் - என்றெல்லாம் அழைக்கலாயினர்.

இப்போதுள்ள கிராமப் புறங்களில் யானைகள் இருப்ப தில்லை. நகர்ப் புறங்களில் நடைபெறும் விழாக்கட்கும் சிறப்பு நிகழ்ச்சிகட்கும் யானைகள் கொண்டுவரப் படுகின் றன. 'சர்க்கசு' என்னும் ஆட்டமும் நகர்ப் புறங்களில் நடைபெறுகிறது. இதனால் நகர்ப்புற மக்கள் யானையைக் காணும் வாய்ப்பை அடிக்கடி பெறுகின்றனர். கிராமத் தாருக்கு இந்த வாய்ப்பு அவ்வளவாக இல்லை. அவர்கள், நகர்ப்புற நிகழ்ச்சிகளில் இடம் பெற்றுள்ள யானைகளை வியப்புடன் நோக்குகின்றனர். இதைத்தான், 'பட்டிக் காட்டான் யானை கண்டாற்போல்' - என்று குறிப்பிடும்

பழக்கம் ஏற்பட்டுவிட்டது. காட்டு யானையைக் காட்டான் வியப்புடன் பார்க்கிறான் என்றால் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என்பது புலனாகிறதன்றோ?

**"பிக்னிக்":**

'பட்டிக் காட்டான் யானை கண்டாற்போல' என்னும் பழமொழிக்கு ஏட்டிக்குப் போட்டிபோல், இக்காலத்தில் நகர்ப் புறத்தினர், நாட்டுப் புறங்களை வியப்புடன் நோக்கி மகிழ்கின்றனர். பேரிரைச்சலுடனும் புழுதி-புகையுடனும் எள்விழ இடம் இல்லாமல் பாதைகளில் பல்வேறு வண்டிகள் ஊர்ந்து செல்லும் நகரங்களில் வாழ்ந்து அலுப்பு தட்டியவர்கள், ஓரிரு நாளைக்கு நாட்டுப் புறத்தில் வந்து தங்கி மகிழ்ந்து சமைத்து உண்டு பொழுது போக்குவதற்குப் 'பிக்னிக்' (Picnic) என்னும் பெருமையான பெயர் தந்துள்ளனர். நாட்டுப் புறத்தின் அமைதியான - இயற்கையான சூழ்நிலை அந்த அளவுக்கு அவர்களைக் கவர்ந்து விடுகிறது.

**காட்சிகள்:**

சில சிற்றூர்களில் ஒரு பகுதியில் உயரமான மரங்களும் உயரமான கோபுரம் கொண்ட கோயிலும் பக்கத்தில் குளமும் இருப்பது அழகுக்கு வளம் ஊட்டுகிறது; வேறொரு பகுதியில் நீர் தாழ்ந்த தாமரைத் தடாகமும் கரையில் நிழல் தாழ்ந்த மரங்களும் ஊர்ப் பொதுக் குழு மண்டபமும் இருப்பது மேலும் அழகுக்கு அழகு செய்கிறது. கிராமத்தில் உள்ள சிறிய பள்ளிக் கூடப் பிள்ளைகளின் இரைச்சலும் ஏற்றப் பாட்டும் உழவுப் பாடலும் கைத்தொழில்களின் ஒலியும் இன்ன பிறவும் அமைதிக்கு ஊறு செய்வதாய்த் தோன்றாமல், அமைதிக்கு மெருகு ஊட்டுவதாக - நயஞ் சேர்ப்பதாக உள்ளன. கிராமப் புறத்தை அணி செய்வதில் ஆடு மாடுகளின் மந்தைகட்கும் உரிய இடம் உண்டு.

உழவர்கள் கீழ் உடை மட்டும் உடுத்து ஏர் - கலப் பையைத் தோளில் சுமந்து கொண்டு மாடுகளை வயலுக்கு ஓட்டிச் செல்லும் காட்சி உள்ளத்திற்கு உவகை ஊட்டும். வயல் புறங்களில், பச்சடி வகைகள் - ஊறுகாய் வகைகள்-வறுவல் பொரியல் வகைகள் - பல்வகைக் காய்கறிப் பதார்த்த வகைகள் - பழ வகைகள் - பல்வகைச் சோறுகள் (சித்ரான்னங்கள்) - பருப்பு - கூட்டு-குழம்பு-சாறு வகைகள்-கட்டித் தயிர், புத்துருக்கு நெய் - அப்பளம் பப்பளம்-புலவு பிரியாணி-இனிப்பு வகைகள்-வடை பாயசம் - கிரஷ், பாதாம்கீர், காபி, தேநீர் முதலிய குடிவகைகள் - இன்ன பிற ஆரவார உணவு வகைகளுள் யாதொன்றும் இன்றி, பழைய சோறோ - கஞ்சியோ - கூழோ - கணவனும் மனைவியும் குழந்தையும் சேர்ந்துகொண்டு உட்கொள்ளும் காட்சி ஒரு வகையில் இரங்கத் தக்கதாயினும் இயற்கையோடியைந்த இன்பக் காட்சியாகும்.

சிலர் இடுப்பில் கட்டவேண்டிய துணியைத் தலையில் சுற்றிக் கட்டிக் கொண்டு வெறுங் கோவணத்தோடு வேலை செய்வதற்கு என்ன பெயர் சொல்வதென்று புரியவில்லை. துணியை இடுப்பில் கட்டாமல் தலையில் கட்டிக் கொண்டால், துணி சேறு புழுதி முதலியவற்றால் அழுக்காகாமல் இருக்கும் - நடமாடி வேலை செய்வதற்கு இடைஞ்சல் இல்லாமல் வசதியாயிருக்கும் - எல்லாவற்றிற்கும் மேலாக, தலையை வெயில் தாக்காமல் இருக்கும் - போதிய உடை வசதியும் இல்லாதிருக்கலாம் - இன்னபிற காரணங்களால் கோவணாண்டிகள் காட்சி கொடுக்கின்றனர். இவையெல்லாம் நகர்ப்புற 'மைனர்'கட்குப் புரியாத புதிர்களாகும்.

**பழக்க வழக்கங்கள் :**

சிற்றூர் மக்கள் கள்ளங்கபடின்றி ஒருவரோடொருவர் கலந்து பழகும் முறை மிகவும் இனியது. ஒருவரையொருவர்

பெயர் சொல்லி அழைக்காமல், தம்மினும் வயதில் பெரியவரை, 'என்ன மூத்தவரே - என்ன இளையவரே - என்ன நடுவிலவரே' என்றும், தம்மினும் வயதில் சிறியவரை, 'என்ன மூத்தவனே - என்ன இளையவனே - என்ன நடுவிலவனே' என்றும் குறிப்பிடுவது ஒருவகைச் சொல்லின்பமாகும்.

நகர்ப்புறங்களில் ஒருவர் மற்றொருவரைக் காண அவர் வீட்டிற்குச் சென்றால், தெரு வாயில் கதவு திறந்திருந்தாலும் உள்ளே நேரே போவதில்லை; கதவருகில் நின்றுகொண்டு 'சார்-சார்' (Sir-Sir) என்றோ, 'மொசியே-மொசியே' (Monsieur-Monsieur) என்றோ கூவிக்கொண்டு கதவை மெல்லத் தட்டுவர். அழைப்புமணி (Calling Bell) இருப்பின், அதன் பொத்தானை அழுத்துவர். உள்ளே இருப்பவர் மிக-மிக-மிக-மிகப் பெரிய மனிதரா யிருப்பின், 'ஐயா வேலையாயிருக்கிறார்-ஐயா தூங்குகிறார்-இப்போது பார்க்க முடியாது-அப்புறம் வாருங்கள்' என்ற பதில் வந்தாலும் வரலாம். நடுத்தரப் பெரிய மனிதராயிருப்பவர், தெரு வாயிற்படி வரையும் வந்து தெருக் குறட்டிலேயே நிற்கவைத்துப் பேசி அனுப்புவதும் உண்டு; அல்லது அந்தப் பெரிய மனிதருக்குக் கால் நோகுமென்றால், வந்தவரைத் தெருத் திண்ணையில் அமரச்செய்து தாமும் அமர்ந்துகொண்டு பேசி அனுப்புவதும் உண்டு. சிறிய பெரிய மனிதராயிருந்தால், தெருக் கதவிற்கு உள்ளே நடையிலோ அல்லது அதற்கும் உள்ளே தாழ்வாரத்திலோ அமரவைத்துப் பேசி அனுப்புவதுண்டு. சமமானவராயின், நடுக்கூடத்தில் நாற்காலியில் அமர்வித்துப் பேசுவதுண்டு. இவையெல்லாம் நகர்ப்புற 'நவ' நாகரிகங்கள் ஆகும்.

நாட்டுப்புறங்களில் இந்த நிலைமையைக் காண முடியாது. ஒருவர் மற்றொருவர் வீட்டிற்குள் நேரே நுழைந்து,

'என்ன மூத்தவரே-என்ன இளையவரே-என்ன செய்கிறாய்'-என்று குரல் கொடுத்துக் கொண்டே மூத்தவரோ-இளையவரோ இருக்கும் இடத்திற்கு நேரே சென்றுவிடுவார். மூத்தவரும் இளையவரும், வந்தவரை, வாடா தம்பி - வாப்பா, வா மூத்தவரே-வா இளையவனே என்று சொல்லி உட்கார்ந்தபடியே வரவேற்பார். இப்படி ஒருவர் மற்றொருவர் வீட்டிற்குள் செல்வது அடுப்பங்கரை வரையில் இருக்கும். 'என்ன நடுவிலவரே - சாப்பிடுகிறாயா?' என்று கேட்டுக்கொண்டே அடுப்பங்கரைக்குள் நுழைந்துவிடுவார்.

சிலர் மூத்தவரிடமோ - இளையவரிடமோ வெற்றிலை கேட்பதே ஒரு தனிக்கலை; மூத்தவரே அரைக்கோடு வெற்றிலை கொடு என்பார். ஒருகோடு என்றால் முழு வெற்றிலை; அரைக்கோடு என்றால் அரை வெற்றிலை. வந்தவர் மூத்தவரிடம் முழு வெற்றிலை கேட்காமல் பாதி வெற்றிலை மட்டும் கேட்பது, மூத்தவருக்கு மிகுந்த தொல்லை தரக் கூடாது-செலவு வைக்கக் கூடாது என்ற பரந்த நோக்கத்தால் அன்று; வந்தவர் எப்பொழுதுமே ஒரு தடவையில் பாதி வெற்றிலைக்குமேல் போட்டுக் கொள்ளும் பழக்கம் கிடையாது. மூத்தவரும் முழு வெற்றிலையைப் பாதிப் பாதியாகக் கிழித்துத்தான் வைத்திருப்பார். இன்னும், ஒரு வாய்க்கு 'நாலாவது' கொடு என்று கேட்பதும் உண்டு. நாலாவது என்பது, வெற்றிலை-பாக்கு-சுண்ணாம்பு ஆகிய மூன்றையும் வாய்க்குள் போட்டுக் கொண்ட பின்பு நாலாவதாகப் போட்டுக்கொள்ளும் வாய்ப் புகையிலையாகும். நீங்கள் - வாங்கள் - போங்கள் எனச் சிறப்புப் பன்மை இராது. நீ-வா-போ என 'ஏக வசனம்' எனப்படும் ஒருமை வழக்காறே இருக்கும். இவையெல்லாம் ஒருவகைக் கிராமப் பாங்கு ஆகும்.

**மூட நம்பிக்கைகள் :**

மூட நம்பிக்கைகளைப் பொறுத்த வரையிலும் நாட்டுப் புறத்திற்கும் நகர்ப்புறத்திற்கும் வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. இரு வகையினரும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தாமே! வேற்றுமை கூறவேண்டுமெனில், நகர்ப் புறத்தினும் நாட்டுப்புறத்தில் மூடநம்பிக்கை உடையவர் களின் விழுக்காடு கூடுதலாயிருக்கும்-அவ்வளவே! அல்லது, இவர்களிடம் இல்லாத மூடநம்பிக்கைகள் சில அவர்களிட மும், அவர்களிடம் இல்லாத மூடநம்பிக்கைகள் சில இவர் களிடமும் இருக்கலாம். மற்ற ஊர்களினும், சென்னை நகரில் சில வகை மூடநம்பிக்கை உடையவர்களின் எண்ணிக்கை மிகுதி.

கல்வியறிவாலும் அறிவியல் வளர்ச்சியாலும் அயல் நாடுகளின் தொடர்பாலும் இப்போது மூடநம்பிக்கைகள் குறைந்து வருகின்றன. கிராமங்களிலும் கற்றோர் பெருகு வதாலும் நகரத் தொடர்பினாலும் சில மூடநம்பிக்கைகள் குறைந்து வருகின்றன. கணவன் பெயர், மாமனார்-மாமியார் பெயர்கள், கொழுந்தனார்-மூத்தார் பெயர்கள்-இன்னும் சிலரின் பெயர்களையும் சொல்லாத கிராமத்துப் பெண்டிருள் சிலரும் இக்காலத்தில் சொல்லத் தயங்குவ தில்லை. பழநி, மதுரை, சிதம்பரம், விருத்தாசலம், திருப்பதி, அண்ணாமலை போன்ற பெயர்களை உடைய ஆடவர் களின் மனைவியர், இந்த ஊர்கட்குப் பயணச்சீட்டு (டிக்கட்) வாங்குவதில் பட்ட இடர்ப்பாடும் சீட்டு விற்பவரின் திணற லும் இப்போது பழங்கதையாகி வருகின்றன. முருகையன், முருகேசன், முருகசாமி, முருகவேள் என்னும் பெயர்களை உடைய ஆடவருள் சிலரின் மனைவியர், முருங்கை என்ப தின் தொடக்கத்தில் 'முரு' என்பது இருப்பதால், முருங்கைக் கீரையை 'மரத்துக்கீரை' என்றே சொல்வதுண்டு. சட்ட நாதன், சட்டையா என்னும் பெயரினரின் மனைவியர்,

சட்டை என்று சொல்லாமல் 'சொக்கா' என்று சொல்லும் பழக்கம் இன்னமும் இருக்கிறது.

**கலைகள் :**

கிராமத்துச் சிறு கைத்தொழில் ஒவ்வொன்றும் ஒரு கலையாக ஆராய்ச்சியாளரால் இன்று மதிக்கப் பெறுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய கலைஞர்கள் இருப்பர். பூசாரி, புரோகிதர், சலவையாளர், முடி திருத்துவோர், தச்சர், பொற்கொல்லர், கருமார், மருத்துவர், குயவர் முதலிய தொழிற்கலைஞர்கள் இருப்பர். சில ஊர்களில் நெசவாளரும் உண்டு. எல்லா ஊர்களிலும் உழவர்கள் உளர் என்று சொல்லத் தேவையில்லை. உழவுத் தொழிலில் ஆண்டான் - அடிமை முறை முன்பு மிகுதியாக இருந்தது; இப்போது குறைவு. ஏன் - நகரங்களிலும், அரசு அலுவலர்களுள் மேலாளர், கீழாளர்களின் குடுமிகளைப் பிடித்துக் குலுக்குவது இருக்கத்தானே செய்கிறது!

தெருக்கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு, கரகம், சிலம்பம், கும்மி, கோலாட்டம், பொய்க்கால் குதிரை முதலிய கலைகளின் பிறப்பிடம் நாட்டுப் புறங்களே. மேடை நாடகங்களும் (டிராமா) திரை ஓவியங்களும் (சினிமா) தோன்றியும், தெருக் கூத்துகளும் கண்ணை-மூஞ்சைக் காட்டிக் கொண்டுதான் உள்ளன. கிராம மக்களிடமிருந்தும் மலை - காடு வாழ் பழங்குடி மக்களிடமிருந்தும் பிறந்த பல்வகைத் தொழில் பாடல்களும் நாடோடிப் பாடல்களும் நகரத்தார் பலர் அறியாதவை. நாட்டுப் புறங்களிலே நடைபெறும் விளையாட்டுகள் பல, நகரங் களின் தார் போட்ட பாதைப் பகுதிகளில் நடைபெற முடியாதனவாகும். நாட்டுப்புற விளையாட்டுகள் நகரத் தார் பலருக்குத் தெரியமாட்டா. ஆனால், நகரங்களில் நடைபெறும் புதுவகைப் பந்தாட்டங்கள் சில, நாட்டுப் புறங்களிலும் நடைபெறத் தொடங்கியுள்ளன.

**பரிமாற்றம் :**

"அண்டத்தில் உள்ளவை பிண்டத்திலும் உள்ளன" என்பதுபோல, இக்காலத்தில், நகர்ப்புறத்தில் உள்ளவை நாட்டுப் புறத்திலும், நாட்டுப் புறத்தில் உள்ளவை நகர்ப் புறத்திலும் பரிமாற்றம் பெறுகின்றன. இன்னும் சில பல ஆண்டுகளில் இரு வேறிடங்களும் ஒன்றுபோல் ஆகிவிடலாம். நாகரிக வளர்ச்சியும் அறிவியல் முன்னேற்றமும் பொருளாதார உயர்வும் இன்ன பிறவும் இதற்குத் துணை புரியும்.

மற்றுமொரு வேற்றுமையும் மறையலாம். அதாவது, நாட்டுப் புறம் என்பது சொந்த நாட்டு உணர்வாகிய 'தேசியம்' சார்ந்ததென்றும், நகர்ப்புறம் என்பது அயல் நாட்டு இறக்குமதி நாகரிகம் சார்ந்ததென்றும் எண்ணக் கூடிய மாறுபட்ட நிலைமை மறைந்து இரண்டும் நெருங்கி வந்து ஒன்றுபோல் ஆகலாம்.

என்ன இருந்தாலும், இன்னும் நாட்டுப் புறத்தில் ஒரு சார் மக்களிடையே காணப்படும் 'தே' என்னும் வழக்காறு மறையவில்லை. ஆண் பெண்ணை நோக்கியோ - பெண் ஆணை நோக்கியோ, 'ஏன் தே - என்ன தே - எப்போ தே வந்தே - எப்பொ தே கொடுப்பே'—என்னும் 'தே' வழக்காறு, இனி நாளடைவில் மறையலாம். இதுபோல் இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம்.

**ஆராய்ச்சிப் பயன்:**

சரி. நாட்டுப் புற ஆராய்ச்சியின் முற்ற முடிந்த பயன் எதுவாக இருக்க வேண்டுமெனில், இரு வேறு இடங்களும் எல்லா வாய்ப்பு வசதிகளையும் பெற்றுச் சமமான மகிழ்ச்சி யுடன் வாழக் கூடிய வளர்ச்சி நிலைதான். இதற்கு, நகர்ப் புறப் படிப்பாளிகள் - செல்வர்கள் ஆகியோரின் உதவி ஒத்துழைப்பு மிகவும் வேண்டும்.

நாட்டுப் புறத்தினரை நகர்ப் புறத்தினர் மட்டமாக மதித்துக் கேலி செய்யும் வழக்கம் இன்றும் உள்ளது. பாதையில் செல்லும் மாட்டு வண்டிக்காரரை, பேருந்து (பஸ்) ஓட்டுபவர் மட்டமாகத் திட்டுவதைக் கேட்கலாம். இதுபோன்ற நிலைமைகள் மாற வேண்டும். மருத்துவர் (டாக்டர்) போன்ற படிப்பாளிகள் - அரசு அலுவலர்கள் ஆகியோருள் சிலர், கிராமப் புறங்கட்குச் சென்று பணி புரியத் தயங்குகின்றனர். இதற்கும் முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். தொழில் துறைகட்குச் செல்வர்கள், துணைபுரிய வேண்டும். மக்களுக்குப் போதுமான கல்வி யறிவு நல்க வேண்டும். மற்றும் புத்துலகச் செய்திகளை நாட்டுப் புறத்தினர் புரிந்துகொண்டு செயல்படச் செய்ய வேண்டும்.

நாட்டுப் புற இயலை ஆய்ந்து எழுதப்படும் சில நூல்கள், ஒரு வகைக் கடினமான அறிவியல் நூல்களைப் போல், புரிந்து கொள்ள முடியாத சொற்களாலும் வாக்கியங்களாலும் கருத்துகளாலும் அமைந்துள்ளமை வியப்பாயிருக்கிறது. இந்த நூல்களும் எளிமைப் படுத்தப் படவேண்டும்.

இனி, 'தே நாட்டுப் புறம்' என்னும் வழக்காற்றிற்கு இடம் இல்லாதபடி, நகர்ப்புற இயலோடு நன்முறையில் ஒத்து நாட்டுப் புற இயலும் வளர்க - வாழ்க!

**குறிப்பு :**

இந்தக் கட்டுரை, நாட்டுப்புற இயல் தொடர்பான எந்த ஒரு தலைப்பையும் சிறப்பாக எடுத்துக் கொள்ளாமல் பொதுவாக எழுதப்பட்டுள்ளது — ஆசிரியர்.

# 5. பிணியின்மை

'பிணியின்மை' என்னும் தொடரைத் திருக்குறளில் காணலாம்.

" பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" (738)

என்பது குறள். மக்கள் பிணியில்லாமல் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதை 'மருந்து' என்னும் தலைப்பில் வற்புறுத்தியுள்ள வள்ளுவனார், இந்தக் குறளில் நாட்டிலே பிணி ஏற்படாமல் அரசன் காக்க வேண்டும் என இந்தப் பொறுப்பை அரசுத் தலைவன்மேலும் போட்டுள்ளார். மற்றும்,

" உறுபசியும் ஓவாப்பிணியும் செறு பகையும்
சேரா தியல்வது நாடு" (734)

என்னும் குறளிலும் இந்தக் கருத்து இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் நோய் தீர்க்க அவ்வந்நாட்டு அரசு ஆவன செய்து வருவதைக் காண்கின்றோம். இந்தப் பணி இன்னும் சிறந்த முறையில் செய்யப்படல் வேண்டும்.

வெள்ளம் வருமுன் அணை கோல வேண்டும். நோய் வருமுன் வராதவாறு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். 'நோய்க்கு இடம் கொடேல்' என்பது ஔவையின் ஆத்திசூடி (75) அறிவுரை. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது ஒரு முதுமொழி. ஆண்டுதோறும் ஐம்பது வண்டி நெல் வரும் செல்வர்கள் சிலர், தித்திப்புநீர் நோயால் மூன்று வேளையும் கேழ்வரகுக் கூழ் குடிக்கிறார்கள். என்ன செய்வது!

உடம்பு நன்றாயிருந்தால்தானே பணிகள் செய்ய முடியும்? பிறர்க்குப் பணிபுரிய இயலாவிடினும், தமக்கு வேண்டிய வேலைகளையாவது தாம் செய்துகொள்வதற்குப் போதிய உடல்நலம் வேண்டுமல்லவா? சுவர் நன்றாயிருந் தால்தானே ஓவியம் நன்கு தீட்ட முடியும்?

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"
– (724)

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"–(725)

என்னும் திருமூலச் சித்தரின் திருமந்திரங்கள் ஈண்டு ஒப்பு நோக்குதற் குரியன.

பிணியின்றி வாழ்வதற்கு மக்கள் என்னென்ன செய்ய வேண்டும்? உணவில் கட்டுப்பாடும், உடை – உறையுள் - சுற்றுப்புறம் முதலியவற்றில் தூய்மையும் வேண்டும். 'சுத்தம் சுகம் தரும்', 'கூழானாலும் குளித்துக்குடி – கந்தையானாலும் கசக்கிக்கட்டு' என்னும் மெய்ம்மொழி களின் படிப்பினையை வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த வேண்டும். 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக் காதே' என்பது ஒரு பழமொழி. நீர்நிலைகளைத் தூய்மை யிழக்கச் செய்யலாகாது. தூய்மையில்லா நீரால் பல நோய்கள் வரும். எனவே, தூய்மையுள்ள நீரையே பயன் படுத்த வேண்டும்.

உணவுக் கட்டுப்பாட்டைப் பற்றி வள்ளுவர் அளவுமீறி வற்புறுத்தியுள்ளார் என்று கூறலாம் போல் தோன்றுகிறது. அவர் என்னதான் கூறியுள்ளார் என்று பார்ப்போம்:

முன் உண்ட உணவு முற்றும் செரித்தபின் – நன்கு பசி ஏற்பட்டபின் உண்ண வேண்டும். அஃதும் மீண்டும் செரிக்கும் அளவு அறிந்து உண்ண வேண்டும். இவ்வாறு செய்பவர் வாழ்க்கையில் மருந்தே தேவையின்றி உடம்பை நீண்ட நாள் காத்து உயிர் வாழ்க்கையை நீட்டிக்கொண்டிருப்பர். செரித்தபிறகு அளவோடு உண்பவனிடத்தில் இன்பம் இருக்குமெனில், மிக்க பெருந்தீனியை மேய்பவனிடத்தில் நோயும் மிக்கிருக்கும்–என்பது விளங்கும். அத்தகையோர் அளவில்லா நோயால் அல்லலுற்று விரைவில் மடிவர் - என்றெல்லாம் வள்ளுவர் வகுத்துரைத்துள்ளார்:

" அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு" (943)

" இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்" (946)

" தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்" (947)

" மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" (942)

என்பன குறள்கள். தனி மாந்தர்க்கு நோய் வராதிருக்கும் வழியைச் சொன்னதோடு வள்ளுவர் நிற்கவில்லை; நோய் தீர்க்கும் மருத்துவர்க்கும் ஏதேதோ சிறிது சொல்லிவைத்துள்ளார். அவையாவன:

என்ன நோய் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும் - அதோடு, அந்த நோய் வந்ததன் காரணத்தையும் அறிய வேண்டும். நோய் போக்கும் வழிமுறையினையும்

ஆய்ந்துணர வேண்டும். மற்றும், நோயாளியின் நிலைமையினையும் நோயின் அளவையும் கவனித்து, எந்தெந்த நேரத்தில் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, நோய் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் – என்பது வள்ளுவர் அறிவுரை.

" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்புச் செயல்" (948)

" உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்" (949)

என்பன குறள்கள். இங்கே கற்றான் என்பது, மருத்துவனை அதாவது டாக்டரைக் குறிக்கும்.

திருவள்ளுவர் கூறியிருப்பதை நோக்குங்கால், ஒரு காலத்தில் ஒருசில இடங்களிலாயினும் அளவுமீறி உண்ணும் அளவுக்கு வளம் மிக்கிருந்தது என்பது புலனாகும். பட்டினி பெரு மருந்து என்னும் பொருளிலுள்ள 'லங்கணம் பரம ஔஷதம்' என்னும் பட்டறிவுமொழி ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. ஒரு சில நாட்களில் பட்டினி நோன்பு கொள்வதும் இது கருதியே போலும்!

நோய் வருமுன் காக்கவேண்டியதிருக்க, நோய் வந்த பின்னும் காவாதார் பலர் உளர். இவர்கள் நாள்–நட்சத்திரம் பார்ப்பவர்கள். வெள்ளிக்கிழமை வளர்ந்த நாள் - அன்றைக்கு மருத்துவரிடம் சென்றால் நோய் வளரும்; பாட்டிமையிலும் போகக் கூடாது – என்றெல்லாம் கூறி ஆறப்போட்டு அல்லல்படுபவர்கள் இவர்கள். 'நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை' என்னும் அதிவீரராம பாண்டியனின் வெற்றிவேற்கை (47) அறிவுரையை இன்னார் ஏற்பது எந்நாளோ?

இந்தக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அறிவியல் மருத்துவமுறையினால் நாட்டில்-ஏன்-உலகில் இறப்பு விகிதம் குறைந்துள்ளது. புதிய அறிவியல் மருத்துவமுறை களை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நோய் கண்டவுடன் தக்க மருத்துவரையோ - மருத்துவமனை யையோ அணுகி நோய் தீர்த்துக்கொள்ளல் வேண்டும். அம்மை, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கட்கு, மாரி யம்மனின் அருள் கிடைக்காமையே காரணம் என எண்ணா மல் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்; பிறகு கோயி லுக்குப் போகலாம்.

வாழ்க்கையில் நல்லொழுக்கத்துடன் நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அளவுமீறி உண்ணுதல், புகைபிடித்தல், பொடி போடுதல், மது அருந் துதல், காமவெறி கொண்டலைதல் முதலியன கூடா. உட லில் உப்புநீர், சர்க்கரைநீர், குருதி அழுத்தம், கொழுப்பு மிகுதி முதலியன வராமல் காத்துக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு ஒழுகின் பிணியின்றிப் பல்லாண்டு - பல்லாண்டு வாழலாம்.

# 6. பாடலி புத்திரமும் பாதிரிப்புலியூரும்

'பாடலி புத்திரம்' என்னும் ஊர் ஒன்று இருந்ததாகப் பெரியபுராணத்தால் தெரிய வருகிறது. 'பாடலம்' என்றால் பாதிரி; பாடலி புத்திரம் என்றால் பாதிரி மரம் நிறைந்த இடம்: எனவே, திருப்பாதிரிப் புலியூரைக் குறிக்கும் வட மொழிப் பெயர்தான் 'பாடலி புத்திரம்' எனப் பலரும் கூறு கின்றனர். பாடலி புத்திரமும் திருப்பாதிரிப் புலியூரும் ஒன்றா? அல்லது வெவ்வேறா? இந்த ஐய வினாவிற்குப் பெரிய புராணத்திலேயே விடை இருக்கிறது. இந்த இரண்டு இடப் பெயர்களையும் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் தனித்தனிச் சூழ்நிலையில் தனித்தனியாகக் கூறியுள்ளார். இதைக் கொண்டே இரண்டையும் வெவ்வே றாகத் துணியலாம்.

திருவாமூரில் திலகவதியாரின் தம்பியாகப் பிறந்த திருநாவுக்கரசர் இளமையில் பெற்றோரை இழந்தபின், பாடலிபுத்திரம் என்னும் ஊரையடைந்து சமண மதத்தில் சேர்ந்து பெரிய தலைவராகத் திகழ்ந்தார். இதனைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பின்வருமாறு விவரிக் கிறார்:

* ''பாடலிபுத் திரமென்னும் பதிஅணைந்து சமண்பள்ளி
மாடணைந்தார் வல்லமணர் மருங்கணைந்து மற்றவர்க்கு
வீடறியும் நெறிஇதுவே எனமெய்போல் தங்களுடன்
கூடவரும் உணர்வுகொளக் குறிபலவும் கொளுவினார்''

* பெரியபுராணம்—திருநாவுக்கரசர் – 38, 39 40.

"அங்கவரும் அமண்சமயத் தருங்கலைநூ லானவெலாம்
பொங்குமுணர் வுறப்பயின்றே அந்நெறியிற் புலன்
சிறப்பத்
துங்கமுழு உடற்சமணர் சூழ்ந்துமகிழ் வாரவர்க்குத்
தங்களின்மே லாந்தரும சேனர்எனும்
பெயர்கொடுத்தார்"

"அத்துறையின் மீக்கூரும் அமைதியினால் அகலிடத்தில்
சித்தநிலை அறியாத தேரரையும் வாதின்கண்
உய்த்தஉணர் வினில்வென்றே உலகின்கண் ஒளியுடைய
வித்தகராய் அமண்சமயத் தலைமையினில்
மேம்பட்டார்".

மேலே முதல் பாடலின் தொடக்கத்திலுள்ள 'பாடலி புத்திரம் என்னும் பதி' என்னும் தொடரைக் காணுங்கால், பாடலி புத்திரம் ஒரு தனி ஊராக இருந்தமை புலனாகும். மற்றும், அங்கே சமணமதத் தலைமையகம் இருந்தமையும், அங்கே சமணமதக் கலைகள் பல பயிற்றப் பட்டமையும், திருநாவுக்கரசர் 'தருமசேனர்' என்னும் தலைமைப் பட்டப் பெயருடன் தலைமை தாங்கியிருந்தமையும் பாடல்களால் அறியப்படுகின்றன. பாடலிபுத்திரத்தில் சமணமதத்தின் தலைமையகம் ஒன்று இருந்ததென்றால், அங்கே பல கலைகள் பயிற்றப்பட்டன என்றால், அங்கே பெருந் தலைவர் ஒருவர் தலைமை தாங்கியிருந்தார் என்றால், அப் பாடலிபுத்திரம் ஒரு சிற்றூராக இருந்திருக்க முடியாது; ஒரு பேரூராகவே இருந்திருக்க வேண்டும்.

சமண நூல்களைக் கொண்டு பார்க்கும் போதும், பாடலிபுத்திரம் அன்று பெற்றிருந்த பெருமை புலனாகிறது. இவ்வூர் மூன்றாம் நூற்றாண்டிலேயே சமணர்களின் சிறப் பிடமாய்த் திகழ்ந்தது. ஐந்தாம் நூற்றாண்டில் சிம்மசூரி, சரவ நந்தி முதலிய சமணப் பெரியார்கள் இங்கே தங்கி யிருந்தனர். சரவ நந்தியானவர் சிம்ம நந்தியின் உலோக

விபாகத்தைப் புகழ்ந்து நூல் எழுதியது பாடலிபுத்திரத்தில் தான்! ஏழாம் நூற்றாண்டு வரையும் பாடலிபுத்திரம் மிகச் சிறப்புற்றிருந்தது.

இங்கே சமணர்க்குத் தலைமை தாங்கியிருந்த நாவுக்கரசருக்குச் சூலைநோய் உண்டாக, அவர் தம் தமக்கை திலகவதியாரின் தூண்டுதலால் சமணர்க்குத் தெரியாமல் இரவோடிரவாகப் பாடலிபுத்திரத்தினின்றும் புறப்பட்டுத் திருவதிகை போய்ச் சேர்ந்தார். இதனைச் சேக்கிழார்,

* "பொய் தருமால் உள்ளத்துப்
புன்சமணர் இடங்கழிந்து
மெய் தருவான் நெறியடைவார்
வெண் புடைவை மெய்சூழ்ந்து
கைதருவார் தமையூன்றிக்
காணாமே இரவின்கண்
செய்தமா தவர்வாழுந்
திருவதிகை சென்றடைவார்"

என்னும் பாடலில் தெரிவித்துள்ளார். இப் பாடலில் 'சமணர் இடம்' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது பாடலி புத்திரமாகும். பாடலிபுத்திரத்திலிருந்து சமணர்க்குத் தெரியாமல் நாவுக்கரசர் ஒரே இரவில் திருவதிகை சென்று விட்டார் என்பது இப் பாடலால் புலனாகிறது. யாருக்கும் தெரியாமல் இரவில் புறப்படுபவர் முன்னிரவில் புறப்பட்டிருக்க முடியாது. எல்லாரும் படுத்த பிறகு இரவு பத்து அல்லது பதினொரு மணிக்கு மேல்தான் புறப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு புறப்பட்டவர் விடிவதற்குள் திருவதிகையை அடைந்திருக்க வேண்டும். தெரியாமல் செல்பவர்கள் விரைவாக நடப்பது இயற்கையென்றாலும் சூலைநோய் (வயிற்றுநோய்) கொண்டிருந்ததால் நாவுக்

* பெரியபுராணம்—திருநாவுக்கரசர் - 61.

கரசர் ஓரளவு மெதுவாக நடந்து சென்றிருப்பார். எனவே, ஒரு வயிற்று நோய்க்காரன் நள்ளிரவில் புறப்பட்டு விடிவதற்குள் சென்றடையக் கூடிய தொலைவிலேயே திருவதிகை இருந்தது என்பதும் இப் பாட்டிலிருந்து உய்த்துணரப்படலாம். அங்ஙனமெனில், திருதிகையிலிருந்து ஏறக்குறைய 20 கி.மீ. (12 மைல்) தொலைவில் பாடலி புத்திரம் இருந்திருக்கலாம் என்று கொள்ளலாம். இந்தக் கருத்தை நினைவில் இருத்தி அடுத்த கருத்துக்குச் செல்வோம். நாவுக்கரசர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதை யறிந்த சமணர்கள் பொறாது துடிப்பதைச் சேக்கிழார் பின்வரும் பாடலால் தெரிவிக்கிறார்:

* "இன்ன தன்மையில் இவர்சிவ நெறியினை எய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலி புத்திர நகரில்
புன்மை யேபுரி அமணர்தாம் கேட்டது பொறாராய்".

இப்பாடலிலுள்ள * "தொன்மையின் பாடலிபுத்திரநகர்" என்னும் பகுதியால், பாடலிபுத்திரம் மிகவும் தொன்மை வாய்ந்தது எனவும், ஒரு நகரம் எனவும் அறியலாம்.

'நாவுக்கரசருக்குப் பல தொல்லைகள் தந்த சமணர்கள் இறுதியாக அவரைக் கல்லிலே கட்டிக் கடலிலே போட்டனர். அவர் தப்பித்துக் கொண்டு திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கத்தில் கரையேறினார்; பின்னர்த் திருப்பாதிரிப்புலியூரை அடைந்து சிவபெருமானை வழிபட்டார்' என்று சேக்கிழார் பாடியுள்ளார்; பாடல்கள்:

† "வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டெழுந் தருளு வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்"

---

* பெரியபுராணம்—திருநாவுக்கரசர் – 79.
† ,, ,, – 131, 133.

"தொழுந்தகை நாவினுக் கரசுந் தொண்டர்முன்
செழுந்திருப் பாதிரிப் புலியூர்த் திங்கள்வெண்
கொழுந்தணி சடையனைக் கும்பிட் டன்புற
விழுந்தெழுந் தருள்நெறி விளங்கப் பாடுவார்."

இப் பாடல்களில், நாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கத்தில் கரையேறியதாகவும், திருப்பாதிரிப்புலியூரில் சிவனை வழிபட்டதாகவும் சேக்கிழார் கூறியிருக்கிறாரே யொழிய, பாடலிபுத்திரத்தின் பக்கத்தில் கரையேறிய தாகவோ பாடலிபுத்திரத்தில் சிவனை வழிபட்டதாகவோ கூறவில்லை. இதைக்கொண்டு, பாடலிபுத்திரமும் திருப் பாதிரிப் புலியூரும் வெவ்வேறானவை என்பது சேக்கிழார் கருத்து என உய்த்துணரலாம்.

அடுத்தபடியாக, சமணரைவென்ற நாவுக்கரசரால் சைவனாக மாற்றப்பட்ட மகேந்திரவர்மப் பல்லவன், பாடலி புத்திரத்தில் இருந்த சமணக் கோயில், மடம் முதலியவற்றை இடித்துக் கொண்டு வந்து திருவதிகையில் 'குணபரேச்சரம்' என்னும் சிவன்கோயில் கட்டியதாகச் சேக்கிழார் பாடியுள்ளார்:

* "விடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண் பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து குணபரஈச் சரம்எடுத்தான்".

என்பது பாடல். இப் பாடலால் பாடலிபுத்திரம் பல்லவ மன்னனால் அழிக்கப்பட்டது என்பது புலனாகும். முற்காலப் பல்லவர்கள் ஆட்சி தொடங்கிய மூன்றாம் நூற்றாண்டி

* பெரிய புராணம் – திருநாவுக்கரசர் – 146.

லிருந்து சிறப்புற்று விளங்கிய பாடலிபுத்திரம், ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மகேந்திரவர்மப் பல்லவன் ஆட்சியில் வீழ்ச்சியுற்றது.

இதுகாறுங் கூறி வந்த பெரிய புராண இலக்கியச் சான்றுகளைக் கொண்டு, 'சமணப் பள்ளிகளையும் பாழி களையும் கொண்டிருந்த பாடலிபுத்திரம் வேறு; சிவன் கோயிலைக் கொண்ட திருப்பாதிரிப்புலியூர் வேறு; இக் காலத்தில் ஆராய்ச்சியாளர் பலரும் தெரிவிப்பதுபோல் இரண்டும் ஒன்றல்ல' – என்னுங் கருத்து தெள்ளத்தெளிய உறுதிப்படும். அப்படி இரண்டும் வெவ்வேறானவை என்றால், பாடலிபுத்திரம் அன்று எங்கேயிருந்தது? என்ற வினா எழும். இதற்கு விடை காணவேண்டும்.

சூலைநோய் கொண்டிருந்த நாவுக்கரசர் நள்ளிரவு அளவில் பாடலிபுத்திரத்தில் புறப்பட்டு விடிவதற்குள் திருவதிகை அடைந்ததாகத் தெரிவதால், திருவதிகையி லிருந்து பாடலிபுத்திரம் 20 கி.மீ (12 மைல்) தொலைவில் இருந்திருக்கலாம் என்று முன்பு கணித்தோம். மற்றும், மகேந்திர வர்மப் பல்லவன் பாடலி புத்திரத்துப் பாழிகளையும் பள்ளிகளையும் இடித்துக் கொண்டுபோய்த் திருவதிகையில் குணபரேச்சரம் என்னும் கோயில் கட்டினா னென்றால், கருங்கற் பொருள்களை நெடுந்தொலைவு இழுத்துக் கொண்டு போகாமல், 20 அல்லது 25 கி. மீ. தொலைவிலேயே சிவன் கோயில் கட்டினான் என்று கொள்ளலாம். இவ்வாறெல்லாம் தொலைவைக் கணக் கிட்டுப் பார்க்கும்போது, திருவதிகைக்கு 20 அல்லது 25 கி.மீ. தொலைவில் சிறப்புற்றிருந்த இடமாகவும், பாடலம் என்னும் பாதிரி மரம் நிறைந்திருந்த இடமாகவும் அறியக் கிடப்பது, கிழக்கேயுள்ள திருப்பாதிரிப்புலியூர்ப் பகுதியைத் தவிர, வேறு எந்தத் திக்கிலும் வேறு எந்த இடமும்

இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியென்றால், பாடலி புத்திரமும் பாதிரிப் புலியூரும் ஒன்றா என்றால் இல்லை யில்லை; பாதிரிப் புலியூருக்குப் பக்கத்தில் பாடலிபுத்திரம் ஒரு தனிப் பகுதியாக இருந்தது என்பதுதான் உண்மை. இவ்விரண்டையும் தனித்தனி நகராகச் சேக்கிழார் குறிப் பிட்டிருப்பதை ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

ஐரோப்பாவிலிருந்து தமிழகத்திற்குக் கிறித்துவ மதத்தைப் பரப்ப வந்தவர்கள், புகழ்பெற்ற இந்துக் கோயில்கள் இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் கிறித்துவக் கோயில் (சர்ச்) எழுப்ப முயன்றதும், அம்முயற்சியில் சில இடங்களில் வெற்றி பெற்றதும் சில இடங்களில் தோல்வி யடைந்ததும் நாடறிந்த உண்மை. எடுத்துக்காட்டாக, - தென்னார்க்காடு மாவட்டத்தில் மயிலம் மலைமேல் உள்ள முருகன் கோயில் மிகவும் புகழ் பெற்றது. கோயில் உள்ள குன்றுக்குப் பக்கத்தில் இணைப்பாக மற்றொரு குன்று உள்ளது; அந்த வெற்றுக் குன்றில் மாதாகோயில் (சர்ச்) ஒன்று கட்டுவதற்காக ஐரோப்பியர் ஆட்சியில் கிறித்துவ மதத் தலைவர்கள் எவ்வளவோ முயன்றனராம்; முடிய வில்லை. மதம் பரப்ப முயல்வோருக்கு இது வழக்கம் என்பதை அறிவிப்பதற்காக இங்கே இஃது எடுத்துக் காட்டப்பட்டது.

இதுபோலவே, பண்டு சமண சமயத்தைப் பரப்ப முயன்ற சமணர்கள், சைவசமயத்திற்குச் சிறப்பிடமாய்த் (முக்கிய கேந்திரமாய்த்) திகழ்ந்த திருப்பாதிரிப்புலியூருக்குப் பக்கத்தில் சமண சமயத்திற்குச் சிறப்பிடம் அமைக்க முனைந்தனர்; அதன் பயனாய் உருவானதே பாடலி புத்திரம். அங்ஙனமெனில், திருப்பாதிரிப்புலியூருக்கு நேர் வடக்கே 5 கி. மீ. தொலைவிலுள்ளதும் பண்டு பெரிய வடமொழிப் பல்கலைக்கழகம் திகழ்ந்ததுமான பாகூர்

பாடலிபுத்திரமாக இருந்திருக்கலாமோ எனில், இல்லை; பாகூருக்குப் பாதிரிமரத் தொடர்பு இல்லை; மற்றும், ஏழாம் நூற்றாண்டில் பாடலிபுத்திரம் மகேந்திரவர்மப் பல்லவனால் கலைக்கப்பட்டு விட்டது; பாகூரோ ஒன்பதாம் நூற்றாண்டிலும் சிறப்புற்றிருந்ததாகத் தெரிகிறது. பாகூர் வடமொழிப் பல்கலைக் கழகத்திற்கு ஒன்பதாம் நூற்றாண்டில் நிருபதுங்கவர்மப் பல்லவன் மூன்று சிற்றூர்களை அளித்த செய்தி அறியப்பட்டுள்ளது. எனவே, ஏழாம் நூற்றாண்டிலேயே வீழ்ச்சியடைந்து விட்ட பாடலிபுத்திரம் பாகூர் அன்று.

திருப்பாதிரிப்புலியூரினும் வேறாகச் சேக்கிழாரால் குறிப்பிடப்பட்டுள்ள பாடலிபுத்திர நகரம், திருப்பாதிரிப் புலியூருக்கு மேற்கே 2 கி. மீ. தொலைவில் தனியாக இருந்தது என்று உய்த்துணர வாய்ப்பிருக்கிறது. திருப்பாதிரிப்புலியூருக்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் 'பாதிரிக் குப்பம்' என்னும் சிற்றூர் ஒன்று இப்போதும் உள்ளது. இவ்வூர், கடலூர் - திருக்கோவலூர் மாவட்ட நெடும் பாதையில் திருப்பாதிரிப்புலியூருக்கும் திருவயிந்திரபுரத்திற்கும் நடுவில் உள்ளது. இந்தப் பாதிரிக்குப்பம் இருக்கும் பகுதியில்தான் பழைய பாடலிபுத்திரம் இருந்திருக்கக் கூடும். இதற்குச் சான்றுகள் இல்லாமற் போகவில்லை; அவையாவன:

1) பாதிரிக்குப்பத்திற்கும் திருவதிகைக்கும் ஏறக் குறைய 20 கி.மீ. தொலைவுதான் இருக்கும். சூலை நோய் கொண்டிருந்த நாவுக்கரசர் இந்தப் பகுதியில் நள்ளிரவில் புறப்பட்டுப் பையப் பைய நடந்திருப்பினும் விடிவதற்குள் திருவதிகை சென்றடைந்து விட்டிருக்க முடியும். இந்த இரண்டு ஊர்களும் கடலூர் - திருக்கோவலூர் மாவட்ட நெடும்பாதையில் இருப்பது குறிப்பிடத் தக்கது.

2) அந்தக் காலத்தில் பாதிரி மரங்கள் நிறைந்திருந்த தால் பாதிரிக்குப்பம் என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப் படுகிறது. பாடலிபுத்திரம் என்றாலும் பாதிரி மரங்கள் நிறைந்த இடம் என்பதுதான் பொருள்; எனவே, பெயர்க் காரணத்தாலும் இந்தக் கருத்து பொருத்தமானது என்பது புலப்படும்.

3) எனது 'கெடிலக்கரை நாகரிகம்' என்னும் நூலில் கெடிலத்தின் திசை மாற்றம், கெடிலத்தின் தொன்மை என்னும் தலைப்புகளில் பாதிரிக்குப்பம் முத்தால் நாயடு என்னும் முதியவர் குறிப்பிடப்பட்டிருக்கிறார். கெடிலம் முற்காலத்தில் வண்டிப்பாளையம் அருகே ஓடியதாகவும், அந்தப் பகுதியில் நிலத்தைத் தோண்டியபோது அடியில் கல்மரத் துண்டுகள் (Wood Fossil) அகப்பட்டதாகவும் முதியவர் முத்தால் நாயடு கூறியதாக அத் தலைப்புகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதியவர் முத்தால் நாயடுவிடம் நான் மேலும் சில வினவினேன்.

நான் : இந்த ஊருக்குப் பாதிரிக் குப்பம் என்று ஏன் பெயர் வந்தது?

முதியவர் : அந்தக் காலத்தில் பாதிரி மரங்கள் அடர்ந் திருந்ததால் பாதிரிக்குப்பம் என்று பெயர் ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள்.

நான் : பழைய காலத்தில் இந்த ஊருக்கு என்ன பெருமை இருந்தது?

முதியவர் : என்ன பெருமை - ஒன்றும் தெரியவில்லையே!

நான் : கோயில் குளம் - அப்படி - இப்படி என்று ஒன்றும் பெருமை இருக்கவில்லையா?

முதியவர் : ஓ அதுவா! ஏதோ கோயில் குடிக்காடு ஒரு காலத்தில் இருந்ததாகவும், அப்புறம் அழிந்து போய் விட்டதாகவும் சொல்கேள்வி.

நான் : என்ன கோயில் என்று தெரியுமா?

முதியவர் : தெரியாது.

நான் : சிவன் கோயிலா? பெருமாள் கோயிலா?

முதியவர் : நம்ம சாமி கோயில் இல்லை; வேறு சாமி கோயிலாம்.

நான் : வேறு சாமி கோயில் என்றால்...?

முதியவர் : ஏதாவது கிறித்தவர் கோயிலாயிருக்கும்.

நான் : கிறித்தவர் கோயில் என்றால், இங்கே யாராவது கிறித்தவப் பாதிரிமார்கள் இருந்திருப்பார்களா? அதனால்தான் இவ்வூருக்குப் பாதிரிக் குப்பம் என்னும் பெயர் ஏற்பட்டதா? அல்லது நீங்கள் முதலில் சொன்னவாறு பாதிரி மரம் இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டதா?

முதியவர் : ஒன்றும் சரியாகத் தெரியவில்லை.

இஃது எனக்கும் முதியவருக்கும் இடையே நடந்த வினாவிடை—உரையாடல். முதியவர் கிறித்தவக் கோயிலாயிருக்கும் என்று சொன்னது சரியன்று. சமண பௌத்த மதங்களைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாதாதலின் கிறித்தவக் கோயிலாயிருக்கலாம் என்று சொன்னார். மேலும், அங்கே கிறித்தவர்கள் இல்லையாதலின் கிறித்தவக் கோயில் எழக்காரணம் இல்லை. அப்படியே இருந்தாலும் ஆங்கிலேயர் ஆட்சியில் அஃது அழிவதற்குக் காரணம் இல்லை. அன்றியும் பழைய காலத்தில் அங்கே கிறித்தவக் கோயில் ஏற்பட வாய்ப்பில்லை. நான் கேட்டதற்காக, அவர் அறிந்த வேறு மதத்தை அம்முதியவர் குறிப்பிட்டார்.

சமணத்தைப் பற்றி அவருக்குத் தெரியாது. அழிந்து போன கோயில் குடிக்காடு இந்தப் பகுதியில் எங்கே யிருந்தது என்று நான் கேட்டதற்கு, முதியவர் நெடும் பாதையின் வடக்குப் புறமாகக் கையை நீட்டிக் காட்டினார். இந்த உரையாடல் நமது கருத்துக்கு ஓரளவு துணை புரிகிறது.

(4) பாதிரிக் குப்பத்திற்கு மேற்கே ஒரு கி. மீ. தொலைவில் நெடும்பாதையில் குமரப்ப நாய்க்கன் பேட்டை என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரின் முகப்பில் பாதையோரம் வடபுறமுள்ள ஒரு சத்திரத் தோட்டத்தில் ஒரு சமணச்சிலை மேற்கு நோக்கி அமர்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இது குமரப்ப நாய்க்கன் பேட்டை யில் இருப்பதால் இதனைப் 'பேட்டைக் கல்' என்று சுற்றுவட்டாரத்து மக்கள் அழைக்கின்றனர். மேற்கே சில கி. மீ. தொலைவில் வயலைக் கொத்தி உழுத போது இந்தச் சிலை கண்டுபிடிக்கப் பட்டதாகச் சொல்லப் படுகிறது. இது சமணச் சிலையேதான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்தச் சூழ்நிலையை வைத்துக் காணுங்கால், இந்த வட்டாரத்தில் ஒரு காலத்தில் சமண சமயம் தழைத்துச் செழித்திருந்தமை புலனாகும்.

மேற்கூறிய சான்றுகளைக் கொண்டு, பாதிரிக்குப்பம் இருக்கும் பகுதியில் பழைய பாடலிபுத்திரம் இருந்திருக்கக் கூடும் என்றும், பாடலி புத்திரம் வேறு—பாதிரிப்புலியூர் வேறு என்றும் உய்த்துணரலாம். உண்மை இங்ஙனமிருக்க இரண்டையும் ஒன்றெனை ஆராய்ச்சியாளர்கள் கொண்ட தற்குக் காரணம், இரண்டும் பக்கத்தில்—பக்கத்தில் இருந்தமையே! மற்றும், பாடலிபுத்திரம் ஒரு பெருநகரமாக இலக்கியங்களில் படைத்துக் காட்டப்பட்டிருப்பதாலும் - திருப்பாதிரிப் புலியூர் இன்று ஒரு பெருநகரமாகத் திகழ்

வதாலும் - அந்த நகரம் இந்த நகரமாகத்தான் இருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் மயங்கிவிட்டனர். இன்றைய ஆராய்ச்சியாளரையும் அணைத்துக் கொள்ளும் முறையில் இந்தச் சிக்கலுக்குப் பின்வருமாறு கூறித் தீர்வு காணலாம். 'பண்டு பாடலிபுத்திரமும் பாதிரிப்புலியூரும் இரட்டை நகரங்களாகத் திகழ்ந்தன' என்பதுதான் அந்தத் தீர்வு!

## பாட்னா - பாடலி புத்திரம்

பாடலிபுத்திரம் என்றதும், ஆராய்ச்சியாளர் பலர்க்கும் மற்றும் ஓர் ஊர் நினைவிற்கு வரும். இன்று பீகார் மாநிலத்தின் தலைநகராயிருக்கும் பாட்னா அன்று பாடலி புத்திரம் என அழைக்கப்பட்டது. பாட்னா அகழ்வாராய்ச்சி களிலிருந்து, பழைய பாட்னா-பாடலிபுத்திரத்தின் சிறப்பு கள் புலனாகியுள்ளன. அப் பாடலிபுத்திரம், கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் கி.பி. முதல் ஆறு நூற்றாண்டு களிலுமாக 900 ஆண்டுகாலம் மிகவும் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்ததாக வரலாறு பேசுகிறது. கி. மு. 320 தொட்டு கி.மு. 185 வரை மௌரியர் ஆட்சியிலும், கி. மு. 185 தொட்டு கி.மு. 73 வரை கங்கர் ஆட்சியிலும், கி. பி. 320 முதல் கி.பி. 600 வரை குப்தர் ஆட்சியிலும் பெரும் புகழ் பெற்று விளங்கியது.

இந்தப் பாடலி புத்திரம் 'பாடலி' என்னும் பெயரில் தமிழ் நூல்களிலும் புகழப்பட்டுள்ளது. படுமரத்து மோசி கீரனார் குறுந்தொகைப் (75) பாடலில்,

> ' வெண்கோட் டியானை சோணை படியும்
> பொன்மலி பாடலி பெறீஇயர்''

எனவும், மாமூலனார் அகநானூற்றுப் (265) பாடலில்,

" பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ"

எனவும், கொங்குவேளிர் பெருங்கதைப் (1-58 : 42) பாடலில்,

' பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞர்'

எனவும் பாடலியைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இப் புலவர்கள் பாடலி என்று வடநாட்டுப் பாடலிபுத்திரத்தையே குறிப்பிட்டுள்ளனர். பாடலி சோணையாற்றங் கரையில் இருப்பதாகப் படுமரத்து மோசி கீரனாரும், கங்கைக்கரையில் இருப்பதாக மாமூலனாரும் கூறியுள்ளனர். இவ்வூருக்கு அருகில் சோணையும் கங்கையும் ஒன்றுகூடுகின்றன. ஆதலின் இவ்வாறு இருவேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. இது பாடலிபுரம் எனவும் அழைக்கப்படும். பழைய மகத நாட்டின் தலைநகராகப் பாடலிபுத்திரம் விளங்கியது. இப்போதிருக்கும் பாட்னாவுக்கு அருகில் இஃது இருந்திருக்கக்கூடும் என உய்த்துணரப் படுகிறது.

வடக்கே பாட்னா-பாடலிபுத்திரம் சிறப்புற்றுத் திகழ்ந்ததைப் போலத் தெற்கே திருப்பாதிரிப்புலியூர் சிறப்புற்றுத் திகழ்ந்ததால், இவ்வூரும் முகமனாகப் பாடலிபுத்திரம் என அழைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர் சிலர் அறிவிக்கின்றனர். வடக்கே வடமதுரை இருப்பதுபோலத் தெற்கேயும் மதுரை இருக்கிறது. வடக்கே காசி இருப்பதுபோலத் தெற்கேயும் தென்காசி இருக்கிறது. அங்கே வடகைலாசம் போல இங்கே தென்கைலாசம் இருக்கிறது. இவ்வாறே அங்கும் இங்கும் பாடலிபுத்திரங்கள் இருந்தன என்பது அவ்வாராய்ச்சியாளர்களின் கருத்து. மற்றும், சமணசமயம் வடக்கேயிருந்து தெற்குக்கு வந்தது என்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. வடக்கேயிருந்து வந்த சமணர்கள்

அங்கேயிருந்து பாடலிபுத்திரத்தையும் இங்கே கொண்டு வந்து விட்டார்கள். இந்தப் பெயர் வழக்கு, சப்பான் நாட்டை 'ஆசியாவின் பிரிட்டன்' என்றும், பம்பாயைக் 'கிழக்கிந்திய இலண்டன்' என்றும், கோயமுத்தூரைத் 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என்றும், இந்தக் காலத்தில் அழைப்பது போன்றதாகும். இன்னும் கேட்டால், 'பாடலிபுத்திரம் என்னும் பெயர் பாட்னா - பாடலிபுத்திரத்தைக் காட்டிலும் கடலூர்ப் பாடலிபுத்திரத்திற்கே மிகவும் பொருந்தும்' என்று பன்மொழிப் புலவர் டாக்டர் சுநீதிகுமார் சாட்டர்ஜி என்னும் வங்காளப் பெரியார் அழுத்தம் திருத்தமாகச் சான்றுகள் காட்டி அடித்துக் கூறியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இஃதன்றி, பாடலிபுத்திரம் என்னும் பெயர் வடக்கேயிருந்து தெற்கே இறக்குமதியானதைப் போலவே, அப் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்த 'மகத தேசம்' என்னும் நாட்டின் பெயரும் தெற்கே இறக்குமதியாகி யிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அஃதாவது, கடலூர்ப்-பாடலிபுத்திரம் இருந்த திருமுனைப்பாடி நாடும் மகதநாடு என ஒரு காலத்தில் அழைக்கப்பட்டதை ஈண்டு நினைவுகூர வேண்டும்.

வடக்கே பாடலிபுத்திரம் அழிந்துவிட்டதைப்போலவே தெற்கேயும் பாடலிபுத்திரம் அழிந்துவிட்டது. வடக்கே பாட்னா பகுதியை அகழ்ந்து ஆராய்ந்தது போலவே, தெற்கே கடலூர்ப் - பாதிரிக்குப்பம் பகுதியை அகழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ உண்மைகள் தெரிய வரலாம்.

இதுகாறும் கூறியவற்றால் பாடலிபுத்திரம் என்னும் பெயர் ஏற்பட்டதற்குக் காரணம் எதுவாயிருப்பினும், பெரியபுராணச் சான்றின்படி, பாடலிபுத்திரமும் பாதிரிப் புலியூரும் பக்கத்தில்-பக்கத்தில் இருந்த தனித்தனி நகரங்கள் – இரட்டை நகரங்கள் என்பது தெளிவு.

# 7. பாரதி தாசனாரைப் பற்றி

(பாவேந்தர் பாரதிதாசனாரின் வாழ்க்கைக் குறிப்பு ஒன்றும், அவரது பாடல் சிறப்பு ஒன்றும் இந்தக் கட்டுரையில் விவரிக்கப் பெறும்).

**நாட்டுப் பற்று:**

பாவேந்தர் பாரதிதாசனார் கூறிய மிகவும் சுவையான-அவரது வாழ்க்கைச் செய்தி ஒன்று உள்ளது. அவரே இதை என்னிடம் நேரில் கூறியுள்ளார். இச் செய்தியை யான் கூட்டங்களில் கூடக் கூறியிருக்கிறேன். அதாவது:

பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியை ஆண்டு கொண்டிருந்த போது, பிரிட்டிஷ் இந்தியாவில் விடுதலைப் போராட்டம் மிடுக்காக நடந்து கொண்டிருந்தது. அத்தகைய போராட்டம் புதுச்சேரியில் நடக்காதவாறு பிரெஞ்சுக்கார ஆட்சியினர் கண்காணித்து வந்தனர். குறிப்பாக, அரசு ஊழியர்கள் கதர் உடையும், காந்தி குல்லாவும் அணியக் கூடாது என்பது கடுமையான ஆணையாகும்.

ஆனால், பிரெஞ்சு அரசுக் கல்வித் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த கவிஞர் பாரதிதாசனார் கதர் ஆடையும் காந்தி குல்லாவும் அணிவாராம்.

பிரெஞ்சுக்காரக் கல்வித் துறைத் தலைவர் விடுமுறையான ஒரு நாளில் தமது வீட்டில் ஆசிரியர் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தாராம். குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் கூட்டத்திற்கு வர வேண்டுமாம்.

அவ்வாறே ஆசிரியர்கள் குறித்த நாளில் துறைத் தலைவரின் வீட்டில் சென்று அமர்ந்திருந்தனராம். அப்போது, கவிஞர் கதர் ஆடையும் காந்தி குல்லாவும் அணிந்துகொண்டு போய் ஆசிரியர்களுடன் அமர்ந்தாராம். ஆசிரியர்கள், சுப்புரத்தினம் என்னும் இயற்பெயருடைய கவிஞரை நோக்கி, 'டேய் சுப்புரத்தினம்! இந்த உடையுடன் இங்கே இருக்காதே — போய் வேறு உடை உடுத்திக் கொண்டு வா — அல்லது வீட்டுக்குப் போய்விடு — துரை (கல்வித் துறைத் தலைவர்) வந்து பார்த்தால் உன்னைத் தொலைத்து விடுவான் — உன் வேலைக்கே சீட்டுக்கிழித்து விடுவான் — எழுந்து போய்விடு போ' — என்று வற்புறுத்தி னார்களாம்.

ஆனால் கவிஞர் சிறிதும் அசைந்துகொடுக்க வில்லை யாம். 'துரை வந்து பார்க்கட்டும் – எனக்குச் சீட்டுக் கிழிக்கட்டும் – நான் எதற்கும் தயார்' – என்று கூறினாராம். மீண்டும் ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டும், கவிஞர் நகராமல் ஒரே உறுதியுடன் இருந்துவிட்டாராம்.

பின்னர்ச் சிறிது நேரத்தில் பிரெஞ்சுக்காரத் தலைவர் ஆசிரியர்கள் அமர்ந்திருந்த கூடத்திற்கு வந்தாராம். வந்ததும் கவிஞர் சுப்பு ரத்தினத்தை நெடுநேரம் ஏற இறங்கக் கவனித்துப் பார்த்தாராம்; பிறகு அவ்விடத்தி னின்றும் அகன்று உள்ளே சென்றாராம்.

தலைவர் உள்ளே சென்றதும், ஆசிரியர்கள் மிகவும் அஞ்சி, கவிஞரை நோக்கி, 'டேய் சுப்பு ரத்தினம்! பார்த்தாயா? துரை எதற்கு உள்ளே போயிருக்கிறான் தெரியுமா? உனக்கு 'டிஸ்மிஸ் ஆர்டர்' எழுதிக்கொண்டு வரத்தான் போயிருக்கிறான். இனிமேலாவது எழுந்து போய்விடு. உன்னை மன்னித்தாலும் மன்னிப்பான். இல்லாவிடின், உன்னோடு எங்களுக்கும் ஏதாவது தொல்லை

நேரிடலாம்' என்று சொல்லிப் பார்த்தார்களாம். அப்போதும் கவிஞர் எழுந்து செல்லாமல் 'ஆணி அடித்துக் கொண்டு' – 'வேர் பாய்ந்து' அதே இடத்தில் அமர்ந்திருந்தாராம்.

சிறுது நேரத்தில் துரை தம் மனைவியை அழைத்துக் கொண்டு வந்து கவிஞரைச் சுட்டிக்காட்டிப் பின் வருமாறு கூறினாராம்: இதோ பார் இவரை! கதர் ஆடையும் கதர்க் குல்லாவும் அணியக் கூடாது; அணிந்தால் வேலை போய்விடும்—என்று நாம் விதி செய்துள்ளோம். அப்படியிருந்தும், இவர் எதற்கும் அஞ்சாமல், கதர் உடையுடன் என் எதிரிலேயே வந்திருக்கிறார். இவருடைய உறுதியான துணிவையும் நாட்டுப் பற்றையும் பார்! இப்படியொரு நாட்டுப் பற்றுடையவராய் இருப்பார் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை – என்று தம் மனைவியிடம் கூறிக் கவிஞரை மெச்சினாராம். அதன் பிறகு தான் ஆசிரியர்கள் அச்சம் நீங்கி மூச்சு விட்டார்களாம்.

இங்கே நாம், கவிஞரின் உறுதியான நாட்டுப் பற்றைப் பெரிதும் வியப்பதா? அல்லது கல்வித்துறைத் தலைவரின் பெருந்தன்மையைப் பெரிதும் வியப்பதா? ஒன்றும் புரியவில்லையே! சரி — இருவரையுமே வியப்போம்.

**பாடல் சிறப்பு :**

அடுத்து, பாவேந்தரின் பாடல் சிறப்பு ஒன்றினைப் பார்ப்போம் : 1973-ஆம் ஆண்டு புதுச்சேரியில் நடைபெற்ற ஒரு விழாவில் ஓர் அறிஞர் பின்வருமாறு ஒரு கருத்து தெரிவித்தார் :—

வால்மீகி தம் இராமாயண நூலில் இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரைத்திருக்கும் அளவு, கம்பர் தம் இராமாயண நூலில் இயற்கைக் காட்சிகளைப் புனைந்

துரைக்கவில்லை. வால்மீகி முனிவர் காட்டில் வாழ்ந்ததால் இயற்கைக் காட்சிகளைத் திறம்படப் புனைந்துரைத் துள்ளார். கம்பருக்கு அந்த வாய்ப்பு இல்லாததால், வால்மீகி அளவுக்குக் கம்பரால் இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரைக்க முடியவில்லை—என்பதாக ஒரு கருத்துக் கூறினார். அடுத்த பேச்சு என்னுடையது. அவர் முடித்தவுடன், யான் எழுந்து பேசியபோது அவர் கூறிய அந்தக் கருத்துத் தொடர்பாகப் பின்வருமாறு ஒரு கருத்துத் தெரிவித்தேன்.

காட்டில் வாழ்ந்தால்தான் இயற்கைக் ஈகட்சிகளைப் புனைந்துரைக்க முடியும் என்பதில்லை. தேவையில்லாமல் அளவு மீறி இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரைக்க வேண்டியதில்லை. தேவை ஏற்பட்டிருப்பின், கம்பராலும் மிகுதியாக இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரைக்க முடிந்திருக்கும் - என்று யான் கூறினேன். என் கருத்துக்குக் கைகொடுத்தது பாவேந்தரின் பாடல் ஒன்று ஆகும். அப் பாடலின் விளக்கம் வருமாறு :—

முழு வெண்ணிலா ஒளி வீசும் ஒரு பருவநாள் (பௌர்ணமி)—இரவு நேரம்—ஒரு வெட்டவெளி. அங்கே ஒரு காதல் இணை (ஜோடி) — அதாவது — காதலனும் காதலியும் கைகோத்துக் கொண்டு பேசி மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சியைக் கவிஞர் கண்டு விட்டார். காதலியினும் காதலன் சிறிது தான் உயரமாக இருக்கிறான். இன்ப மயக்கத்திலே காதலியின் கூந்தல் சரிந்து கிடக்கிறது. இருவரும் மகிழ்ந்து பேசி நகைக்கும் போது பெண்ணாதலின் காதலியின் சிரிப்பு ஒலி சிறிதாக இருந்தது; ஆண் ஆதலின் காதலன் 'கல கல' என்று உரக்கச் சிரித்தான். இந்தக் காட்சியைக் கண்ட பாவேந்தர், இதைப் பின்வரும் பாடலாக வடித்துத் தந்துள்ளார் ;-

“ வெட்டவெளியினில் நாங்கள் - எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்:
குட்டைப் பனைமரம் ஒன்றும் - எழில்
கூந்தல் சரிந்ததோர் - ஈந்தும்
மட்டைக் கரங்கள் பிணைத்தே - இன்ப
வார்த்தைகள் பேசிடும்போது
கட்டுக்கு அடங்கா நகைப்பைப் - பனை
‘கல கல’ என்று கொட்டிற்றே ” —

என்பது பாடலாகும். இங்கே குட்டைப் பனை மரமே காதலன்; ஈச்ச மரம்தான் காதலி. ஈந்து என்றால் ஈச்ச மரம். பனைமரம் மிகவும் நெட்டையாயிருக்கும். மிகவும் உயரமாய் இருப்பவரைப் பார்த்து, ‘பனைமரம் போல் வளர்ந்துவிட்டார்’ என்று கூறுவது உலக வழக்கம். ஆனால் ஈச்ச மரமோ பனைமரம்போல் இன்றி ஓரளவு உயரமே இருக்கும். காதலனும் காதலியும் கைகோத்துக் கொள்ள வேண்டுமெனில், நெட்டைப்பனை மரத்திற்கு ஒத்து வராது. அதனால்தான் ஈச்ச மரத்தோடு கைகோத்துக் கொள்ளக் குட்டைப் பனையால் முடிந்தது. பொதுவாகப் பனை மரத்தினும் ஈச்ச மரம் குட்டையானது. காதலி ஈந்தின் கூந்தல் சரிந்தது எப்படி? பனைமரத்தின் மட்டைகள் நேர்க் கோட்டில் நீண்டிருக்கும். நாளாகிய பனைமட்டை இற்று விழும் நிலையில் கீழ்நோக்கித் தொங்குவதை இங்கே எடுத்துக் கொள்ளலாகாது. ஈச்ச மரத்தின் மட்டைகளோ எப்போதுமே-இயற்கையாகவே சரிந்த நிலையில் இருக்கும். இந்த இயற்கை நிலைமை, இன்ப மயக்கத்தால் கூந்தல் சரிந்திருக்கும் நிலைமையை நினைவூட்டுகிறது.

கை கோத்துக் கொள்ளலாவது: குட்டைப் பனையும் ஈந்தும் பக்கத்தில் - பக்கத்தில் நெருங்கியிருப்பதால், பனையின் மட்டைகள் ஈந்தின் மட்டைகளுக்குள்ளும் ஈந்தின் மட்டைகள் பனையின் மட்டைகளுக்குள்ளும் புகுந்து

செருகிக் கொண்டிருக்கும் நிலை. இதுதான் கை கோத்துக் கொள்ளுதல் என்பது. இரண்டின் மட்டைகளும் தனித் தனியாகப் பிரிக்க முடியாத நிலையில் இருப்பதுதான், மட்டைக் கரங்கள் பிணைத்தலாகும்.

இன்ப வார்த்தைகள் பேசுதல் என்பது, காற்றினால் இரண்டு மரங்களும் உரசிக் கொள்வதால் ஏற்படும் ஒலியாகும்.

காதலி பெண்ணாதலின் அவளது சிரிப்பொலி பெரிதாயில்லை -காதலன் ஆடவனாதலின் அவனது சிரிப்பொலி பெரிதாயிருந்தது .என்பதாவது: ஓலை காய்ந்த பனை மட்டைகள் காற்றினால் 'சல சல' என்று பேரொலி எழுப்புவதாகும். 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்னும் பழமொழி ஈண்டு எண்ணத் தக்கது. சிரிப்பு மிகுதியாய் விட்டால் அடக்க முடியாமல் கட்டுமீறிச் சிரித்து விடுவது மாந்தரது பழக்கம். பனைக்குக் கட்டுக்கு அடங்கா நகைப்பு என்பது, பனை மட்டைகள் ஓயாது சலசலத்துக் கொண்டிருப்பதாகும். சல சலப்பொலி, 'கல கல' என்று சிரித்தார் என்பதில் குறிப்பிடப்படும் ஒலி போன்றதாகும். 'கல கல' என்று கொட்டிற்று என்பது, ஒருவர் அளவுமீறிப் பேரொலியுடன் தொடர்ந்து சிரிப்பின், இன்னொருவர் அவரைப் பார்த்து, 'போதும் சிரித்தது - நிரம்பக் கொட்டி விடாதே-பல் கொட்டிவிடப் போகிறது' - என்று கூறும் உலகியல் போன்றது. மேலும், கொட்டுதல் என்பது மிகுதியைக் குறிப்பதற்கு இன்னொரு சான்றும் வருமாறு: தண்ணீரைச் சிந்தினார்-தண்ணீரைத் தெளித்தார்-என்பன சிறிதளவு தண்ணீரையே குறிக்கும். தண்ணீரைக் கொட்டினார் என்பதோ, தண்ணீரின் மிகுதியைக் குறிக்கும்-ஏன் - கலத்திலுள்ள தண்ணீர் முழுவதையுமே கூடக் குறிக்கும். இவ்வளவு சொல் நயங்களும் பொருள் நயங்

களும் பாரதிதாசனாரின் இப்பாடலில் அமைந்திருப்பது, மிகவும் சுவை பயக்கின்றதன்றோ!

காட்டில் வாழாமலேயே, 'அழகின் சிரிப்பு' என்னும் நூலில் இயற்கையைப் புனைந்திருக்கும் பாவேந்தர் பாரதி தாசனார், இந்தப் பாடலில், காட்டில் அன்று—ஒரு வெட்ட வெளியில் உள்ள குட்டைப் பனைமரத்தையும் கூந்தல் சரிந்த ஈந்தையும் 'மூலதனமாக' வைத்துக் கொண்டே சுவை ததும்பும் இயற்கைப் புனைவு செய்துள்ளார்.

இனிய இந்தப் பாடல், கவிஞரின் இரண்டாம் கவிதைத் தொகுப்பில் 'மாவலிபுரச் செலவு' என்னும் தலைப்பில் உள்ள பத்துப் பாடல்களுள் ஐந்தாம் பாடலாகும். அந்தப் பத்துப் பாடல்களையும் படிக்கின், கவிஞரின் இலக்கியச் சிறப்புக்கு வேறொன்றும் சான்று தேட வேண்டியிராது. அவ்வளவு சிறந்த கற்பனைகளும் உவமைகளும் தற்குறிப் பேற்றமும் சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துகளும் அப்பாடல் களில் பொதிந்துள்ளன.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல், கவிஞரின் சிறந்த வாழ்க்கை நடைமுறைக்கு ஒரு செயலும், பாடல் சிறப்புக்கு ஒரு பாடலும் இங்கே தரப் பெற்றுள்ளன. பானைச் சோற்றையும் மாந்துவோமாயின் மகிழ்ச்சிக்கு அளவே இராது.

# 8. புகழ்ப் பத்து

புகழ் பத்துப் பாக்களில் விளக்கப்பட்டிருப்பது திருக்குறளில்தான். திருவள்ளுவரால் 'புகழ்' என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களில் புகழப்பட்டுள்ள அப்புகழின் புகழை இப்போது இங்கே ஒருமுறை புகழ்வோமே!

பொதுவாகப் புகழை விரும்பாதவர் உலகில் பெரும்பாலும் இருக்கமுடியாது. புகழைப்போல் தெவிட்டாத பொருள் வேறில்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். அம்மம்மா! சிறு குழந்தைகளுக்கு மட்டும் புகழ் தெவிட்டுகின்றதா என்ன! தன் தம்பி தமையனைவிட, தங்கை தமக்கையைவிட, எதையும் தானே நன்றாகச் செய்ததாக இருக்கவேண்டும்-எதையும் தானே முதலில் பெற்றதாக இருக்க வேண்டும்-எல்லோரும் தன்னைப் பாராட்டி மதிக்க வேண்டும் என்பன போன்ற புகழ் நோக்கில் குழந்தைகளுக்கு எத்துணைக் கொள்ளை விருப்பம்! இத்தகு புகழ் வேட்டை, வயதாக வயதாக, தெருவில் விளையாடும் போதாகட்டும் - பள்ளிக்கூட வாழ்க்கையிலாகட்டும் - உலக அரங்கிலாகட்டும்-நீடித்துப் பல்வகை உருவங்கொள்கிறது.

உலகில் ஒருசிலர் தங்களை யாராவது புகழமாட்டார்களா என்று ஏங்கிப் பாடுகிடக்கின்றனர்; புகழ்பவரைத் தேடி அலைகின்றனர்: புகழ்மாலை சூட்டுபவருக்கு வேண்டிய வசதிகள் செய்து தருகின்றனர். எப்படியும் தங்களை யாரும் புகழவில்லையென்றால், தாங்களாகவே தங்களை மணிக்கணக்கில் புகழ்ந்து கொள்கின்றனர்; அப்புகழைப் பொறுமையுடன் கேட்பதற்கு ஆட்களைத் தேடி

யலைகின்றனர்; அவர்கட்கு வேண்டிய வசதியும் செய்கின்றனர். எத்துணைப் புகழ்ப் பித்து!

இவ்வளவுக்கும் இப் புகழ்ப் பித்தர்கள் ஆற்றியுள்ள அருஞ்செயல்கள் என்னென்னவாக இருக்கக் கூடும்? பிறரை மிகுதியாகத் திட்டியிருப்பார்கள் - அடித்திருப்பார்கள் - அடிதடி வழக்கில் வெற்றிபெற்றிருப்பார்கள் - அல்லது நன்றாக விளையாடியிருப்பார்கள் —திறமையாகப் படித்திருப்பார்கள் — பலவகைப் போட்டிகளில் பரிசுபெற்றிருப்பார்கள். அல்லது, மிகுதியாகப் பணம் சேர்த்திருப்பார்கள் -- பட்டம் பதவிகள் பல பெற்றிருப்பார்கள் — பலருக்குத் தலைமை தாங்குவார்கள். அல்லது, மிடுக்காக உண்டு உடுத்துச் செலவு செய்வார்கள் — ஆரவாரக் கேளிக்கைகள் பலவற்றில் ஈடுபடுவார்கள் — எப்போதும் அரச குடும்பத்தினர் போல் காட்சியளிப்பார்கள். இவர்களின் அருஞ்செயல்கள் (சாதனைகள்) இத்தகையனவே. அப்பப்பா! இதற்காகவா இத்துணைப் புகழ்வேட்டை!

இவற்றால் கிடைப்பது உண்மைப் புகழாகாது — வெறும் போலியே! இந்தப் போலிப் புகழுக்குத் தமிழ் மொழியில் 'ஒளி' என்று பெயராம். தோன்றிச் சிறிது நேரம் இருந்து மறையும் ஒளியைப் போன்றதே இந்தப் போலிப் புகழும்! செயல்செய்த அப்போது மட்டும் சிலருக்குச் சிலரால் பாராட்டுக் கிடைக்கும். சிலர் மேலும் சிறிது காலம் வரைக்கும் பாராட்டப்பெறுவர். ஒருசிலர் வேண்டுமானால் இறக்கும் வரையும் பலரால் பாராட்டப் பெறலாம். அவ்வளவுதான்!

ஆனால் புகழ் என்பது இத்தகையதன்று. ஒருவர் இருக்கும் போதும்-இறந்தபின்னும்-எப்போதும் எல்லோராலும் பாராட்டப்பெறுவதற்குத்தான் 'புகழ்' என்று பெயராம்.

அரும்பெரும்பணி என்ன புரிந்தால் எப்போதும் எல்லோரும் பாராட்டுவர்?

ஆம், முற்கூறிய பல்வகைச் செயல்களும், செய்தவர் களின் உடல்வன்மை, உழைக்கும் ஆற்றல், அறிவுத்திறன், ஆரவாரம் முதலியவற்றை அறிவிக்கின்றனவே தவிர, அவற்றால் மன்பதைக்குக் (சமுதாயத்திற்குக்) கிடைக்கக் கூடிய நேரடியான பெரு நன்மைகள் யாவை? இல்லை யாதலின் அவர்கள் சிலபோதுமட்டும் - சிலரால் மட்டும் - சிறிதளவுமட்டும் - பாராட்டப்பெறுவர். ஆனால், தம்மைப் பற்றிக் கவலைப்படாமல், தம் உடல் பொருள் உயிர் அனைத்தையும் மக்கள் கூட்டத்திற்குப் பயன்படுத்துபவர் எவரோ-அதாவது, உலகிற்கு உதவுபவர் எவரோ-அவரே எப்போதும் எல்லோராலும் பெரிய அளவில் பாராட்டப் பெறுவார். அவருக்குக் கிடைக்கும் அழியாப் பாராட்டுக்கே புகழ் என்று பெயராம்.

உலகிற்கு உதவவேண்டும் என்றால், அந்த உதவி எந்தக் கோணத்திலும் இருக்கலாம் — அந்த ஈகை எந்த உருவத்திலும் இருக்கலாம். அதனால் ஒருவர்க்கும் தீமை யின்றிப் பலர்க்கும் பயன்கிடைக்க வேண்டும். அத்தகைய ஈகையால் தான் நிலைத்த புகழ் கிடைக்கும். பிறர்க்கு ஈபவரைப் பற்றித்தான் மக்கள் அக்கறை கொள்வர் — எப்போதும் அவர் புகழே உரைப்பர். இத்தகைய புகழை விட ஒருவருக்குச் சிறந்த ஊதியம் இப்பிறவியில் வேறு என்ன இருக்க முடியும்? இவ்வுலகில் ஒருவருடைய உடல், உடைமைகள் எல்லாம் அழிந்துவிடும்; ஆனால் அவரது உயர்ந்த புகழ்மட்டும் என்றும் அழியவே அழியாது. இக் கருத்துகள் உள்ள குறட்பாக்கள் வருமாறு:

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு". (231)

"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்".

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்".

இவ்வகையாக, அழியும் பொருளைப் பலர்க்கும் பயன் படுத்துவதால் அழியாப் புகழ் உண்டாகும் என்னும் நுட்பத்தைப் புரிந்துகொள்ளும் அறிவு எல்லார்க்கும் இருப்பதில்லை; இருந்தால், பொருளைப் பூட்டிவைத்து விட்டுப் புகழைக் கோட்டை விடுவார்களா? பொருளைப் பிறர்க்கு உதவுவதால் நமக்கு இழப்பு ஏற்படுவதுபோல் தோன்றினும் அஃது உண்மையான இழப்பாகாது; அதில் வளர்ச்சியிருக்கிறது—அதாவது, அந்த இழப்பில் புகழாகிய ஆக்கம் (செல்வம்) அடங்கியிருக்கிறது. இப் புகழைப் பெற்றவர்கள் இறந்துவிட்டாலும் உண்மையில் இறந்தவ ராகக் கருதப்பட மாட்டார்கள்; என்றும் உள்ளவராகவே மதிக்கப் பெறுவார்கள். அதாவது, அவர்தம் ஊன் உடம்பு மறையினும் புகழுடம்பு மறையவில்லை யன்றோ? இவ் வாறு ஆக்கத்தைத் தரும் இழப்பையும், என்றும் இருக்கச் செய்யும் இறப்பையும் கைவரப் பெறுபவரே உயர்ந்த வித்தகராவர். இத்தகு புகழ் வித்தகர்கள் துறவிகளைவிட ஏன், தேவர்களைவிடச் சிறந்தவராவர். நிலவுலகம் மட்டு மன்று - தேவருலகங்கூட, துறவிகளையோ தேவர்களையோ போற்றாமல் இப்புகழ்ச் செல்வர்களையே போற்றும்.

"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது".

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு".

உலகில் சிலர் புகழான செயல்களின் பக்கம் தலை வைத்தும் படுக்காமல் இழிவான செயல்களிலேயே நூற்றுக்கு நூறு இறங்கி விடுகின்றனர். அதனால் இவர்களை உலகினர் இகழ்கின்றனர். அதற்காக இவர்கள் தம்மை இகழ்கின்றவரை நோகின்றார்கள்! இது தேவையில்லையே! புகழ்ச் செயல் புரிபவரை உலகம் புகழத் தவறாது. அது போலவே, இகழ்ச் செயல் புரிபவரையும் உலகம் இகழத் தவறவே தவறாது. இந்த உலகியற்கையை ஒவ்வொருவரும் உணர வேண்டும். எனவே, இழிசெயல் புரிபவர்கள் தம்மை இகழ்பவரை நோகாமல், அவ்விகழுக்குப் பொருட்டான தங்களைத் தாங்களே நொந்துகொள்ள வேண்டும். 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே (செயலே) கட்டளைக் கல்' (உரைகல்) அல்லவா? பெருமையும் சிறுமையும் தான் தர வருமே' என்பது பட்டறிந்த முதுமொழி யாயிற்றே!

இங்கே சிலர், 'நாங்கள் என்ன இழிசெயல் செய்தோம்? கள், களவு, காமம், பொய், சூது, கொலை, கொள்ளை முதலிய குற்றங்களுள் எக்குற்றம் புரிந்தோம்? ஒன்றும் இல்லையே! யாருக்கும் எத்தீங்கும் செய்ய வில்லையே! நாங்கள் உண்டு – எங்கள் காரியம் உண்டு என்றுதானே இருக்கிறோம்! அப்படியிருக்கவும் எங்களைப் பலர் இகழ்ந்து பழிக்கின்றார்களே! இது ஏன்?' என்று கேட்கலாம். இவர்கள் இழிசெயல் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை; புகழான காரியம் செய்யாதிருப்பதே பெருங்குற்றமாயிற்றே! இஃது ஒன்றே போதுமே உலகம் இவர்களைப் பழிப்பதற்கு! உடலாற்றலும் அறிவு நலனும் பொருள் வசதியும் பெற்றிருப்பவர்கள் உலகிற்குப் பல நல்ல பணிகள் புரிய வேணடியது கடமையாயிற்றே! உலகத்தாரின் ஒத்துழைப்பால் — கூட்டுறவால்தானே இவர்கள் வாழ்கிறார்கள்! எனவே, இவர்கள் உலகிற்கு

உதவாதிருப்பது, புகழை இழந்ததாக மட்டும் ஆகாது—இகழை வலியத் தேடிக் கொண்டதாகவும் ஆகும்.

“புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்”.

“வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம்
இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்”.

வள்ளுவனார்க்கு இங்கே கசப்பு வந்துவிட்டதுபோலும்! புகழ் இல்லாதவரது உடம்பைச் சுமந்து கொண்டிருக்கும் மண்ணால் பயனில்லை என்கிறார் ஆசிரியர்.

“வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்”.

‘புகழ் இல்லாதவரைப் பொறுத்த நிலம்’ என்று ஆசிரியர் சொல்லவில்லை! ‘இசையிலா யாக்கை பொறுத்த நிலம்’ என்றே ஆசிரியர் கூறியுள்ளார். இசையிலா யாக்கை என்றால், புகழ் இல்லாத உடம்பு என்று பொருளாம். இதிலிருந்து, ‘புகழ் இல்லாதவரது உடம்பில் உயிர் இல்லை — அது வெற்றுடம்பாகிய பிணமே’ என்பது புலனாகிற தன்றோ? மேலும், உடம்புக்கு உண்மையான உயிர் புகழ்தான் என்பதும் புலனாகுமே! எனவேதான், புகழ் பெற்றவர்களின் உடம்பு சுட்டெரிக்கப் பட்டுங்கூட, அல்லது புதைக்கப் பட்டுங்கூட புகழ் என்னும் உயிர்ப் பொருள் உலகில் உலவிக்கொண்டிருக்கிறது போலும்! இவ்வளவு அரிய கருத்துகளும், ‘இசையிலா யாக்கை’ என்னும் குறள் தொடரிலிருந்து கிடைக்கப்பெற்றன வன்றோ? இம்மட்டுமா! புகழ் இல்லாதவர்கள் இருப்பதைவிட இறப்பதே மேல்—அதனால் நிலத்தின் சுமை குறையும் என்னும் கருத்தும் இதிலிருந்து கிடைக்கின்ற தல்லவா? சுமந்த நிலம் என்னாது ‘பொறுத்த

நிலம்' என்று ஆசிரியர் கூறியிருப்பதிலிருந்து, 'போனால் போகிறதென்று இரக்கப்பட்டு நிலம் பொறுத்துக்கொண்டிருப்பதாகவும் ஒரு குறிப்பு கிடைக்கின்றது. புகழில்லாதவர்களால் ஒரு பயனும் இல்லையாதலின், அவர்களைச் சுமந்து கொண்டிருக்கும் நிலப்பகுதியால் பயனில்லை என்றார் திருவள்ளுவர். அப்படியே ஏதாவது அந்நிலத்தால் பயன் இருக்குமாயினும், ஒன்றுக்கும் உதவாதவர்களையும் இழிசெயல்களே புரிபவர்களையும் சுமந்துகொண்டிருக்கிற ஒருவசையே போதுமே அந்நிலத்திற்கு! எனவே, வசை (பழி) யில்லாத முறையில் அந்நிலத்தால் வளப்பமான பயன் அளிக்கமுடியாது - என்னும் கருத்தில் 'வசையிலா வண்பயன் குன்றும்' என்றார் ஆசிரியர். 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று ஔவையாரும் புறநானூற்றில் புகன்றுள்ளாரே!

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் தோன்றி மறைவதைப் போலவே மக்களும் தோன்றி மறைகின்றனர். என்ன பயன்! சிலர் ஆடு மாடுகளைப்போல—ஏன், அவற்றினுங் கேடாக வாழ்க்கை நடத்துகின்றனர்; அந்தோ அளியர்! நேற்றுச் செய்ததையே இன்றும் செய்கின்றனர்—இன்று செய்வதே நாளையும்! அதாவது நாடோறுந்தான் உழைக்கின்றனர், உண்ணுகின்றனர் - உறங்குகின்றனர்— சிலர் உழைப்பதுகூடக் கிடையாது. என்ன வாழ்க்கை! புதிய புதிய குறிக்கோள்களும் திட்டங்களும் நிறைவேற்றங்களும் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? புதிய புதிய அருஞ்செயல்கள் புரிந்து—பெரும் பணிகள் ஆற்றிப் புகழுடன் வாழ்வதே குறிக்கோள் வாழ்க்கையாகும். இங்ஙன மின்றிச் செய்ததையே திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருக்கும் நாட்களை வாழ்நாளில் சேர்த்துக் கணக்கிட முடியாது. அதாவது, ஒருவன் ஒரு திங்களில் (மாதத்தில்) முதல் நாள் வீணே உண்டு உறங்கிக் காலங்

கழித்ததுபோலவே மற்ற நாட்களிலும் இருப்பானேயானால் அவன் அத்திங்களில் ஒரு நாள் மட்டும் உயிர்வாழ்ந்த தாகவே பொருள். அதுபோலவே, ஓராண்டு முழுவதும் ஒருநாளில் செய்ததுபோல் மட்டும் செய்து கொண்டிருப் பானேயாயின், அவ்வாண்டில் ஒரு நாள் மட்டும் உயிர் வாழ்ந்ததாகவே பொருள். இப்படிப் பார்த்தால் அவன் வாழ்நாளின் அளவு என்ன? அவன் பல்லாண்டுகள் உயிர் வாழ்ந்தாலும்; உண்மையில் சின்னாட்கள் உயிர் வாழ்ந்ததாகவே பொருள். அதாவது, அவன் உயிரோடு பல ஆண்டுகளாக உலவிக் கொண்டிருந்தாலும், உண்மை யில் அவன் எப்போதே இறந்துவிட்டதாகவே பொருளாம். எனவே, வசையின்றி இசையுடன் வாழ்பவரே உண்மையில் உயிர் வாழ்பவராவார்கள்; இசையின்றி வசையுடன் வாழ் பவரோ உயிர் வாழ்பவராகக் கருதப்பட மாட்டார்கள்.

இதனால்தான், பிறந்தால் புகழோடு பிறக்க வேண்டும். இல்லையெனின் பிறவாதிருப்பதே நல்லது என்று வள்ளுவப் பெருமான் திருவாய் மலர்ந்துள்ளார். பிறக்கும்போதே எப்படிப் புகழோடு பிறக்க முடியும்? அப்படியென்றால் பொருள் என்ன? அதாவது உலகில் மக்களாய்ப் பிறந்த வர்கள் நற்பணிகள் புரிந்து புகழோடு வாழவேண்டும்; அங்ஙனம் வாழாதவர்கள், பிறந்தும் பிறவாதவராகவே கருதப் படுவார்கள் – என்பது பொருள்.

“ வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர் ”

“ தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று ”

வள்ளுவனார் கூறியாங்குப் புகழுக்கு இவ்வளவு புகழ் இருக்கும்போது, பலர் புகழ்ச் செயல்கள் புரியாதிருப்பது

ஏன்? புகழில் ஆவல் மட்டும் இருந்தால் போதுமா? அதற்குரிய செயல் செய்ய வேண்டாவா? செய்யாமல் புகழ்ந்துகொள்ள முயல்வதால் யாது பயன்?. இல்லாத புகழை இருப்பதாகப் பொய்யாய்ப் புனைந்துரையாய்ப் புகழ்ந்து கொள்ளலாமா? இன்னொருவர் புகழை - ஏன், தம் முன்னோர் புகழையே கூட இரவலாகத் தம்மேல் ஏற்றிப் புகழ்ந்து கொண்டால் போதுமா? எனவே, ஒவ்வொருவரும் தாமே புகழான செயல்கள் புரிவாராக! புரிந்து 'புகழோடு வாழ்வாராக!

# 9. வள்ளுவர் காட்டிய அரசியல் மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்ததா?

[பட்டிமன்றப் பேச்சு]

'வள்ளுவர் காட்டிய அரசியல் - மக்கள் ஆட்சியின் அடிப்படையில் அமைந்ததா?' என்னும் வினாவே, வள்ளுவர் காட்டிய அரசியல் மக்கள் ஆட்சியின் அடிப்படையில் அமையவில்லை என்பதைத் தெளிவுறுத்துகிறது. மன்னன் என்னும் சொல்லைப் பத்தொன்பது இடங்களிலும், வேந்து அல்லது வேந்தன் என்னும் சொல்லை இருபத்தேழிடங்களிலும், அரசு அல்லது அரசர் என்னும் சொல்லை நான்கிடங்களிலும், அதே பொருளில் இறைவன் என்னும் சொல்லை எட்டிடங்களிலும் தமது திருக்குறட் பொருட்பாலில் ஆண்டுள்ள திருவள்ளுவனார் காட்டியுள்ள அரசியல், எந்த ஆட்சியின் அடிப்படையில் அமைந்திருக்கக் கூடும்? இன்று மக்களாட்சிதான் மாநிலத்தில் மதிக்கப் பெறுகிறது என்ற காரணத்திற்காக, அதாவது இன்றைய சூழ்நிலையை வைத்துக்கொண்டு, வள்ளுவர் காட்டிய அரசியல் மக்களாட்சியின் அடிப்படையிலேயே அமைந்தது என்று பேசுவது தான் பெருமை கொள்வதா?

சரி சரி! அந்தக் காலத்தில் வள்ளுவர் காட்டிய அரசியலை இனங் கண்டுகொள்வதற்கு, இந்தக் கால அரசியலிலிருந்தே பயணம் தொடங்குவோம். இன்று உலக நாடுகளில் நடைபெறும் அரசியல் ஆட்சி முறைகளை,

மன்னராட்சி, சர்வாதிகாரம் அல்லது 'டிக்டேட்டர்ஷிப்' (Dictatorship) எனப்படும் தனித்தலைவராட்சி, ஜனநாயகம் அல்லது 'டெமாகரசி' (Democracy) எனப்படும் மக்களாட்சி என்னும் மூவகைக்குள் ஏறக்குறைய அடக்கிவிடலாம். இம் மூன்றனுள், இன்று மன்னராட்சி என்பது பெயரளவில் தான்! அஃதும் ஒருவகை மக்களாட்சி போன்றதே! ஆதலின் அதனை விட்டுவிடுவோம். ஏனைய இரண்டனுள், தனித் தலைவர் ஆட்சியில் நிறைகள் குறைவு - குறைகள் மிகுதி; மக்களாட்சியில் குறைகள் குறைவு - நிறைகள் மிகுதி; இதனால் இம் மூன்றனுள் இன்று மக்களாட்சி மதிக்கப் படுகிறதே தவிர, மற்றபடி, இந்த மக்களாட்சி வள்ளுவர் காட்டிய அரசியலின் அடிப்படையாக முடியுமா?

இப்போது நாம், வள்ளுவர் காட்டிய அரசியல் மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்ததா? அல்லது தனித் தலைவராட்சியின் அடிப்படையில் அமைந்ததா? என்று முடிவெடுக்க வேண்டும். என்னைக் கேட்டால், வள்ளுவர் காட்டிய அரசியல், மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்தது மன்று; தனித் தலைவராட்சியின் அடிப்படையில் அமைந்தது மன்று; இரண்டிலுமுள்ள குறைகள் ஒரு சிறிது மின்றி, இரண்டிலுமுள்ள நன்மைகளின் அடிப்படையில் அமைந்ததே வள்ளுவர் காட்டிய அரசியலாகும்- என்று கூறுவேன். மக்களாட்சி, தனித் தலைவராட்சி என்னும் இரண்டிலுமுள்ள நன்மைகளின் திரட்சியே, வள்ளுவர் காலத் தமிழகத்தில் மன்னராட்சியாகக் காட்சி யளித்தது. அத்தகைய மன்னராட்சியே வள்ளுவர் காட்டிய அரசியல் என்பது எனது துணிவான கருத்து. இதற்கு வள்ளுவத்திலிருந்து அகச்சான்றுகள் வேண்டுமா? இதோ! நிரம்ப உண்டு:

பொதுவாக, மக்களாட்சி, தனித் தலைவராட்சி என்னும் இரண்டிலுமுள்ள பெரியதொரு குறையை அடிப் படையாகக் கொண்டு, இவ்விரண்டினைப் பற்றியும் பின் வருமாறும் ஒருவகை விளக்கம் தரலாம். அதாவது மக்கள் ஊழல் செய்ய இடங்கொடுக்கும் ஆட்சி மக்களாட்சி; தலைவர் ஊழல் செய்ய இடந்தரும் ஆட்சி தனித் தலைவ ராட்சி - என்பது எனது பணிவான கருத்து. ஆம்! மக்க ளாட்சியில், மக்கள் புரியுந் தவறுகள் சிலவற்றைக் கடிந்து விலக்கத் தலைவர்கள் தயங்குகின்றனர்; தனித் தலைவ ராட்சியிலோ, தலைவர் புரியுங் கொடுமைகளைக் கடிந்து விலக்க மக்கள் அஞ்சுகின்றனர் – இயலாதவராயும் உள்ளனர். இந்த இரண்டு நிலைகளுக்கும் இடங் கொடுக்க வில்லை திருவள்ளுவர். இவ்விருவகைத் தீமைகளையும், இறைமாட்சி, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெரு வந்த செய்யாமை என்னும் நான்கு அதிகாரங்களிலும் கடுமையாகக் கடிந்துரைத்துள்ளார் வள்ளுவனார்.

ஆம்! மக்களின் வாக்குரிமையைப் பெறுவதற்காக வளைந்து கொடுத்துக்கொண்டு செல்லும் மக்களாட்சி முறையிலுள்ள ஒருவகைக் குறைபாட்டை, வள்ளுவர் காட்டிய அரசியலில் காணவே முடியாது. அவர் கூறுகிறார்: 'யாராயிருப்பினும் அவரிடமுள்ள குற்றநற்றங்களை ஆராய்ந்து, குற்றங் கண்டவழி இரக்கங் காட்டாது ஒறுக்க வேண்டும்' என்று!

> "ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்துசெய் வஃதே முறை".

என்பது குறள். இன்னும் ஈண்டு,

> "தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
> ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து".

என்னும் குறட்பாவையும் நினைவு செய்துகொள்ள வேண்டும்.

இதனினும் கடுமையான - கண்டிப்பான இன்னொரு கருத்தும் தெரிவித்துள்ளார் திருவள்ளுவனார். இன்றைய மக்களாட்சியில் கொலைக் குற்றவாளிகட்கு மட்டுமே சாவுத் தீர்ப்பு அதாவது மரணதண்டனை கொடுக்கப்படுகிறது. மற்ற மாபெருங் கொடுமைகளுள் எது செய்தார்க்கும் சாவுத் தீர்ப்பு கிடையாது. அவ்வளவு போவதேன்! கொலைக் குற்றவாளிகள் சிலருங்கூட சாவுத்தீர்ப்பு கொடுக்கப்படாமல், ஆயுள் தீர்ப்பு அளவில் தப்பித்துக் கொள்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், கொலை செய்தவர்க்குங்கூட சாவுத் தீர்ப்பு கொடுக்கப்படலாகாது, என்பது போன்ற கொள்கையும், இன்றைய மக்களாட்சிக் காலத்தில் சிலவிடங்களில் தலைகாட்டத் தொடங்கி யுள்ளது. இதற்கு நேர்மாறாக, சர்வாதிகாரம் எனப்படும் தனித் தலைவராட்சியிலோ, எடுத்ததற்கெல்லாம் சாவுத் தீர்ப்பு! அதாவது, தலைவருக்குப் பிடிக்காதவர்கள் தலைசீவப்படுவார்கள். இதற்காகச் சில விடங்களில் 'இராணுவ நீதிமன்றம்' என்னும் நாடகம் நடைபெறும்.

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் சில விடங்களில், குற்றம் செய்யாதார் சிலரும் கொலை செய்யப்படுவது உண்மைதான் எனினும், சர்வாதிகாரம் நடைபெறும் வேறு சில இடங்களில், கொலைக் குற்றமேயன்றி வேறு உண்மை யான - உருப்படியான - கொடிய குற்றங்கள் புரிபவரும் கட்டாயம் சாவுத் தீர்ப்பு தரப்படுகிறார்கள். இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறார் வள்ளுவர். 'ஆட்சித் தலைவன் கொடியவர்களைக் கொல்வது, உழவன் பயிர் களைக் கெடுக்கும் களைகளைக் களையும் நற்செயலுக்கு நேர்' என்பது திருவள்ளுவர் கருத்து.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்" என்பது குறட்பா.

இன்றைய மக்களாட்சியில் இந்த நெறிமுறையைக் காண முடியுமா? வள்ளுவர் காலத்து மன்னராட்சியில் இது நடைபெற்றது.

"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேல் கொற்றங் காண்"

என்று சிலம்பும் சிலம்புகிறதே! இதையேதான்,

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

என வள்ளுவர் வாய்மொழியிலும் காண்கிறோம். மாற்றுக் கருத்துடைய அறிஞர்கள் இப்போது அறிவார்களே, வள்ளுவர் காட்டிய அரசியல் மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்ததா? அல்லது அதனினும் மாறானதோர் ஆட்சியின் அடிப்படையில் அமைந்ததா என்று! மற்றும்;

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு".

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறும் மன்ன னிலம்".

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு".

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு".

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு".

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்".

என்பன போன்ற குறள்களைக் காட்டி, வள்ளுவர் காட்டிய அரசியல் மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்தது தான் என்று சிலர் நிறுவலாம். ஆனால், மக்களாட்சிக் கூறுகளைக் கொண்டிருக்கும் இந்தக் குறள்கள், அந்தக் காலத்து மன்னர் ஆட்சியின் மாட்சியை விளக்குவதற்காக, அதாவது, இதுதான் சிறந்த மன்னராட்சி என்று தெளிவுறுத்துவதற் காக வள்ளுவரால் கூறப்பட்டவை என்ற இமாலய உண்மையை மறந்துவிடக் கூடாது. இப்போது சிறுவரும் கூறுவரே, வள்ளுவர் காட்டிய அரசியல் எந்த ஆட்சியின் அடிப்படையில் அமைந்தது என்று! வள்ளுவர் காட்டிய மன்னராட்சி யரசியற்கோட்பாடுகள் முழுவதும், மக்க ளாட்சி யரசியற் கோட்பாடுகளாக மாறக்கூடிய நன்னாள் எந்நாளோ? அந்நாள் வரும். வள்ளுவர் காட்டிய அரசியல் வாழ்க!

# 10. "தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

உலகில் மக்கள் தீயவராக இருக்கக் கூடாது என்பது மட்டுமல்ல - நல்லவராக இருக்க வேண்டும் என்பதும் மிக மிக இன்றியமையாதது. ஆனால் மக்கள் அனைவரும் நல்லவர்களாக இருக்கின்றார்களா?

**நான்கு காரணங்கள்:**

உலகில் ஒரு சிலராயினும்-ஒரு சில வேளைகளிலாயினும் நல்லவர்களாக இருப்பதற்கு நான்கு காரணங்கள் கூறலாம். அவை: அரச ஆணை, சமூகச் சூழ்நிலை, கடவுள் நம்பிக்கை, மனச் சான்று என்பனவாம்.

**அரச ஆணை:**

இந்த நான்கு காரணங்களுள் ஒன்றாலோ அல்லது பலவாலோ மக்கள் நல்லவர்களாய் நடக்கின்றனர்; ஆம்! நாம் இந்தத் தீமையைச் செய்தால் அரசு நம்மை ஒறுக்கும் என்று அரச ஆணைக்கு அஞ்சிச் செய்யாது விடுகின்றனர். அரச ஆணைக்கு அஞ்சுபவர்கள் சிலருங்கூட, தீமைகளை மறைவாகச் செய்கின்றனர். ஆயினும், ஒரு சிலராயினும் அரச ஆணைக்கு அஞ்சித் தீமை செய்யாதிருப்பது மக்கள் குலத்திற்கு ஆதாயக் கணக்கே.

**சமூகச் சூழ்நிலை:**

அடுத்து, அரச ஆணைக்கு அஞ்சுபவரைக் காட்டிலும், சமூகச் சூழ்நிலைக்கு அஞ்சுபவர் மிகவும் குறைவே! சமூகச் சூழ்நிலைக்கு அஞ்சுதல் என்றால், நாம் இந்தத் தீமையைச்

செய்தால், உற்றார் - உறவினர், ஊரார் - உலகத்தார் நம்மை மிகவும் மட்டமாக மதிப்பார்களே என்று அஞ்சித் தீமை செய்யாதிருத்தலாகும். தண்டிக்கும் அரச ஆணைக்கே அஞ்சாதவர்கள், தண்டிக்கும் உரிமை அவ்வளவாக இல்லாத சமூகச் சூழ்நிலைக்கு எங்கே அஞ்சப் போகிறார் கள்? இருப்பினும், சமூகம் பழிக்குமே என்று நாணியாவது ஒருசிலர் தீமை செய்யாதிருப்பது மக்களினத்திற்கு இரண்டாவது ஆதாயக் கணக்காகும்.

**கடவுள் நம்பிக்கை:**

மூன்றாவதாக, அரச ஆணைக்கும் சமூகச் சூழ்நிலைக் கும் அஞ்சுபவர்களைவிட, கடவுளுக்கு அஞ்சுபவர் மிக மிகக் குறைவே! ஏனெனில், மக்கள், அரச ஆணையினையும் சமூகச் சூழ்நிலையினையும் நேரில் காண்கின்றார்கள். இவ் விரண்டாலும், தவறு செய்வோர்க்குத் தண்டனை கிடைப் பதையும் நேரில் அறிகிறார்கள். ஆனால், கடவுளை இவர்கள் நேரில் கண்டதில்லை; மற்றும், தாம் செய்யும் தவறுகளுக்குக் கடவுள் நேருக்கு நேர் உடனடியாகத் தண்டனை கொடுப்பதாகவும் அறியவில்லை; எனவே, கடவுளை எளிதில் சாப்பிட்டு விடுகிறார்கள். இதற்குச் சான்று, நாள்தோறும் மணிக்கணக்கில் கடவுள் வழிபாடு செய்வோர் பலர், நாள்தோறும் கணக்கற்ற தீமைகளைச் செய்து வருவதேயாம். இருப்பினும், கடவுளுக்கும் அஞ்சித் தீமை செய்யாதவரும் ஒரு சிலர் 'கண்ணை-மூஞ்சைக்' காட்டிக் கொண்டிருப்பது, மக்கள் குலத்தின் மூன்றாவது ஆதாயக் கணக்காகும்.

**மனச் சான்று:**

இறுதியாக மனச் சான்றுக்கு வருவோமே! அரச ஆணைக்கும் சமூகச் சூழ்நிலைக்கும் கடவுளுக்கும் அஞ்சு

பவர்களைக் காட்டிலும், தம் சொந்த மனச் சான்றுக்கு அஞ்சுபவர்கள் மிகமிக மிகக் குறைவே! ஏனெனில், 'அரசும் சமூகமும் கடவுளும் தம்மைக் தண்டிக்கலாம்; ஆனால் தம் மனச் சான்று தம்மைக் குறிப்பாக-சிறப்பாக ஒன்றும் தண்டிக்க முடியாதே' என்பது அவர்தம் எண்ணம். ஆனாலும் இங்கே,

> " தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும் "

என்னும் வள்ளுவரின் வாய்மொழி நினைவுக்கு வராமல் இல்லை. ஆனால் மரத்துப்போன மனம் உடையவர்க்கு மனச் சான்று ஏது? மனச் சான்று என ஒன்று இருந்தால் அல்லவா அது அவர்களைத் தண்டிக்கக் கூடும்? இத்தகைய உலகிலும் மனச் சான்று என ஒன்று உடையவராகி, தம் நெஞ்சே தம்மைச் சுடுவதற்கு அஞ்சி, தவறு செய்யாதவர் சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர். இந்த அமைப்பு மக்கள் இனத்தின் நான்காவது ஆதாயக் கணக்காகும்.

**உண்மையும் போலிமையும்:**

மொத்தத்தில் காணுங்கால், அரச ஆணை, சமுதாயச் சூழ்நிலை, கடவுள் நம்பிக்கை, மனச்சான்று ஆகிய நான்கனுள், முன்னைய மூன்றுக்கு அஞ்சித் தீயன செய்யா திருப்பதைக் காட்டிலும், 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்ற வகையில், மனச் சான்றுக்கு அஞ்சித் தீயன செய்யாது, மேலும் நல்லன செய்தலே சாலச் சிறந்தது; இஃதே இயற்கை அறமாகும் - இஃதே உண்மை அறமாகும். இஃதன்றி முன்னைய மூன்றுக்கும் அஞ்சித் தீமை செய்யா திருப்பதும் நல்லன செய்வதாக நடிப்பதும் போலிமை அறமேயாம்.

**தெய்வத் தன்மை :**

மக்கள் பெரும்பாலும் பிறர் நலம் பேணுவதனினும், தம் நலம் பேணுவதே இயற்கை; இஃது ஒருவகை 'உயிரியல்' என்றும் கூறலாம். இதனால்தான், சிலர்-இல்லையில்லை பலர், தம் நலத்திற்காகப் பிறர் நலத்தைப் படுகொலை புரிகின்றனர்; பிறர் நலத்தை வெட்டிப் புதைத்து, அந்தச் 'சமாதி'யின்மேல் தம் நலம் என்னும் கொடியை நட்டுப் பறக்க விடுகின்றனர். இங்கே மனச்சான்றுக்கு இடமில்லை-ஆம்-இடமேயில்லை. இந்நிலையில் ஒருசிலர் தம் நலத்தைப் போலவே பிறர் நலத்தையும் பேணுகின்றனர் எனில், - இன்னும் வேறுசிலர், தம் நலத்தைவிட பிறர் நலத்தையே பெரிதாய்ப் பேணுகின்றனர் எனில், அவர்களிடத்தே மனச் சான்று வேலை செய்கிறது என்பது பொருள். இங்கே மனச்சான்று தெய்வத்தன்மை பெற்றுவிடுகிறது.

**இயற்கையும் செயற்கையும் :**

உண்மையான மனச்சான்றை உருவாக்கவே கடவுள் நம்பிக்கை, சமூகக் கட்டுப்பாடு, அரச ஆணை என்னும் மூன்றும் வேலை செய்கின்றன. இம்மூன்றின் ஆற்றலால் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தாக்கப்பட்டு வருகின்ற மக்களினத்திலே, இத்தாக்குதலின் பயனாய் மனச்சான்று என ஒன்று செயற்கையாக உருவாகி, இயற்கைப் பண்பு என்று சொல்லும் அளவிற்கு நாளடைவில், பழக்கப்பட்ட பொருளாகி நல்ல வேலை செய்து வருகிறது. ஆனால், இந்த மனச் சான்று, இத்தனை ஆயிரம் ஆண்டுகள் பழக்கப் பட்டு இயற்கைப் பண்பாகியுங்கூட, எல்லாரிடத்தும் நின்று நிலைத்து நற்செயல் புரியாமல், ஒரு சிலரிடத்து மட்டும்—ஒருசில வேளைகளில் மட்டும் தலைகாட்டி மறைந்து விடுவது, மக்கள் குலத்திற்குப் பெரிய இழப்புக் கணக்கேயாம்.

இனியும் இந்த இழப்பு நிலைக்கு இடம் தராமல், மாந்தர், தம்மைச் சுடும் மனச்சான்று உடையவராகி, தீயன விலக்கி நல்லனவே புரிவாராக! பின்வரும் திருக் குறளை ஈண்டு மீண்டும் மீண்டும் நினைவு கூர்வோமாக :-

'தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்'.

'தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்'.

'தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.'

# 11. ஒரு நல்ல குறிக்கோள்

**குறிக்கோள் :**

" பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது
கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து
ளானே."

என நவின்றுளார் நாவுக்கரசர். குழவிப் பருவ முதல் முதுமைப் பருவம் வரை மாந்தர்க்கு வாழ்க்கையில் ஒரு நல்ல குறிக்கோள்—ஓர் உயரிய நோக்கம் இருக்கவேண்டும் என்பதை இந்தத் தேவாரப் பாடலால் பொதுவாக அறிந்து கொள்ளலாம்.

**வினா-விடை :**

சமயப் பெரியாராகிய நாவுக்கரசரின் குறிக்கோள், தன்னலம் துறந்து, பிறர் நலம் பேணி, உலகிற்குத் தொண்டு புரிந்து இறைவனை அடையவேண்டும் — என்பதாகும். ஒருவர் தாம் இறைவனை அடைவதற்காக—அதாவது, வீடுபேறு எய்துவதற்காக அதற்குரிய நெறியில் ஒழுகுவது—தன்னலமாயிற்றே! நாவுக்கரசர் பிறர்நலம் பேணிச் செய்த தொண்டு யாது?— என்ற வினா இங்கே காத்துக் கிடப்பது தெரிகிறது. அதற்குரிய விடையும் இங்கே காத்துக் கிடக்கிறது :-

நாவுக்கரசர் ஏழாம் நூற்றாண்டில் நாட்டில் ஒரு பெருந்தலைவராய்த் திகழ்ந்தவர். அவர், நாட்டு மக்களிடையே, நல்ல பேச்சாலும் எழுத்தாலும் நல்லற நெறிகளைப் பரப்பியதல்லாமல், தாம் ஓர் உயர்ந்த பணியினைச் செய்தும் காட்டினார்.

இன்று தெருக்களைத் தூய்மை செய்யும் தொழிலாளர்களைத் தோட்டிகள் என்றும் ஒட்டர்கள் என்றும் உலகம் இழித்துப் பேசுகிறது. தொழில்களுக்குள் மிக மிகத் தாழ்ந்த தொழிலாகக் கருதப்படுவது இந்தத் தொழில்தான்! இது போன்றதொரு தொழிலைத்தான், நாட்டின் மாபெருந் தலைவராய் மதிக்கப் பெற்ற நாவுக்கரசர் தம் வாழ்க்கையில் செய்து காட்டினார்.

மண்ணெண்ணெய் வாங்கி வருவதற்காக அல்ல-மணம் மிக்க மலர்மாலைகளை வாங்கிவரப் பெற்றோர் அனுப்பினாலும், கடைக்குச் சென்றுவரக் கூசுகின்ற நம் நாட்டுப் பிஞ்சுப்படிப்பாளிகள், நாவுக்கரசர் நாட்டிற்குச் செய்த நல்ல பணியினைப் பற்றிச் சிறிது நேரமாயினும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அண்ணல் காந்தியடிகளின் அறக்குடிலில் தாமும் வந்து சேர விரும்புவதாகக் கடிதம் எழுதுவோர்க்கு, அண்ணல் அவர்கள், 'நீங்கள் இங்கே வந்து சேரின், நீங்களே மலக் கூடம் தூய்மை செய்யவேண்டும்' என்று பதில் எழுதிய வரலாறு ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

**உழவாரப் பணி:**

திருநாவுக்கரசரின் தொண்டுக்கு 'உழவாரத் திருப்பணி' என்பது பெயர். அவர், வடிவத்தில் 'தோசை திருப்பி' போல் காட்சியளிக்கும் இரும்பாலான கருவியொன்றினைக்

கையில் வைத்திருப்பார். அதற்கு 'உழவாரப் படை' என்பது பெயர். இன்றும் நாவுக்கரசரின் சிலையிலும் படத்திலும் கையில் அந்தக் கருவி இருப்பதைக் காணலாம். அவர் அந்தக் கருவியால், திருக்கோயில்களிலும், தெருக்களிலும் முளைத்திருக்கும் வேண்டாத புல் பூண்டுகளையெல்லாம் செதுக்கித் தூய்மை செய்வார். இந்தப் பணி முதலில் தொடங்கப்பெற்ற ஊர், தென்னார்க்காடு மாவட்டத்தில் கெடில ஆற்றங்கரையில் உள்ள திருவதிகையாகும். புல் பூண்டுகளைச் செதுக்குவதோடு இப்பணி அமைந்துவிடவில்லை; தெருவிலுள்ள குப்பை கூளங்களை அப்புறப்படுத்தித் தூய்மை செய்வதும் இப்பணியுள் அடங்கும். திருவதிகையில் தொடங்கிய இப்பணி, திருநாவுக்கரசர் சென்ற விடங்களிலெல்லாம் அவருடன் நிழல்போல் தொடர்ந்து சென்றது.

**மாதிரி நகர்:**

திருநாவுக்கரசரால் தொடங்கப்பெற்று அறிமுகம் செய்யப்பட்ட உழவாரப் பணி, நாடு முழுதும் பல்வேறு ஊர்களிலும் பரவிப் பலராலும் செய்யப்பட்டது. 'திருவதிகைத் தெருக்களைப் போல் நம்மூர்த் தெருக்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்' — எனப் பல ஊர்களிலுமுள்ள 'திருவீதியாண்டார்' களுக்குக் கட்டளையிடப்பட்டதாகப் பல ஊர்க் கல்வெட்டுகளும் கூறுகின்றன. தெருத் தூய்மையை மேற்பார்வையிடும் அலுவலர் 'திருவீதியாண்டார்' என அக்காலத்தில் அழைக்கப்பட்டனர். அன்று, திருவதிகை ஒரு 'மாதிரி நகர்' ஆகக் கருதப்பட்டது என்பது கல்வெட்டுகளால் புலப்படுகிறது. பாண்டிநாட்டுத் திருக்கோயில்களின் திருவிழாக் காலங்களில், கொடியேற்று விழாவின் முதல் நாள், 'திருவீதி காணும் திருவிழா' என ஒரு விழா நடைபெறுமாம். அதாவது, தெருக்கள்

தூய்மையாய் இருக்கின்றனவா என நாவுக்கரசர் தெருத் தோறும் சென்று கவனிக்கும் பொருளில், அவரது சிலையை அணிபெறச் செய்து தெருக்களில் ஊர்வலம் வரச் செய்வார் களாம். அதற்கு ஏற்றாற்போல், தெருக்களை முன்கூட்டித் தூய்மை செய்து வைத்திருப்பார்களாம்.

இந்தத் தூய்மை, நாட்டில் எல்லா ஊர்களிலும் எல்லாத் தெருக்களிலும் எல்லா நாட்களிலும் செய்யப்படு மாயின், எவ்வளவோ அழகாக-நாகரிகமாக இருக்கும். மீண்டும் இவ்விழா இப்போது ஊர்தோறும் நடைபெறுவது நல்லது. நம் மக்கள் தூய்மையாக வைத்திருப்பார்களா?

புதுச்சேரியில் நாராயணசாமி என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் இளமையில் பிரான்சு நாட்டில் ஓர் ஊரில் படித்துக் கொண்டிருந்தபோது நிகழ்ந்த செய்தி ஒன்றை என்னிடம் தெரிவித்தார். அதாவது:

''கல்விக்கூடம் செல்வதற்காக நான் வீட்டிலிருந்து வெளியே தெருவுக்கு வந்தேன். அப்போது அஞ்சல்காரர் (தபால்காரர்) ஓர் அஞ்சல் உறையை என்னிடம் தந்தார். உறையைப் பிரிப்பதற்காக நான் உறையின் நுனிப்பகுதி யைச் சிறிது கிழித்துக் கீழே போட்டேன். அப்போது பின்னால் வந்துகொண்டிருந்த பிரஞ்சுப் பெண்மணி ஒருவர் என்னை நோக்கி, 'இது போல் கீழே போடக் கூடாது; அதோ உள்ள குப்பைத் தொட்டியில் கொண்டு போய்ப் போட வேண்டும்' என்று கூறி அந்த அம்மையாரே எடுத்துக் கொண்டுபோய்ப் போட்டார்'' என்று கூறினார்.

நம் நாட்டில் இந்த நிலை இன்னும் எத்தனை ஆண்டு கள் கழித்து வருமோ தெரியவில்லை. ஏதோ சுற்றுப்புறச் சூழல்-சுற்றுப்புறத் தூய்மை என ஆரவாரமாக இப்போது பேசப்படுகிறது. இது முழு அளவில் வெற்றிபெற வேண்டுமே!

எனவே, நாவுக்கரசரின் இந்த நல்லதொரு குறிக் கோளையாவது நாமும் பின்பற்றிப் பணிபுரிவோமாக!

# 12. ஓவியக் கலையில் மகளிர் பங்கு

**ஓவியம்:**

'ஓவியக் கலையில் மகளிர்' என்னும் தொடரில் மகளிர், ஓவியம் என்னும் இரண்டு சொற்கள் உள்ளன. எனவே, ஓவியம் பற்றியும் ஓவியத்தோடு மகளிர்க்கு உள்ள தொடர்பு பற்றியும் ஆராயலாம் என எண்ணுகிறேன். முதலில் ஓவியம் பற்றிப் பார்ப்போம்.

கலைகள் அறுபத்து நான்கு என்று கூறப்படுவதை நாம் அறிவோம். இந்த எண்ணிக்கை ஒரு காலத்தில் கூறப்பட்டது. நாளடைவில் மேலும் பல கலைகள் வளர்ந்திருக்கலாம். கலைகளுள் ஓவியக் கலை சிறப்புடையது. பல கலைகட்கு ஓவியக்கலை முன்னோடியாகவும் அடிப்படையாகவும் உள்ளது. வடிவக் கணிதம் (Geometry), அறிவியல் (Science), பொறியியல் (Enginery) முதலிய கலைகட்கு ஓவியம் இன்றியமையாதது. வடிவக் கணிதமே ஒருவகை ஓவியந்தான். அறிவியல் துறையில் பல பொருள்களைப் படைத்து உருவாக்க, முதலில் தாளில் ஓவியம் வரைந்து வைத்துக் கொண்டு அதைப் பார்த்து வடிவங்கள் அமைக்கின்றனர். கட்டடம் கட்ட முன் கூட்டியே போடப்படும் வரை படமும் (Plan) ஒரு வகை ஓவியமே. சிற்பம் செதுக்கிச் செய்யவும் எழுதப்பட்ட மாதிரி ஓவியம் தேவைப்படுகிறது. மற்றும் மொழியின் எழுத்துக்களையும் ஒருவகை ஓவியம் எனலாம். சீன மொழி எழுத்துகள் ஓவிய எழுத்துகள் என்பதைப் பலரும் அறிவர். மொழி தோன்றுவதற்கு முன் ஒரு பொருளைக் குறிக்க எழுதிக்காட்டியிருப்பர். இப்போதுங்

கூட, சொல்வது புரியவில்லை என்றால், விரலாலே மண லிலோ - எழுது கோலாலே தாளிலோ வரைந்து காட்டு வதைக் காணலாம்.

இவ்வாறு பல கலைகளின் ஊடும் நீக்கமற நிற்கும் ஓவியம், உலகப் பொதுமொழி என்று சொல்லப்படும் தகுதி யும் உடையதாகும். யானை என்று தமிழில் சொன்னாலும் எழுதினாலும் தமிழ் அறியாதவர்க்குப் புரியாது. வாரணம் என்று சமசுகிருதத்தில் சொன்னாலும் எழுதினாலும் அம் மொழி அறியாதவர்க்குப் புரியவே புரியாது. மற்றும், Elephant என்று ஆங்கிலத்தில் சொன்னாலும் எழுதினா லும் ஆங்கிலம் அறியாதார்க்குப் புரியாதுதானே. ஆனால் யானையின் படம் போட்டுக் காட்டினால் எல்லா மொழி யினரும் புரிந்து கொள்வர். இதனால், ஓவியத்தை ஓர் உலகப் பொது மொழி என்று கூறலாம் அல்லவா?

சில பொருள்களைப் பார்த்தறியாதவர்க்கு, எவ்வளவு தான்-எத்தனை சொற்களால்தான் சொல்லியும் எழுதியும் விளக்கினாலும் முற்றிலும் தெளிவாகப் புரியாது; யானை கண்ட குருடர்களின் கதை போன்றுதான் இருக்கும். ஆனால், ஆயிரம் சொற்களால் விளக்க முடியாத ஒரு பொருளை ஓவியமாக எழுதிக் காட்டினால் எவரும் எளி தில் புரிந்து கொள்வர். ஒரு படம் ஆயிரம் சொற்களின் பெறுமானம் உடையது என்னும் கருத்துடைய 'One picture is worthy of thousand words' என்னும் ஆங்கிலத் தொடர் இங்கே ஒப்புநோக்கத் தக்கது.

அடுத்து, 'ஓவியம்' என்பதன் பெயர்க் காரணத்தைப் பார்ப்போமா? பிற மொழிகளில் உள்ள பல்வேறு பெயர் களைவிட, தமிழ் மொழியில் உள்ள 'ஓவியம்' என்னும் பெயர் மிகவும் பொருத்தமானது. ஓவியம் என்பது, ஒரு

பொருளைப் பார்த்தோ அல்லது முன்பு பார்த்ததை நினைத்துக் கொண்டோ, அதேபோல் பாறையிலோ - சுவரிலோ-ஓலையிலோ-துணியிலோ - தாளிலோ - அட்டையிலோ-மரப்பலகையிலோ-இரும்புத் தகட்டிலோ-கண்ணாடியிலோ-இன்னும் ஏதாவது ஒன்றிலோ வரைந்து அமைப்பதாகும். ஓவியத்திற்குத் தமிழில் ஓவு, ஓவம் என்னும் பெயர்களும் உண்டு. ஓவ்வுதல் என்றால் ஒத்திருத்தல். ஒவ்வுவது ஔவு-ஓவம்-ஒவ்வுவது ஓவியம் எனக் கருத்து கொள்ள வேண்டும். எனவே, ஓவியம் என்பது மிகவும் பொருத்தமான பெயர்தானே.

**மகளிர் தொடர்பு:**

இனி ஓவியத்தோடு மகளிர்க்கு உள்ள தொடர்பைப் பார்க்கலாமா? பழைய புராண - இதிகாச நூல்கள் சிலவற்றில் 'மகளிர் ஓவியம்' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதாவது, உயர்குடி மகளிர் நடனக் கலையோடு ஓவியக் கலையும் பயின்றிருக்க வேண்டும் என்பதான ஒரு கருத்து கூறப்பட்டுள்ளதாம். மற்றும், இந்த நாட்டின் முதல் ஓவியர் 'சித்திரலேகா' என்னும் பெண்மணி என்று சில புராணங்கள் அறிவிப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. சித்திரக்கலையில் வல்லவர் ஆதலின் 'சித்திரலேகா' எனப் பெயர் வழங்கப்பட்டிருக்கலாம்.

சரி, தமிழ் இலக்கியங்களில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றும் ஒரு சிறிது நோக்குவோமே. ஐம்பெருந் தமிழ்க் காப்பியங்களுள் மணிமேகலையும் ஒன்று. மணிமேகலை என்னும் பெண்மணி ஓவிய நூலில் அறிவிக்கப்பட்டுள்ள ஓவியம் வரையும் முறைகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தவளாம். இதனை அந்தக் காப்பியத்தில் உள்ள,

" ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை "
(2 – 31, 32)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். தமிழில் ஓவியம் பற்றிய நூல்கள் முன்பு இருந்தன - இப்போது கிடைக்க வில்லை - அழிந்து போய்விட்டன என்பது இதனால் தெரி கிறது. 'ஓவியச் செந்நூல்' என்று கூறப்பட்டிருப்பது இங்கே எண்ணத்தக்கது. இந்நூல் இப்போது இல்லை. இந்தப் பகுதியில் உள்ள 'துறைபோகிய' என்னும் தொடர், இந்தத் துறையில் முழுப் புலமையும் திறமையும் பெற்றவள் என்பதை அறிவிக்கிறது.

அடுத்து, ஐம்பெருங் காப்பியத்துள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்திற்குள்ளும் சென்று பார்ப்போமே. மாதவி என்னும் பெண், நிலா முற்றத்தில், 'பதுமாசனம்' போட்டு அமர்ந்தபடி யாழ் வாசித்தாள் - என்ற ஒரு செய்தி கூறப் பட்டுள்ளது. அவள் அமர்ந்திருந்த இருக்கை பற்றிக் கூறும் பாடல் பகுதியை இங்கே தருகிறேன்:

" ஒன்பான் விருத்தியுள் தலைக்கண் விருத்தி
நன்பால் அமைந்த இருக்கைய ளாகி "
(8 – 25, 26)

என்பது அப்பகுதி. விருத்தி என்றால் உடற்பயிற்சியின் ஒரு வகையான 'ஆசனம்' ஆகும். ஆசனம் என்னும் சமசுகிருதச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் 'இருக்கை' என்பதாகும். 'இருப்பு' என்றும் சொல்வதுண்டு. 'ஒன்பான் விருத்தி' என் றால் ஒன்பது ஆசனங்கள்; 'தலைக்கண் விருத்தி' என்றால் ஒன்பதில் முதலாவதான 'பதுமாசனம்' ஆகும். பதுமாசன மாகிய இருக்கை அமைத்துக்கொண்டு மாதவி யாழ் வாசித்தாளாம். பழைய உரையாசிரியராகிய 'அடியார்க்கு

நல்லார்' என்பவர், இந்தப் பகுதிக்கு எழுதியுள்ள உரையிலிருந்து ஒரு சிறு பகுதியை இங்கே தருகிறேன்:

"இதனுள் விருத்தி என்பது இருப்பு. ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பல உள"- என்பது அந்த உரைப் பகுதி. இதிலிருந்து நாம் அறியவேண்டுவன:- ஓவிய நூல் தமிழில் இருந்திருக்கிறது; அதில் சொல்லப்பட்டுள்ள செய்திகளை மாதவி அறிந்து வைத்திருந்தாள்; அதன்படி இருக்கை அமைத்து அதாவது ஆசனம் போட்டு அமர்ந்து'யாழ்வாசித்தாள் என்பதாகும். பண்டு தொட்டுப் பெண்கள் ஓவியக் கலையில் வல்லவர்களாய் இருந்திருக்கிறார்கள் என்பதை இதனால் நாம் அறிய முடிகிறதல்லவா?

இப்போது மீண்டும் ஓவியக் கலை தமிழ்நாட்டில் வளர்ந்து வருகிறது. பிறநாட்டு ஓவிய முறைகளும் அறிமுகமாகியுள்ளன. பெண்கள் முன்போலவே ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்று வருகின்றனர், பள்ளிக் கூடங்களில், ஓவியம் கற்ற பெண் ஆசிரியைகள் மாணவிகட்கு ஓவியம் கற்றுக் கொடுப்பதை அறியலாம். ஒரு சுண்ணக் கட்டியும் ஒரு கரும் பலகையும் இருந்தால் போதும்; அலாவுதீன் அற்புத விளக்குபோல, உலகத்தில் உள்ள எந்தப் பொருளையும் கரும்பலகைக்குள் கொண்டு வந்து காட்டலாம். எனவே, மகளிர் ஓவியக் கலையில் நன்கு தேர்ச்சி பெற்று ஓவியங்களைப் படைக்கவேண்டும்.

**பின்னல் வேலை:**

பள்ளிகளில் தையல் ஆசிரியைகள் தையலோடு பின்னல் வேலையும் கற்றுத் தருகின்றனர். பின்னல் வேலையில் ஓவியக்கலை ஊடுருவி நிற்கிறது. துணியில் பல வகைப் பொருள்களின் உருவங்கள் வண்ண நூல்களால் பின்னப்படு

கின்றன. செடி-கொடி-மலர் வகைகள், ஆபரண வகைகள், பறவை-விலங்கு முதலிய உயிரிகள் - பல அஃறிணைப் பொருள் வகைகள் ஆகியவற்றின் வடிவங்கள் துணியில் பின்னப்படுகின்றன. மணிகளால் பின்னும் பொருள்களில் கூட உருவங்கள் அமைக்கின்றனர். இந்தப் பின்னல் ஓவியக் கலை ஆகாதா? ஓவியக்கலையின் அடிப்படையிலேயே உருவங்கள் பின்னி அமைக்கப் பெறுகின்றன. இக்கலை ஆங்கிலத்தில் 'எம்பிராய்டரி' (Embroidery) என்று சொல்லப்படுவது நாம் அறிந்ததே.

பள்ளிகளில் மட்டுமன்று; வீடுகளிலுங்கூட, ஓரளவு வயது முதிர்ந்த பெண்களுங்கூட, இந்த ஓவியப் பின்னல் வேலையைச் செய்து வருகின்றனர். இது, ஓய்வு நேரத்தை நன்முறையில் கழிக்கவும் மன ஒருமைப்பாடு உண்டாகவும் உதவும். அழகிய முறையில் பொருள்களைப் பின்னி விற்பனையும் செய்யலாம். ஓய்வு நேரத்தை வீணடிக்கும் பெண்கள் இந்தப் பின்னல் வேலையைச் செய்து பொழுதை நன்முறையில் கழிக்கலாம்.

**கோலம் போடுதல்:**

இது மட்டுமா? இன்னும் ஒன்று பார்ப்போமா? மூன்று அல்லது ஐந்து வயது முதற்கொண்டே பெண்ணினம் ஒரு வகையான ஓவியக் கலையில் பயிற்சிபெறத் தொடங்கு கிறது என்று கூறலாம். கோலம் போடுதலைத்தான் சொல்கிறேன். தமக்கை, தாய், பாட்டி முதலியோர் போடும் கோலங்களைப் பார்த்ததும், மூன்று வயதுச் சிறுமியும், நான் கோலம் போடப் போகிறேன் — மாவு கொடுங்கள் என்று கேட்டு வாங்குகிறாள்; ஏதோ மனம் போன போக்கில் மாவைச் சிந்தித் தான் போட்டதற்குத் தனக்குத்தானே ஓர் உருவத்தின் பெயர் சொல்லி மகிழ் கிறாள்.

கோலம் போடுவதற்கு அரிசி மாவு, சுண்ணப்பொடி, மஞ்சள் பொடி, குங்குமம், கரிப்பொடி, பல வண்ண மலர், பல வண்ணக் குழம்புகள் முதலியன பயன்படுத்தப் படுகின் றன. இந்தக் கோலங்களில், கடவுள் உருவம், தேவதைகள் உருவம், பறவை-விலங்குகளின் வடிவம், செடி கொடி மலர்களின் வடிவம், மற்றும் பலவகைப் பொருள்களின் உருவங்கள் அமைக்கப்படுகின்றன. இதற்கு ஓவியக் கலை யறிவு மிகவும் தேவைதானே! எனவே, கோலம் போடுத லிலும் ஓவியக் கலை ஊடுருவியிருப்பது புலப்படும்.

தமிழ்நாட்டில் பெண்கள் சாதாரண நாட்களில் வீட்டின் தெரு முற்றத்தில் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் தண்ணீர் தெளித்துப் பெருக்கிக் கோலம் போடுவதைக் காணலாம். பண்டிகை நாட்களிலும் விழா நாட்களிலும் மற்றும் மார்கழி மாதம் முழுவதும் தெரு முற்றத்தில் பலவகை வண்ண ஓவியங்களைக் கோலம் என்ற பெயரில் அமைப்பதைக் காணலாம். ஒரு வீட்டாரோடு இன்னொரு வீட்டார் போட்டி போட்டுக் கொண்டு சிறந்த வண்ணங்களால் அழகிய வடிவங்களை அமைப்பதுண்டு.

தை முதல் நாளாகிய பெரும்பொங்கல் நாளன்று, தெரு முற்றத்தில், பொங்கல் பானை, அடுப்பு, தேங்காய், பழம், கரும்பு, மஞ்சள் கொத்து முதலிய பொருள்களின் வடிவங்களைக் கோலத்தில் அமைப்பதைப் பல இடங்களில் காணலாம்.

தமிழகம் போலவே, கர்நாடகத்திலும் மகாராட்டிரத் திலும் 'ரங்கவல்லி' (ரங்கோலி) என்னும் பெயரிலும், வங்காளத்தில் 'ஆல்போணா' என்னும் பெயரிலும், மற்றும் பல பகுதிகளிலும் மகளிர் கோலம் போட்டு மகிழ்வர்.

இதுகாறும் கூறியவற்றால், பல கோணங்களில்-பலவித முறைகளில், மகளிர்க்கும் ஓவியக் கலைக்கும் உள்ள தொடர்பினை அறியலாம். ஓவியக் கலையில் மகளிர் பங்கு மிகுதி.

# 13. "சொல்லின் செல்வன் சொல்லாமல் சொன்னவை"

இருவரின் ஒருவகை உரையாடல் வருமாறு: இன்றைக்கு என்ன சமையல்? ஒரு பச்சடி – என்ன பச்சடி? தேங்காய்ப் பச்சடி. ஓர் ஊறுகாய் - என்ன ஊறுகாய்? எலுமிச்சை. ஒரு துவையல் - என்ன துவையல்? புதினாத் துவையல். ஒரு பொரியல் - என்ன பொரியல்? 'கேரட்' பொரியல். ஒரு வறுவல் - என்ன வறுவல்? வாழைக்காய். ஒரு 'சிப்சு'– என்ன சிப்சு? உருளைக்கிழங்கு. ஒரு கீரை - என்ன கீரை? சிறுகீரை. ஒரு கூட்டு - என்ன கூட்டு? கோசுக் கூட்டு. ஒரு சாம்பார்-என்ன சாம்பார்? வெண்டைக்காய். ஓர் இனிப்பு-என்ன இனிப்பு? இலட்டு. ஒரு பாயசம் - என்ன பாயசம்? சேமியாப் பாயசம்.

இவ்வாறு உரையாடல் நீண்டு கொண்டிருக்கிறது. என்ன-என்ன-என்று கேட்கக் கேட்கச் சொல்லாமல், என்ன சமையல் என்ற ஒரு கேள்விக்கே தொடர்ந்து இவ்வளவு பதில்களையும் கூறியிருப்பின், சொல்செட்டு உண்டாக, காலமும் முயற்சியும் மிச்சப்பட்டிருக்கும்.

இதுபோலவே, பெரியவர் ஒருவர் தம்மிடம் புதிதாய் வந்த ஒருவரை நோக்கி, 'நீ யார்' என்று கேட்டதும், என் பெயர் இன்னது; என் பெற்றோர் இன்னார்; யான் இன்னாரிடம் வேலை பார்க்கிறேன்; இப்போது இன்ன நோக்கத்துடன் இங்கே வந்துள்ளேன் – என்று வந்தவர் கூறின் சொல் செட்டாகும். மற்றும், பல கேள்விகள்

கேட்ட பின்னர்ச் சொல்ல வேண்டிய பதில்களை 'நீ யார்' என்ற ஒரு கேள்வி கேட்டதும் சொல்லிவிடின், இது சொல் செட்டோடு - சொல் திறமையுமாகும். இந்தத் திறமை அனுமனிடம் காணப்பட்டது.

முதல் முதலாக இராம-இலக்குமணரைக் காணவந்த அனுமனை நோக்கி 'நீ யார்' என இராமன் வினவியதும், "என் பெயர் அனுமன்; தந்தை—காற்றின் வேந்தன் (வாயு பகவான்); தாய் அஞ்சனை; சுக்கிரீவனிடம் யான் ஏவல் செய்கிறேன்; அவர் அனுப்ப யான் உங்களைக் கண்டு பேச வந்துள்ளேன்" - என்று அனுமன் விடையிறுத்தான். இதனைக் கிட்கிந்தா காண்டம் அனுமப் படலத்திலுள்ள பின்வரும் பாடல்களால் அறியலாம்: (கம்பராமாயணம்)

" மஞ்செனத் திரண்ட கோல மேனிய
மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி
நளிர் இரும்பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்துதலர்ந்த செய்ய கண்ண! யான்
காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்
நாமமும் அனுமன் என்பேன் ".

" இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப்
பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன்;
தேவ நும்வரவு நோக்கி
விம்மலுற்று அனையான் ஏவ,
வினவிய வந்தேன் என்றான் —
எம்மலைக் குலமும்தாழ இசை சுமந்து
எழுந்த தோளான்".

இதைக் கேட்டதும், இராமனுக்கு அனுமனின் சொல் திறமை வியப்பளித்தது; அனுமனைச் 'சொல்லின் செல்வன்' எனப் புகழ்ந்து, இவன் (அனுமன்) நான்முகனாய் இருப்பானா? அல்லது சிவனாய் இருப்பானா எனப் பாராட்டினான். இதனை,

“இல்லாத உலகத் தெங்கும்
இங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே
என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றோ
யார்கொல் இச் 'சொல்லின் செல்வன்'
வில்லார் தோள் இளைய வீர!
விரிஞ்சனோ விடைவல் லானோ?”

என்னும் பாடலால் அறியலாம். இத்தகைய அனுமன், ஒரு சொல் கூடச் சொல்லாமலேயே உணர்த்திய செய்திகளும் உண்டு. இனி அவற்றைக் காண்பாம்:

இலங்கையிலிருந்து மீண்ட அனுமன் வானரர்களிடம் தன் பெருமையைக் கூற வெட்கப்பட்டுக் கொண்டு தான் இலங்கையில் ஆற்றிய வீரச் செயல்களைக் குறிப்பாலேயே உணரச் செய்தானாம். அனுமன் இலங்கையில் ஆற்றிய மறச் செயல்களைக் குறிப்பால் உணர்ந்துகொண்ட வானரர்கள் அனுமனை நோக்கிப் பின்வருமாறு கூறினாராம் :

“நீ இலங்கையில் போர் புரிந்திருக்கிறாய் என்பதை, உன் புண்களே உரைக்கின்றன. நீ அரக்கர்களை வென்று விட்டாய் என்பதை, நீ உயிரோடு திரும்பி வந்துள்ளமையே உரைக்கிறது. நீ இலங்கையைக் கொளுத்தியிருக்கிறாய் என்பதை, அதோ தெரியும் பெரும் புகையே ஓதுகின்றது. அரக்கர்களும் வல்லவர்கள் என்பதை, நீ சீதையை மீட்டு

வர முடியாமையே அறிவிக்கின்றது – இவற்றையெல்லாம் நீ சொல்லாமலே யாங்கள் தெரிந்து கொண்டோம்'' – என வானரர்கள் கூறினார்களாம். இதைச் சுந்தரகாண்டம் திருவடி தொழுத படலத்திலுள்ள

'' பொருதமை புண்ணே சொல்ல,
வென்றமை போந்த தன்மை
உரைசெய, ஊர்தீ யிட்டது
ஓங்கிரும் புகையே ஓத,
கருதலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தோம் பின்னர்
என்னினிச் செய்தும் என்றார்''

என்னும் பாடலால் அறியலாம். இதில் கம்பர் பெருமானின் சிறந்த கைவண்ணமும் அறியக் கிடக்கிறது.

அனுமன் வானரர்களோடு ஓரளவு நேரம் கழித்த பின்னர் இராமனை அடைந்தான். அனுமனைக் கண்ட இராமன், அனுமன் வழக்கம்போல், தன்னைத் தொழுது வணங்குவான் எனவும் உடனடியாகச் சீதையைப் பற்றிய செய்திகளைச் சொல்லுவான் எனவும் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் சொல்லின் செல்வன் சொன்னானா? அல்லது ஒன்றும் சொல்ல வில்லையா?

அனுமன் இராமனை அடைந்ததும் தொழவே இல்லை; ஒன்றும் சொல்லவே இல்லை. இராமன் தன் முதுகுப் பக்கத்தைக் காணுமாறு அனுமன் திரும்பிக் கொண்டான்; சீதை இருந்த தென் திசையை நோக்கி முகத்தை வைத்துக் கொண்டான்; தன் இரண்டு கைகளையும் தலைமேல் குவித்து வைத்துக் கொண்டான்; இராமன் பக்கம் காலை நீட்டிக் கொண்டும் சீதையிருக்கும் பக்கம் தலையை

வைத்துக் கொண்டும் நெடுஞ்சாண் கிடையாய்க் கீழே விழுந்து தரையைத் தழுவிப் படுத்துக்கொண்டு வணங்கிய படியே சீதையைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்திக் கொண்டிருந்தான்.

அனுமனின் செயல்களைக் கண்ட இராமன், சீதை தென்திசையில் உள்ள இலங்கையில் இருக்கிறாள். அவளை அனுமன் கண்டுவந்திருக்கிறான்; பழிப்புக்கு இடமின்றி அவள் நல்ல கற்பு நெறியில் இருக்கிறாள் என்று குறிப்பால் அறிந்துகொண்டான். இச்செய்திகளைச் சொல்லின் செல்வனாகிய அனுமன் ஒரு சொல்லும் சொல்லாமல் சொல்லித் தெரியவைத்து விட்டான். இராமனும் ஓரளவு ஆறுதல் பெற்றான். இந்த நிகழ்ச்சிகளைத் திருவடி தொழுத படலத்தில் உள்ள பின்வரும் பாடல்களால் அறியலாம்:

"எய்தினன் அனுமனும்; எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன்; முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்,
வையகம் தழீஇ நெடிதிறைஞ்சி, வாழ்த்தினான்".

(அப்போது இராமன்)

"திண்திறல் அவன்செயல் தெரிய நோக்கினான்
வண்டுறை ஓதியும் வலியள் மற்றிவன்
கண்டதும் உண்டு; அவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன் குறிப்பினால் உணரும்
கொள்கையான்"–

"ஆங்கவன் செய்கையே அளவை யாமென
ஓங்கிய உணர்வினால் விளைந்தது உன்னினான்;
வீங்கின தோள்; மலர்க் கண்கள் விம்மின;
நீங்கியது அருந்துயர்; காதல் நீண்டதே".

என்பன பாடல்கள். அனுமன் சொல்லாமல் சொன்னதாகக் கற்பனை செய்துகாட்டிக் கவிச்சுவை ஊட்டிய கம்பனின் கலைத்திறனுக்குக் கைம்மாறு யாதோ?

# 14. அருட்பா வாணர்

**அறிமுகம் :**

பெரும் புலவர் வேங்கடராசுலு ரெட்டியார் முதலியோரை ஆதரித்த பெரியார் ஒருவர் புதுச்சேரியில் வாழ்ந்தார். புதுவை நகருக்கு வடமேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ள 'பாக்கம் உடையான் பட்டு' என்னும் சிற்றூரில் நடேசப் பிள்ளை என்பவரின் இரண்டாவது மகனாக இற்றைக்கு (1989) 83 ஆண்டுகட்கு முன் தோன்றிய இவரது திருப்பெயர் **'இராச மாணிக்கம்'** என்பது.

**கல்வி :**

இவர் இளமையில் பிரெஞ்சும் ஆங்கிலமும் ஓரளவு பயின்றதுடன் தமிழ்க் கல்வியில் பெரும் புலமை பெற்றார். தக்க தமிழாசிரியர்களிடம் பயின்று பெற்ற தமிழ் அறிவை முதற் பொருளாகக் கொண்டு, தொடர்ந்து தாமே தமிழ் இலக்கிய – இலக்கண நூல்களைத் துருவித் துருவி ஆழ்ந்து கற்று அரும்பெரும் புலவரானார். இவர், தம் முதல் மகனுக்கு 'இளம் பூரணன்' என்ற பெயர் சூட்டியிருப்பதைக் கொண்டே இவரது தமிழ்த் தொடர்பை அறியலாம்.

**வாணிகம் :**

புதுவையில் வாணிகம் தொடங்கிய இவர், புதுவை நகருக்கே குடிவந்து விட்டார்; கடிகார வாணிகத்தை மேற்கொண்டார். கடை மிகவும் சிறியது. வாணிகமோ மிகவும் பெருகிற்று. பகலெல்லாம் வீட்டில் தமிழ் நூல்

களோடு பொழுது போக்கிவிட்டு மாலையில்தான் கடைக்கு வருவார். மாலையிலும் கடைக்கு வராத நாட்கள் பலவாகும். அங்ஙனமிருந்தும், கடிகார வாணிகத்தின் வாயிலாகப் பெரும் பொருள் சேர்ந்தது; மாபெருஞ் செல்வரானார். கலைமகள் அருளும் அலைமகள் அருளும் ஒருங்கே வாய்க்கப் பெற்றார்.

**தமிழ் படைப்பு :**

பெரும் புலவருமான இவர், 'இராசமாணிக்கம்' என்னும் இயற்பெயரின் பொருள் கொண்ட 'அரசமணி' என்பதைப் புனைபெயராகக் கொண்டு இதழ்களில் உரைநடைக் கட்டுரைகள் சில எழுதியிருப்பினும், செய்யுள் நடையினையே பெரிதும் விரும்பினார். செய்யுள் நூல்கள் பல இயற்றி வெளியிட்டார். மயிலம் முருகன் மேல் இவர் இயற்றி வெளியிட்டுள்ள பாமாலை நூல்கள் பல. அவற்றுள் மிகவும் குறிப்பிடத் தக்கது 'அன்பு விடு தூது' என்னும் நூலாகும். சிற்றிலக்கியங்கள் பல இவரிடமிருந்து முகிழ்த்தன. இவ்வாறு படைப்பிலக்கிய ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

**பொழுதுபோக்கு :**

இராசமாணிக்கனாரின் பொழுதுபோக்கு தமிழ் நூல் களோடும் தமிழ்ப் புலவர்களோடும் நன்கு நடைபெற்றது. திருவள்ளுவனாரின்

> "நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
> பண்புடையாளர் தொடர்பு"—

என்னும் குறட்பாவும், ஃஎன்ரிவுட்டன் (Henry Wotten) என்னும் ஆங்கிலப் புலவர், "Character of The Happy Life" என்னும் தலைப்பையுடைய கம் பாடலின் இடையே கூறியுள்ள

"Who entertains the harmless day
With a well-chosen book or a friend".

என்னும் பகுதியும் இவருக்கு மிகவும் பொருந்தும்.

வீடு மட்டுமா? இவரது கடிகாரக் கடையும் ஒரு தமிழ்க் கழகம்போல் இருப்பதுண்டு. புதுவையில் உள்ள பல்கலைப் புலவர் உயர்திரு அரங்கநாத பரமதயாளம் பிள்ளையவர்களும் அடியேனும் (சு ச) கடையில் நெடுநேரம் இவருடன் உரையாடிக் கொண்டிருப்போம். தயாளம் பிள்ளையவர்களுடனோ அல்லது என்னுடனோ இவர் கடற்கரைக்குச் செல்வார். சில ஆண்டுகட்கு ஒருமுறை என்னோடு திரையோவியம் (சினிமா) பார்க்கச் செல்வதுண்டு; இது விரல்விட்டு எண்ணக்கூடியதாகும்.

**புலவர்களின் புரவலர் :**

இராசமாணிக்கனார், நவில்தொறும் நயம் பயக்கும் நூல் போன்ற புலவர்களுடன் நட்பு கொண்டிருந்த தன்றி, புலவர்களின் புரவலராகவும் திகழ்ந்தார். இதன் ஒரு பகுதியே, வேங்கடராசுலு ரெட்டியாரோடு இவர் கொண்டிருந்த ஈடுபாடாகும். ரெட்டியார் அவர்கள் புதுவைக்கு வந்த போதெல்லாம் இராச மாணிக்கனாரின் இல்லத்திலேயே தங்கியிருந்தார். தமிழ் விருந்துக்கும் உணவு விருந்துக்கும் சொல்ல வேண்டுமா என்ன! மற்றும், ரெட்டியார் அவர்களின் இலக்கணக் கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து 'நுண் பொருள் விளக்கம்' என்னும் பெயரில் ஒரு நூலாக்கித் தம் பொருட் செலவில் புரவலர் வெளியிட்டார். இஃதொன்றே இருவருக்கும் இடையே இருந்த தொடர்பைப் பறை சாற்றும்.

ரெட்டியார் மட்டுமா? புலவர் எவர் வரினும், அன்பைத் தூதாக விட்ட புரவலரின் அன்பு மழையில்

நனைந்து விடுவர். வீட்டிலும் சரி - கடிகாரக் கடையிலும் சரி - புலமை விருந்தும் உணவு விருந்தும் ஒருசேர இடம் பெறும். இத்தகைய விருந்துகளில் பலமுறை பங்கு கொண்ட பேறு எனக்கு உண்டு.

**அருட் கொடை:**

இராசமாணிக்கனாரின் அருட்கொடை, பல வடிவங்களில் நடைபெற்றது. ஏழை மாணாக்கர்கட்கும் ஏழைப் புலவர்கட்கும் பண உதவி கிடைக்கும். சிற்சிலருக்குக் கடிகாரம், கல்வி நூல்கள், உடை முதலிய பொருள்களின் வடிவத்தில் கொடை இருக்கும். சிலருக்கு மருத்துவ உதவியும் கிடைத்தது உண்டு. 1946-ஆம் ஆண்டு யான் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தபோது, நம் புரவலர் கேள்விப்பட்டுத் தம் மருத்துவருடன் எங்கள் இல்லத்திற்கு வந்து பார்த்து ஆவன செய்தார். மருத்துவச் செலவு இவருடையதே. அப்போது யான் வேண்டாமல் கிடைத்த உதவி இது.

ஒருமுறை வேங்கடராசுலு ரெட்டியார் இவர் வீட்டில் வந்து தங்கியிருந்தபோது, தாம் (ரெட்டியார்) ஒருநாள் இரவு தனியாக, ஒரு துணிக் கடைக்குச் சென்று துணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது கடையிலிருந்து அவ்வழியாக வந்த இராசமாணிக்கனார் இதைப் பார்த்து விட்டார். ரெட்டியார் அறியாதபடி ஆறு வேட்டிகளும் ஆறு துண்டுகளும் வீட்டிற்கு வருமாறு செய்து விட்டார். பின்னர் ரெட்டியார் துணிகளை எடுத்துக் கொண்டு கடைக்காரரிடம் பணம் கொடுக்கச் சென்றபோது, கடைக்காரர் ரெட்டியாரை நோக்கி, "உங்கட்குத் துணிகள் வீட்டிற்குப் போய் விட்டன; நீங்கள் பணம் தரவேண்டியதில்லை. கையிலுள்ள துணிகளை இங்கே வைத்துவிட்டு

வீட்டிற்குச் சென்று பெற்றுக் கொள்ளலாம்'' -என்று சொல்லி அனுப்பி விட்டார்.

ரெட்டியார் உட்படத் தம் வீட்டிற்கு வந்த புலவர்கள் பலர் ஊர் திரும்பும்போது, புகைவண்டிக் கட்டணச் சீட்டு அவர்கட்குத் தெரியாமலேயே முன்கூட்டி எடுக்கப்பட்டு அவர்களிடம் தரப்படும். சிலருக்குக் கட்டணச் சீட்டுடன் காசும் புகைவண்டி நிலையத்தில் தரப்பட்ட துண்டு. ரெட்டியாரைப் போலவே இளவழகனார் முதலியோரும் இவரால் போற்றப்பட்டு விருந்தோம்பப் பெற்றவராவர்.

யான் (சு.க) எழுதிய "தமிழ் நூல் தொகுப்புக் கலை'' என்னும் நூலை இராச மாணிக்கனார் திரும்பத் திரும்பத் தொடர்ந்து மும்முறை படித்தாராம். அந்நூலால் கவரப் பெற்ற இவர், 1973-ஆம் ஆண்டு, புதுவை ஆளுநர் தலைமையில் எனக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார். "புதுப் படைப்புக் கலைஞர்'' என்ற பட்டமும் சான்றிதழும் வாழ்த்துப் பாவும் பொற்கிழியுடன் அவ்விழாவில் எனக்கு அளித்தார். இவ்வாறு இன்னும் பல வடிவங்களில் இப் பெரியாரது அருட்கொடை நிகழ்ந்தது.

**ஆசிரியர்:**

இராச மாணிக்கனார் பலர்க்கு ஆசிரியராக இருந்து இலக்கிய இலக்கண நூல்களைப் பயிற்றியதும் உண்டு. தம் வீட்டிற்கு வந்து தம்மிடம் கல்வி பயின்றவர்கட்குக் கல்வியுடன் காஃபி-சிற்றுண்டிகளும் வழங்கியதுண்டு. இவர் இயற்கை எய்திய பிறகு நடைபெற்ற நினைவு விழா ஒன்றில், முன்னர் இவரிடம் இலக்கணம் பயின்ற ஒருவர் பின்வருமாறு ஒரு கருத்தைக் கூறினார்: "நன்னூல் கற்றுத்தரும்படி யான் ஐயா அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர், 'ஓ, அதற்கென்ன! நாம் இருவரும் இப்போது சேர்ந்து கற்கலாமே' என்று கூறினார்கள்'' —

என்பது, பயின்றவர் தெரிவித்த செய்தி. தாம் ஆசிரியர் என்ற தருக்கு இன்றி, தம்மிடம் பயில்பவரைத் தமக்கு நிகராக மதித்த பெருமை இப்பெரியாருக்கு உண்டு என்பது இதனால் விளங்கும்.

**நூலகம்:**

பெரியார் இராசமாணிக்கனார், தம் வீட்டில் 'முருக வேள் முத்தமிழாசரம்' என்னும் பெயரில் ஒரு சிறந்த நூலகம் வைத்திருந்தார். கிடைத்தற்கு அரிய, பெரிய நூல்கள் பல அந்நூலகத்தை அணி செய்தன. ஒவ்வொரு நூலுக்கும் அழகான மேலட்டை போடப்பட்டிருக்கும். இப்பெரியார் ஒவ்வொரு நூலையும் தம் கண்ணேபோல் - ஏன்-உயிரேபோல் காத்து வந்தார். படிப்பதற்கு இரவல் கேட்கும் அன்பர்கட்கு இல்லையென்னாது தம் கையா லேயே நூல்களை எடுத்தளிப்பார். மேலட்டையின்மேல், 'ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுப்பது நன்று' என எழுதப் பட்டிருக்கும். பலர்க்கும் உடனுக்குடன் கொடுத்து வாங்குவதற்காகப் போடப்பட்ட இந்த 'விதி' ஓர் ஒப்புக்கே யாகும். ஒரு வாரத்திற்கு மேல் வைத்திருப்பதற்கும் ஒப்புதல் உண்டு. என்னைப் போன்றோர் இந்நூலகத்தால் பெற்ற பயன் மிகுதி.

**சன்மார்க்க சங்கம்:**

இப்பெரியார் வடலூர் இராமலிங்க வள்ளலார்பால் பேரன்பு-பெருங்காதல் (பக்தி) கொண்டவர். ஒரு பெரிய வீட்டை விலைக்கு வாங்கி, அதில் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்னும் அமைப்பை நிறுவிப் பெரும்பணி புரிந்தார். இதற்காக மிக்க பொருளை வைப்பு நிதியாக வழங்கி யுள்ளார். வள்ளலாரின் திருஉருவப் படமும் அணையா விளக்கும் திருவருட்பா நூல் படிகள் பலவும் சங்கக் கட்டடத்தை அணி செய்து பொலிவு தந்து கொண்டிருக்

கின்றன. நாடோறும் பூசனையும் உணவு படைத்து வழங்கலும் இன்றும் நடைபெற்று வருகின்றன. ஐயா அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துள்ளார்கள். தொடர்ந்த சிறப்பு விழாக்களும் சொற்பொழிவுகளும் இன்றும் நடைபெற்றுக் கொண்டுள்ளன. நாடோறும் பல்வேறு தமிழ் நூல்கள் இலவசமாகக் கற்பிக்கப் பெறு கின்றன. சிறப்புப் பூசனை நாட்களில், ஏழைகட்குக் காலையில் கஞ்சியும் மதியத்தில் சிறப்பு உணவு விருந்தும் அளிக்கப் பெறுகின்றன.

**வள்ளல் குடும்பம்:**

சன்மார்க்க சங்கத்திற்கு இராசமாணிக்கனார் வைப்பு நிதி வழங்கியிருப்பதல்லாமல், அவர் தம் குடும்பத்தினரும் நெருங்கிய உறவினர்களுங் கூட தனித் தனியே பல்வேறு பெயர்களில் வைப்பு நிதி வழங்கியுள்ளனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர், இப்பெரியாரின் தமையனாராகிய நடேச குப்புசாமி பிள்ளை என்பவராவார். அவர் தம் பெயரால் வைப்பு நிதி வைத்துள்ளார். தம்பியைப் போலவே தமையனாரும் பெரிய வள்ளலாவார். அவர் அளித்துள்ள கொடைகள் பல. அதனால், அவருக்கு இச் சங்க விழா ஒன்றில் 'வள்ளல்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப் பெற்றது. சன்மார்க்க சங்க விழாக்களில், புலவர் கட்கு ஆடையும் பொருளும் பரிசாக வழங்கப்படுவது உண்டு. தம்பி இராசமாணிக்கனார் இயற்கை எய்திய பின்னரும் தமையனாரால் இப்பரிசளிப்பு நடைபெறுவது உண்டு.

**அருட்பா வாணர்:**

அருட்பா வழங்கிய இராமலிங்க வள்ளலார்பால் இராசமாணிக்கனார் மிக்க ஈடுபாடு கொண்டிருந்ததாலும்,

அருட்பா பரவப் பல்வேறு பணிகள் ஆற்றியதாலும், தாமும் அருட்பாக்கள் பல இயற்றி வெளியிட்டதாலும், புதுவைத் தமிழ்ச் சங்கம் இப்பெரியாருக்கு 'அருட்பா வாணர்' என்னும் அரிய பெரிய பட்டத்தை வழங்கிப் பெருமை பெற்றது. அன்று முதல் இவர், 'அருட்பா வாணர்' என்றும் புதுச்சேரியில் பெயர் வழங்கப் பெறுகிறார்.

**புகழ் வாழ்வு:**

1974 மார்ச்சு திங்களில் இராசமாணிக்கனார் புலால் உடலால் மறையினும், புகழ் உடலால் இன்றும் வாழ்பவராகி யுள்ளார்; இனியும் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். அருட்பா வாணரின் அடிமலர்கட்கு வணக்கம்.

# 15. பழந்தமிழர் பண்பாடு

'பழம்' (பழைமை) என்பதற்கும் 'பண்பாடு' என்பதற்கும் நடுவே நீண்ட-பெரிய இடைவெளியிருப்பதாகத் தோன்றலாம், ஆம்! பழங்காலத்து மக்கள் நாகரிகம் அற்ற-பண்பாடு அற்ற காட்டு மிறாண்டிகளாக அல்லவா இருந்திருப்பார்கள்? அவர்களிடம் பண்பாடு எப்படி இருந்திருக்க முடியும்? என்று சிலர் வினவுவதாகக் காதுக்குக் கேட்பது போல் தோன்றுகிறது.

பழங்காலத்தில் பல்வேறு மக்கட்பிரிவினர் பண்பாடற்று வாழ்ந்ததல்லாமல், இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் சில இடங்களில் பண்பாடற்ற மக்கட்பிரிவினர் வாழ்ந்து வருவதால் 'பழந் தமிழர் பண்பாடு' என்பதற்கு இடம் ஏது என்று சிலர் எண்ணக்கூடும்.

தமிழர் என்றென்ன! எந்த இனத்தவரும், முதல் முதலாக மக்களினம் தோன்றிய மிகப் பழங்காலத்தில் இப்போது உள்ளது போன்ற நாகரிகமும் பண்பாடும் இல்லாத-கல்வியும் இல்லாத காட்டு மிறாண்டிகளாகத்தான் வாழ்ந்திருந்தார்கள். பிறந்த குழந்தைகள் பெரியவர்களைப் போல இருக்க முடியுமா? நாளடைவில், மக்களினத்தில் சில பிரிவினர் ஏனைய பிரிவினரினும் திருத்தமுற்றுப் பண்பாடுடைமையில் முந்திக் கொண்டனர். பெரியவர்களுள்ளும் பண்பாடற்றவர் பலர் இருக்க, சிலர் சிறந்த பண்பாளராகத் திகழ்கின்றனர், அல்லவா? இவ்வாறே, பண்பாடுடைமையில் பல்வேறு பிரிவினரினும் தமிழர்கள் முந்திக் கொண்டனர். அதிலும் மிகப் பழங்காலத்திலேயே முந்திக் கொண்ட

னர். "பழந்தமிழர் பண்பாடு" என்பதின் பொருத்தம் இப்போது புலனாகுமே!

**சான்றுகள்:**

பழந்தமிழர் பண்பாளராக வாழ்ந்தனர் என்பதற்குச் சான்று வேண்டுமே! அதற்காக நமக்குச் சான்று பகர்வன பழந்தமிழ் நூல்களேயாகும். பழந்தமிழ் நூல்களுள் அழிந்து பட்டுச் சென்றவையே பல; அழியாது நின்றவை சிலவே. நின்ற சில நூல்களுள்ளும் பழைமையானவை எனப்படு பவை தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலும், சங்க நூல்கள் எனப்படும் இலக்கியங்களுமேயாம். இவற்றின் துணைகொண்டு பழந்தமிழர் பண்பாட்டினை அறியமுடியும்.

சங்க இலக்கியங்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்டு முற்பட்டவை என்றும், தொல்காப்பியம் ஏறத் தாழ இரண்டாயிரத்தைந்நூறு அல்லது மூவாயிரம் ஆண்டு கட்கு முற்பட்டது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது எனப்படும் தொல்காப்பியத்தை இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியனார், தம் நூலில் பல இடங்களில், ஒரு கருத்தைக் கூறிவிட்டு, இப்படியாக முன்னோர் மொழிந்துள்ளனர் என்றெல்லாம், அறிஞர்கள் அறிவித்துள்ளனர்-புலவர்கள் புகன்றுள்ளனர் என்றெல்லாம், தமக்கு முன் வாழ்ந்த முன்னோர்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். தொல்காப்பியத்தில் "என்மனார் புலவர்," "மொழிமனார் புலவர்," "சொல்லினர் புலவர்," "யாத்தனர் புலவர்," "செவ்விதென்ப சிறந்திசினோரே," "நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே," "என்ப," 'மொழிப' (கூறுப) முதலிய தொடர்களைப் பல இடங்களில் காணலாம். அங்ஙனமெனின், தொல்-காப்பியர் காலத்துக்கும் ஆயிரயாயிரம் ஆண்டுகட்கு

முன்பே தமிழறிஞர்கள் பலர் தமிழ் நூல்கள் பல இயற்றியமை புலனாகும். அவையெல்லாம் அழிந்து போயின என்பது அறிந்த செய்தியே. எனவே, ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே - அஃதாவது, வரலாற்றுக் காலத்துக்கு முன்பே பழந்தமிழர் பண்பாட்டினை விளக்கும் பழந்தமிழ் நூல்கள் பல இருந்தமை தெளிவு.

**பண்பாட்டு இலக்கணம்:**

இது நிற்க, - பழந்தமிழர் பண்பாடு எனப்படுவது யாது? எதை எதையெல்லாம் பண்பாடு எனக் கூறலாம்? இதற்குத் தக்க விடை வேண்டும்.

பண்பாடு என்றால் என்ன என்று தெளிவு செய்யுமாறு யாரிடம் வினவலாம்? ஓ! ஓ! இதோ கிடைத்து விட்டார். அவர் யார்? உலகப் பெரும் புலவராகிய–உலகப் பொதுப் புலவராகிய திருவள்ளுவர்தாம் அவர். தமது திருக்குறள் நூலில் பண்பாட்டிற்கு அவர் கூறியுள்ள விளக்கம் பின் வருமாறு:

> எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
> பண்புடைமை என்னும் வழக்கு.
> அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
> பண்புடைமை என்னும் வழக்கு.
> நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
> பண்புபா ராட்டும் உலகு.
> நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
> பண்பாற்றா ராதல் கடை.
> பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
> கலம்தீமை யால்திரிந் தற்று.

இவை பண்பாட்டு விளக்கக் குறள்கள். திருவள்ளுவர், திருக்குறள்-பொருட்பாலில் "பண்புடைமை" என்னும் ஒரு

தனிப்பகுதியே அமைத்துள்ளார். அதனைச் சேர்ந்த பாக்களே இவைகள். இவற்றின் கருத்துகள் வருமாறு: எவரிடத்தும் எளிமையாய்ப் பழகுதல் பண்பாடு எனப்படும். எல்லாரிடத்திலும்-எல்லா உயிர்களிடத்தும் அன்புபூண்டு ஒழுகுதல் பண்பாடாகும். நல்ல குடும்பத்தில் நற்பண்புடைய பெற்றோர்க்குப் பிள்ளையாய்ப் பிறந்து, அந்தக் குடும்பத்தின் நல்ல மரபைப் பின்பற்றி ஒழுகுதல் ஒருவகைப் பண்பாடு. (இங்கே "குடி" என்பது சாதியைக் குறிப்பதன்று.) உலகம் பாராட்டும் வகையில் நயமுடன் யாவர்க்கும் நன்மை புரிந்து பாரோர்க்குப் பயன்படுபவராக விளங்குதல் பண்பாடுடைமையாம். தமக்கு இன்னா செய்பவர்க்கும் இனியவை செய்தல் பண்பாடாம். தாம் பெற்ற பெரிய செல்வத்தைப் பிறர்க்குப் பயன்படுத்துதல் பெரிய பண்பாடு.

**மரபு நிலையும் சூழ்நிலையும் :**

மேலுள்ள கருத்துகள் பண்பாட்டிற்கு வள்ளுவர் தந்துள்ள விளக்கமாகும். "ஒருவனது பண்பாட்டைத் தீர்மானிப்பவை அவனுடைய மரபுநிலை (Heredity) சூழ்நிலை (Environment) என்னும் இரண்டாகும் என்பது ஒருசார் உளவியல் கருத்து. ஆம்! நல்ல மரபில் (குடும்பத்தில்) பிறந்ததால் பெற்றுள்ள நற்பண்பை அவனது தீய சூழ்நிலை கெடுத்து விடலாம். தீய குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால் ஊறிப்போன தீக் குணத்தை நல்ல சூழ்நிலையில் மாற்ற முடியாமலும் போகலாம். எனவே, நற்பண்பு வளர, மரபு நிலையும் நல்லதாயிருக்க வேண்டும் — சூழ்நிலையும் நன்றாயிருக்க வேண்டும். எனவேதான் நல்ல மரபுநிலை வேண்டும் என்னும் கருத்தை "ஆன்ற குடிப்பிறத்தல்" என்னும் குறட் பகுதியாலும் நல்ல சூழ்நிலை வேண்டும் என்னும் கருத்தை மற்ற குறள்களாலும் வள்ளுவர் வலியுறுத்திப் போந்தார்.

மேற்காட்டப்பட்டுள்ள குறள்கள், பொதுவாகப் பண்பாட்டை விளக்கும் இலக்கணமாகத் திகழ்வதுடன், சிறப்பாகப் பழந்தமிழர் பண்பாட்டை விளக்கும் இலக்கியமாகவும் விளங்குகின்றன. பண்புடைமை பற்றி வள்ளுவர் பொது மறையாம் தம் நூலில் ஒருபகுதியே அமைத்துள்ளார் எனின், பழந்தமிழர் பண்பாட்டின் சிறப்பை என்னென்று வியந்து பாராட்டுவது! நீண்ட நெடுங்காலமாகவே பண்பட்டு வந்த ஓர் இனத்தில் (ஒரு சமுதாயத்தில்) பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஒருவராலேயே இவ்வளவு அரிய பெரிய பண்பாட்டு விளக்கம் அளிக்க முடியும் அல்லவா? பண்பாட்டை வலியுறுத்தும் பண்பாளராகிய திருவள்ளுவர், தமது குறளில் கூறியுள்ள "ஆன்ற குடிப் பிறத்தல்" என்னும் இலக்கணத்திற்குத் தக, உலகக் குடிமக்களுள் உயர்ந்த தமிழ்க் குடியில் பிறந்ததினாலேயே, உலகம் முழுவதும் ஏற்றுப் போற்றும் ஒப்பற்ற திருக்குறளை இயற்ற முடிந்தது.

### தமிழ்ப் பண்பாட்டின் தொன்மை :

தமிழ்க் குடியின் பழைமைக்கும் அதன் உயரிய பண்பாட்டிற்கும் இன்னும் ஒரு சான்று காண்போமா? திருக்குறள் - பொருட்பால் - குடிமை என்னும் பகுதியில் உள்ள,

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று

என்னும் குறட்பாவும், இதற்குப் பரிமேலழகர் எழுதியுள்ள, "தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார் தாங்கொடுக்கும் பொருள் பண்டையிற் சுருங்கியவிடத்தும் தம்பண்புடைமையின் நீங்கார்; தொன்றுதொட்டு வருதல் சேர, சோழ, பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்

பட்டு வருதல். அவர்க்கு நல்குரவாவது வழங்குவது உள் வீழ்வது ஆகலின் அதனையே கூறினார்' என்னும் உரைப் பகுதியும் ஈண்டு ஆழ்ந்து எண்ணத்தக்கன. "சேர, சோழ, பாண்டியரால் ஆளப்பட்ட தமிழ்க்குடி, படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வந்த பழம்பெருங்குடி. அது. வறுமை வந்த காலத்தும் பிறர்க்கு வழங்குவதை நிறுத்தாத பண்பாடு உள்ள குடி என்பது, பரிமேலழகரது கூற்றால் தெளிவுறும். பழந்தமிழர் பண்பாட்டிற்கு இன்னும் சான்று வேண்டுமா? இதோ?

**ஆற்றுப்படைப் பண்பாடு :**

கலைஞன் ஒருவன் வள்ளல் ஒருவரிடம் சென்று உதவி பெற்று வருகிறான். வரும் வழியில் தன்னைப் போன்ற கலைஞன் வேறொருவனைக் காண்கின்றான். அப்புதியோ னிடம், தான் பெற்று வந்த உதவியைக் குறிப்பிட்டு, இன்ன வழியாக, இன்னாரிடம் சென்றால் இன்ன உதவியைப் பெற்று வரலாம் என்று அறிமுகம் செய்து அவனை வழிப் படுத்தி - வழிகூட்டி அனுப்பி வைக்கின்றான். இந்த உயரிய பண்பாட்டிற்குத் தமிழ் நூல்களில் "ஆற்றுப்படை" என்னும் அழகிய பெயர் வழங்கப்பட்டுள்ளது. ஆறு என்றால் வழி; ஆற்றுப் படுத்துதல் என்றால் வழிப்படுத்தி- வழிகூட்டி அனுப்பி வைத்தல் என்பது பொருள். இது பழந்தமிழர் பண்பாடு.

பழந்தமிழ்ச் சங்க இலக்கியங்களுள் தொகைப் பெயரால் குறிக்கப்படும் பத்து நூல்கள் உள்ளன. இந்தப் பத்து நூல்களுள் பாதி நூல்கள் – அஃதாவது ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாக இருப்பதைக் காணலாம். ஆற்றுப் படைக்காகத் தமிழில் முழு முழு நூல்கள் பல தோன்றினமையைக் கொண்டு பழந்தமிழர் பண்பாட்டின் உயர் எல்லையை உணரலாம். இலக்கியம்

எனப்படுவது தான் தோன்றிய இடத்தில் - தான் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களின் மனப்பண்பை எடுத்துக்காட்டும் ஒருவகைக் கண்ணாடியாகும். இதற்குச் சான்று ஆற்றுப்படை நூல்கள், தமிழில் சிறுசிறு தனிப் பாடல்களும் உண்டு. தம்மினும் மேலாக அல்ல - தமக்கு நிகராகவும் பிறர் வந்து விடக்கூடாது என்று எண்ணும் மக்கள் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இருக்கும்போது,— தாம் பெற்ற நன்மையைப் பிறர் அறியக் கூடாது, பிறர் பெறக் கூடாது என்று மறைக்கும் மாக்கள் பலர் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இருக்கும்போது,- தாம் தீமையுற்று விட்டால் அந்தத் தீமையைப் பிறரும் பெற வேண்டும், பெறச் செய்ய வேண்டும் எனச் சூழ்ந்து அதற்கென முயலும் கீழ் மக்கள் மிகப்பலர் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இருக்கும் போது,- இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே "ஆற்றுப் படை" செய்யும் அரிய பண்பாடு தமிழ் மக்களிடையே இருந்ததென்றால், அதனை எந்தச் சொற்களால் பாராட்டுவது ?

**ஆற்றுப்படையின் பழைமை :**

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய இந்த ஆற்றுப்படை நூல்கள் ஒருபுறம் இருக்க,- மூவாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தாகக் கருதப்படும் தொல்காப்பியத்திற்குள்ளும் புகுந்து பார்ப்போமே! ஆம் ... ஆம்! இந்த ஆற்றுப்படை தொல்காப்பியத்திலும் இருப்பது இதோ தெரிகிறது :

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்பது தொல்காப்பியப் புறத்திணை இயல் 36-ஆம் நூற்பாப் பகுதி. இதில் ஆற்றுப்படைப் பண்பு தெளிவாக விளக்கப் பட்டுள்ளது: எனவே, இது மூவாயிரம் ஆண்டுக்கும் முற்பட்ட பழந்தமிழர் பண்பாடு என்பது புலனாகும்.

**பண்பாட்டின் பரப்பு :**

"உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்: அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே".

என்பது புறநானூற்றுப்பாடல் (182). பண்பாட்டிற்கு வடிவம் தரும் இந்தப் பாடல், திருக்குறளில் "பண்புடைமை" என்னும் தலைப்பில் உள்ள,

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

என்னும் குறட்பாவின் விளக்கமேயாம். இதோ இன்னும் ஓர் உயரிய பண்பாட்டுக் கொள்கை :

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,

இன்னா தென்றலும் இலமே.........
பெரியோரை வியத்தலும் இலமே—
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

என்பதும் புறநானூற்றுப் (192) பாடலே. இந்தக் காலத்தில் பேசப்பட்டு வரும் ஒரே உலகக் கொள்கை,— உலக ஒருமைப் பாட்டுக்கொள்கை, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனாரால் பேசப்பட்டிருப்பது பெரு வியப்பும் பெரு மகிழ்ச்சியும் அளிக்கின்ற தன்றோ? மற்றும்,

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.
தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.
பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.
அறிவினான் ஆகுவ துண்டோ பிறதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை.
ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

முதலிய குறட்பாக்கள், பழந்தமிழர் பண்பாட்டின் "எவரெஸ்ட்" கொடுமுடியாம் உயர் எல்லையைக் காட்டுவனவாகும். இவ்வாறாகப் பரந்து பட்ட பழந்தமிழ் நூல்களுட் சென்று பார்ப்போமாயின், பார்க்குமிடம் எல்லாம், பழந்தமிழர் பண்பாட்டைப் பரக்கக் காணலாம்!

### பண்பாட்டுத் தொடர்ச்சி

பண்பாடு பழந்தமிழர்களோடு பழந்தமிழ் நூல்களோடு நின்றுவிட்டால் போதுமா? அது தொடர்ந்து பின்பற்றப்

பட்டு வந்தால்தான், பழந்தமிழர் பண்பாடு நிலைத்த, நீடித்த பெருமைக்கு உரியதாகப் போற்றப்பெறும். ஆனால் அது, தமிழரிடத்தில்-தமிழகத்தில் குறையாது வளர்ந்தே வந்து கொண்டிருக்கிறது என்பதற்கு அண்மைக்காலத்தில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க வள்ளலாரின் அருட்பா ஒன்றே போதிய சான்று பகரும். இதோ அந்தப் பாடல்:

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
  வாடினேன்! பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
  வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்!
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
  னேருறக் கண்டுளந் துடித்தேன்!
ஈடில்மா னிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
  இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்!

இந்தப் பாட்டு, வடலூர் வள்ளலின் உள்ளத்தை உள்ள வாறு அறிவிக்கும் எக்சு-ரே கருவியன்றோ? பசியாலும், பிணியாலும் உள்ளத்துயராலும் வருந்தும் மக்களுக்காக வள்ளலார் வருந்தியிருப்பதுங்கூட, ஒரு பெரிய செயலன்று! வாடிய பயிரைக்கண்டபோதெல்லாங் கூட அவர் வாடியது தான் ஈண்டு உணரத் தக்கது.

**வழி வழிப் பண்பாடு**

அன்று, துவண்ட முல்லைக்கொடிக்குத் தேர் ஈந்தான் தமிழ்ப் பாரி! குளிரில் நடுங்கிய மயிலுச்குப் போர்வை போர்த்தினான் தமிழ்ப் பேகன்! இன்று, வாடிய பயிரைக் கண்டு வாடி வதங்கினார் வடலூரார். அங்ஙனம் வாடிய வடலூர் வள்ளலாரின் பண்பு தமிழ்ப் பண்பாடு, - தமிழர் பண்பாடு, - பழந்தமிழர் மரபு வழிவந்த பண்பாடு. இந்தப் பண்பாட்டிற்கு முடிவேயில்லை. இது தொடர்கதையாய் நீண்டு வளர்ந்து கொண்டே செல்லும். வாழ்க பழந்தமிழர் பண்பாடு!...

# 16. வேமன்னரின் அறிவுரை

வேமன்னர் ஒரு மாபெருந் தெலுங்குக் கவிஞர்; சீர்திருத்தப் புரட்சியாளர். இவரது காலம், கி.பி. பதினைந் தாம் நூற்றாண்டிற்குமேல் பதினெட்டாம் நூற்றாண்டிற் குள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவர் பிறந்த ஊர் 'கொண்டவீடு' என்று சிலரும், 'மூகசிந்தபல்லி' என்று சிலரும், 'கடாருபல்லி' என்று சிலரும் கூறுவர். இவர் 'பாமர்ரு' என்னும் ஊருக்கு அருகிலுள்ள ஒரு குகையில் இயற்கை எய்தினார் என்று சிலரும், கடாரு பல்லியில் இயற்கை எய்தினார் என்று சிலரும் பகர்வர்.

பிறந்த இரண்டாண்டிலேயே தாயை இழந்த வேமன்னர் அண்ணி நரசாம்பாவால் வளர்க்கப்பெற்று உருவாக்கப் பட்டார். தக்க இளமைப் பருவத்தில் விலைமாதரின் அதாவது பொருட் பெண்டிரின் பொய்ம்மை முயக்கத்தில் பெரிதும் மூழ்கியிருந்த வேமன்னரை, பெண்ணின்பத்தில் வெறுப்புறச் செய்து நன்னெறியில் ஒழுகும்படி ஆட்கொண் டவர் இவருடைய அண்ணியார் நரசாம்பாவே.

அபிராமஅய்யா என்னும் ஆசான் வேமன்னரை அறநெறிப்படுத்தி அருளுரை வழங்கினார். தமது ஒவ்வொரு பாட்டின் இறுதி அடியிலும் அபிராமஅய்யாவைக் குறிப்பிட் டுள்ளார் வேமன்னர்.

வேமன்னரின் பாடல்கள் நாலாயிரத்திற்குமேல் அச்சா னவை தவிர, இன்னும் அச்சாகாமல் ஓலைச் சுவடியில் இருக்கும் பாடல்கள் பலவாகும். இவருடைய பாடல்களின் தொகுப்பு நூல் 'வேமன்ன பத்தியம்' என்னும் பெயரால்

வழங்கப்படுகிறது. வேமன்ன பத்தியம் எனக்கு 1942ஆம் ஆண்டிலேயே அறிமுகம் ஆயிற்று. எனக்கு நினைவிருக்கும் அளவில் ஒரு பாடலை இங்கே தருகிறேன். இப்போது நூல் கையில் இல்லையாதலின் தவறிருப்பின் பொறுத்தருள வேண்டும். இதோ ஒரு பாடல் தமிழ் வடிவத்தில் வருமாறு:

"உப்புலேனி கூர ஊனம் புருச்சலகு
பப்புலேனி கூடு பலமு லேது
அப்புலேனி வாடு அதிக சம்பன்னடு
விஸ்வதாபி ராமா வினர வேமா"

என்பது ஒரு பாடல். உப்பில்லாத காய்கறி (பதார்த்தம்) பயனற்றது என்பது முதலடியின் பொருள். பருப்பு இல்லாத உணவு வலிமை தராது என்பது இரண்டாம் அடியின் பொருள். மூன்றாம் அடியின் பொருளாவது: கடன் இல்லாத மனிதன் பெரிய பணக்காரனாக மதிக்கப் பெறுவான் என்பதாகும். இறுதி நான்காம் அடியில், 'அபிராமா' என்று ஆசிரியர் பெயரும் 'வேமா' என்று வேமன்னரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. கடன் இல்லாத மனிதன் பெரிய பணக்காரன் என்பது பொருள் பொதிந்த அடியாகும்.

மற்றும், வேமன்னர், உணவில் பருப்பு வேண்டும் என்பதோடு விட்டாரா என்ன! நெய்யும் வேண்டும் என்கிறர்.

"நெய்யிலேனி கூடு நிய்யான கனுவதி
பிரியமுலேனி கூடு பிண்டபு கூடயா"

என்பது ஒரு பாடல் பகுதி. இதன் கருத்து: நெய் இல்லாத உணவு ஒழுங்கற்றது; அன்பு இன்றி இடும் உணவு பிண்டச் சோற்றுக்கு இணையாகும் என்பதாம். இதே கருத்தை ஔவைப் பிராட்டியும் 'நெய்யில்லா உண்டி பாழ்' என்று நல்வழி என்னும் தமது நூலில் கூறியிருக்கிறாரே!

மற்றும், பிறர்க்கு உணவிடின் உண்மையான அன்போடு இடவேண்டும் என்பது வேமன்னரின் அறிவுரையாகும். உமாதேவியார் ஞானசம்பந்தர்க்குப் பாலில் ஞானத்தைக் குழைத்துக் கொடுத்தது போல, நெய்யில் அன்பைக் குழைத்துக் கொடுக்க வேண்டும் போலும்!

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை உடையவர்களை வேமன்னர் மிகவும் கண்டிக்கின்றார்; வீரர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்களும், வீரத்தை இழந்து இந்த ஆசைக் கடலுக்குள் வீழ்ந்து முழுகி விடுவதை எண்ணி வருந்துகிறார் வேமன்னர். கோயிலுக்குச் சென்று தெய்வத்தை வழிபடாமல் வேறு பொருள்களில் எண்ணத்தைச் சிதறச் செய்பவரை, பிறர் வீடுகளில் புகுந்து உணவுப் பண்டங்களை உருட்டும் நாய்கட்கு ஒப்பிடுகிறார் வேமன்னர்.

பலர் பிறர்க்கு உதவாமல் இறந்து போவதற்கு, புற்றில் கரையான்கள் பல தோன்றி மறைவதை ஒப்பிடுகிறார். கொல்லுதற்கு உரியவனாயினும், அவனுக்குத் தீங்கு செய்யாமல், அவனிடம் அன்புகாட்டி அறவுரை பகரின் அவன் திருந்துவான் என்று கனவு காண்கிறார் வேமன்னர்.

அற்பர்கள் என்றும் ஆரவாரித்துப் பேசுவார்கள்; உயர்ந்தவர் எப்போதும் அடக்கமாயிருப்பர்; வெண்கலப் பாண்டங்களின் கல கலக்கும் ஓசை பொன்பாண்டங்கட்கு இல்லையன்றோ? இது வேமன்னர் கூற்று.

உள்ளத்தில் தூய்மையின்றி, சடைமுடியும் தண்டமும் கமண்டலமும் புலித்தோலும் சுமப்பதால் ஒரு பெருமையும் இல்லை-என்று கரவு உள்ளம் உடையவர்களைக் கண்டிக்கிறார் வேமன்னர்.

தமக்கு மகளைக் கட்டிக் கொடுத்தவர்களைப் போற்றாமல் தூற்றுபவர்கட்கு உலகத்தில் உய்வே இல்லை என்னும் வேமன்னரின் கருத்தை, வரதட்சணைக் கொடுமைக்காரர்கள் உணர்வார்களா?

உடம்பிற்குள் உள்ள இறைவனைக் காண முயலாமல் கற்களைக் கடவுள் என்று வணங்குதல் ஏனோ? கற்கள் பேசுமா? –என்னும் காரசாரமான கருத்தைக் கூறவும் வேமன்னர் தயங்கவில்லை. இங்கே, "நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே, சுற்றி வந்து மொணமொணத்துச் சொல்லு மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்? சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?" என்னும் சித்தர் சிவ வாக்கியரின் பாடல் ஒப்பு நோக்கத் தக்கது.

கோயிலுக்குச் சென்று மொட்டையடித்துக்கொண்டு உண்டியில் பணம் போடுவது மட்டும் போதாது; ஏழைகட்கும் உதவவேண்டும் என்கிறார்.

இல்லாதவனை எவரும் மதியார்; செல்வனையே மதிப்பர். செல்வனுக்குச் சிறு புண் உண்டாயினும் சென்று காணும் பலர், ஏழை வீட்டுத் திருமணத்திற்கும் செல்ல மாட்டார்கள் என்று வருந்துகிறார் வேமன்னர்.

மனைவியின் பேச்சைத் துணையாகக் கொண்டு மற்ற உறவினரின் துணையைக் கைவிடுதல், நாயின் வாலைத் துணையாய்ப் பற்றிக்கொண்டு ஆற்று வெள்ளத்தைக் கடக்க முயல்வது போலாகும் என்பதும் வேமன்னரின் கருத்துதான்.

வேமன்னரின் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் பொதிந்து கிடக்கும் அறிவுரைகளை எடுத்துக் கூற நாள் போதாது.

# 17. குரு நானக்கின் படிப்பினைகள்

அருளாளர் குரு நானக் சீக்கிய மதத்தின் நிறுவன ராவார்; மக்கட்கு இறைநெறி கற்பித்த ஆசானும் ஆவார். இப்பெரியார் கி.பி. 1469 ஆம் ஆண்டு, இப்போது பாகிஸ் தானிலிருக்கும் லாகூருக்கு அருகே உள்ள தன்வந்தி என் னும் இடத்தில் கத்திரி என்னும் வகுப்பில் பிறந்தார். இவர் பிறந்த ஊர்'டல்வாண்டீ' என்றும் சொல்லப்படு கிறது.

சீக்கிய மதத்தில் இவரைத் தொடர்ந்து இவர் உட்பட ஒன்பது குருமார்கள் இருந்து மதத்தை வளர்த்தனர். ஒன்பதின்மருள் முதல்வ ராகிய நானக் இளமையிலேயே கடவுள் பற்று மிக்கவராய், ஆழ்ந்த எண்ணத்தில்-தியானத் தில் இருந்தாராம். அருளாளர்களுடன் நட்பு கொண்டு பழகி வந்த நானக் திருமணமும் செய்துகொண்டார். இவர் கடவுட் பாடல்கள் பல இயற்றினார். இவருடைய முஸ்லீம் நண்பராகிய மாதானா என்னும் இசைவாணர் தம் இசைக் கருவியை மீட்டி வாசிக்க, நானக் பாடல்களைப் பாடுவா ராம். நானக் பாடிய 'ஜப்ஜி' என்னும் ஜெபப் பாடல் களைச் சீக்கியர்கள் நாள்தோறும் இறை வேட்டலாக - பிரார்த்தனையாகப் பாடுவர்.

குருமார்கள் ஒன்பதின்மருள் நாலாமவ ராகிய இராம தாஸ் என்பவர், அமிர்தசரஸ் என்னும் நகரத்தை அமைத்து, அதில் புகழ் மிக்க பொற்கோயிலை எழுப்பி னார். அவரை அடுத்த ஐந்தாவது குருவாகிய அர்ஜுன் என்பவர், குரு நானக்கின் பாடல்களையும், ஏனைய குரு மார்களின் அறவுரைகளையும், கபீர்-நாமதேவ் முதலிய

அருளாளர்களின் பாடல்களையும் தொகுத்து ஒரு படைப்பு போல் உருவாக்கினார். இதற்கு 'ஆதி கிரந்தம்' என்னும் பெயர் வழங்கப்படுகிறது. சீக்கியர்கள் பொற்கோயிலில் இந்த ஆதி கிரந்தத்தைத்தான் கடவுளாக வைத்து வணங்கி வருகின்றனர்- அவர்கட்கு உருவ வழிபாடு கிடையாது.

இதிலிருந்து தெரிவது: நானக்கின் பாடல்கள் கடவுள் அளவுக்கு உயர்ந்துவிட்டன-என்பதாகும். குரு நானக்கின் காலத்தில் எல்லா இடங்களிலும் மதப்போர் மிக்கிருந்தது. உண்மை நெறி உணராமல், அற்பத்தனமாகக் கலகங்கள் செய்து கொண்டிருந்தனர். அப்போது குரு நானக், மதங்களின் பெயர்கள் வேறு வேறாய் இருக்கலாம்; ஆனால் எல்லா மதங்கட்கும் கடவுள் ஒருவரே; இராமனும் இரகீமும் ஒருவரே; எனவே, மக்கள் மதக் கலவரத்தை மறந்துவிட வேண்டும் என மக்கட்கு அறிவுரை வழங்கினார். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலரின் திருமந்திர மொழி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

குரு நானக் கிழக்கே காசியிலிருந்து மேற்கே மெக்கா வரைக்கும், வடக்கே காசுமீரத்திலிருந்து தெற்கே இலங்கை வரைக்கும் திருப்பயணம் செய்தார். சென்ற இடமெல்லாம் சாதி சமயச் சழக்குகளை நீக்க வேண்டும் எனவும் ஒன்றே தெய்வம் எனவும் அறிவுறுத்தினார்.

இவர் தம் வாழ்நாளின் இறுதி இருபதாண்டு காலத்தில், இரவி ஆற்றங் கரையிலுள்ள கர்த்தார்பூர் என்னும் ஊரில் தம் குடும்பத்தாருடன் வாழ்ந்துவந்தார். அங்கே நாள்தோறும் மக்கள் குழுமினர். இறை வணக்கப் பாடல்கள் மிகவும் இசைக்கப் பெற்றன. இலவச உணவுக்கும் ஏற்பாடு செய்யப் பெற்றதாம். பணிகள் பல புரிந்த நானக், இவ்விடத்தில் கி.பி. 1539-ஆம் ஆண்டு தம் ஊன் உடல் துறந்தார்.

குருநானக் தம் வாழ்நாளை ஊழலை ஒழித்து உண்மை நெறியைப் பரப்புவதில் செலவிட்டார்; எல்லா மதங்களிலும் உள்ள நல்லனவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார்; இந்து – முசுலீம் வேற்றுமையின்றிச் செயல்பட்டார்; தீண்டாமையை ஒழிக்கப் போராடினார்; ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டிப் பிறரையும் பின் பற்றச் செய்தார்; பிறப்பால் வேறுபாடு இல்லை என்பதைக் கற்பித்தார். ஈண்டு, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் திருக்குறட்பா ஒப்புநோக்கற்பாலது.

மத சகிப்புத் தன்மையை வற்புறுத்திய நானக், மக்களின் அறியாமையையும் மூடப் பழக்க வழக்கங்களையும் ஒழிக்கப் பாடுபட்டார். புத்துலகச் செய்திகளில் கருத்து செலுத்தினார். சமூக நீதிக்கும் பெண்ணுரிமைக்கும் போராடினார். பெண்கள் அரசர்கள் சிலரால் துன்புறுத்தப் படுவதற்கு வருந்தினார். தொண்டு உள்ளமும் விட்டுக் கொடுக்கும் பரந்த மனப்பான்மையும் வேண்டும் என மன்றாடினார். தத்தம் சமயங்களைப்பற்றி உயர்வாகப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை; எல்லாரையும் சமமாக மதிப்பதே உண்மைச் சமயமாகும் என உணர்த்தினார். தியானம் செய்வதும் தெய்வக்கோயில் வழிபாடும் தெய்வ நீராடலும் உண்மைச் சமய ஒழுக்கமாக முடியாது; உண்மையான அன்பும் தூய்மையான வாழ்க்கையுமே உண்மைச் சமய நெறியாகும் - உண்மை வழிபாடும் ஆகும் என்று அறிவுறுத்தினார். ஈண்டு,

"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி, ஓடே எடுத்தென்ன உள்ளன் பிலாதவர் ஓங்கு விண்ணோர், நாடேய் இடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர் பால், வீடேயிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே"-என்னும் பட்டினத்தார் பாடல் ஒப்பு நோக்குதற் குரியது.

சமத்துவம்-சகோதரத்துவம் என்று சொல்கிறார்களே அந்த ஒருநிகர் நெறியும் உடன் பிறப்பு நீர்மையும் மக்களிடையே நடைமுறையில் வளர வேண்டுமென வற்புறுத்தினார் நானக். ஒருமைப்பாடு – ஒருமைப்பாடு என்று இப்பொழுது கரடியாய்க் கத்துகின்றார்களே-இந்த ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையை அப்போதே பறை சாற்றினார் நானக். மாற்றார் கொள்கையையும் ஆய்ந்து உண்மை காணவேண்டும் என்பது இவரது கருத்து.

மக்களின் உலக வாழ்க்கை அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நானக் எடுத்துக்காட்டியுள்ள உவமை (ஒப்புமை) மிகவும் சுவைக்கத்தக்கது. அந்த உவமை தாமரை இலைதான். தண்ணீரின் நடுவே தாமரை இலைகள் இருப்பினும் அவை தண்ணீரோடு ஒட்டமாட்டா; பசையிற்றுப் பிரிந்தே காணப்படும். அதுபோல, மக்கள், உலகப் பற்றுப் பிணிப்புகட்கிடையே வாழினும், உண்மையில் அந்தப் பற்றுப்பிணிப்பில் – அந்தப் பந்த பாசத்தில் கட்டுண்டு விடக் கூடாது; அக உணர்வாம் உள்நோக்கு, உலகக் கட்டுகளினின்றும் விலகி, தெய்வ நெறியில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்று உணர்த்தினார் பெருமான் நானக். இந்த ஒப்புமைக் கருத்தை, மெய்யுணர்வு பற்றிக் கூறும் பல தமிழ் நூல்களில் காணலாம்.

இன்றைய போராட்ட உலகத்தில் குருநானக்கின் படிப்பினைகள் மிகவும் இன்றியமையாதவை அல்லவா? போராட்டம் நீங்குமா? நீங்கவேண்டுமே!

# 18. முச்சங்க காலத் தமிழிசை நூல்கள்

இசை பற்றியோ—தமிழ் இசை பற்றியோ இந்தக் கட்டுரை ஆராயப் போவதில்லை. தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்க காலங்களில் இயற்றப்பட்டதாகக் கருதப் பெறும் தமிழ் இசை நூல் களைப் பற்றிய விவரம் மட்டும் இங்கே தரப்பெறும்.

தொல்காப்பியத்துக்கு முன்னும் பின்னுமான முச்சங்க காலங்களில் எழுந்த தமிழ் இசை நூல்கள் கிடைக்காமற் போயினும், அவற்றுள் சிலவற்றின் பெயர்களையாவது அறிந்து கொள்வதற்கு உரிய தடயம், இறையனார் அகப் பொருள் என்னும் நூலின் உரையில் கிடைத்துள்ளது. இது பற்றிய அவ்வுரையின் பகுதி வருமாறு.

> "...தலைச் சங்கம் இருந்தவர்களால் பாடப்பட்டன, எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் என இத்தொடக் கத்தன........"
>
> "இடைச் சங்கம் இருந்தவர்களால் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழ மாலை அகவலும் என இத்தொடக்கத்தன......"
>
> "...கடைச் சங்கம் இருந்தவர்களால் பாடப்பட் டன: நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங் குறு நூறும் பதிற்றுப் பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன-"

என்பது உரையிலுள்ள ஒரு பகுதி. இதில் கூறப்பட்டுள்ள தலைச் சங்க—இடைச் சங்க கால நூல்களுள் ஒன்றுகூட இன்று கிடைக்கவில்லை. கடைச்சங்க கால நூல்களுள் முதல் எட்டு மட்டுமே கிடைத்துள்ளன; கூத்து வரி, சிற்றிசை, பேரிசை ஆகிய நான்கும் கிடைக்கவில்லை.

உரையில் உள்ள 'இத்தொடக்கத்தன' என்னும் பகுதி கருதத்தக்கது. 'இத்தொடக்கத்தன' என்றால், இவை முதலாய பல நூல்கள் என்று பொருளாம். இப் பல நூல்களும்கிடைக்கவில்லை. ஒரு சிலவற்றின் பெயர்களாவது தெரிய வந்திருப்பது பெரும் பேறே.

முதற்சங்க நூல்களாகிய (எத்துணையோ) பரிபாடலும் முது நாரையும் முதுகுருகும், இடைச்சங்க நூல்களாகிய கலியும் குருகும் வியாழமாலை அகவலும், கடைச்சங்க நூல்களாகிய நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும்—ஆகிய நூல்கள் தமிழ் இசை நூல்களாம். இவற்றுள், கடைச்சங்க நூல்களாகிய நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல் ஆகிய இரண்டைத் தவிர வேறு நூலொன்றும் கிடைத்திலது. எழுபது பரிபாடல் நூலுள்ளும் இருபத்திரண்டு பரிபாடல்களே கிடைத்துள்ளன. மேலே, சில நூல்களை இசை நூல்கள் என்று கூறியிருப்பதற்குரிய சான்று விளக்கம் வருமாறு:

### 1. எத்துணையோ பரிபாடல்:

தலைச்சங்க நூல்களுள் முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது 'எத்துணையோ பரிபாடல்' என்பது. இப்பெயரைக் கொண்டு, பல பரிபாடல்கள் தொகுக்கப்பட்ட ஒரு தொகை நூல் முன்பிருந்தமை பெறப்படும். தொல்காப்பியர் பொருள் அதிகாரம்-அகத்திணையியலில் 'கலியே பரிபாட்டு

ஆயிரு பாவினும்' என்று கூறியிருப்பதனாலும், செய்யுளியலில் பரிபாடலுக்கு உரிய இலக்கணம் (116, 117, 118, 119, 155) கூறியிருப்பதனாலும் தொல்காப்பியருக்கு முன்பே பரிபாடல் நூல்கள் இருந்தமை தெளிவு. இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் கூறுவது மரபன்றோ? பரிபாடலுக்குப் பரிபாட்டு என்னும் பெயரும் உண்டு. பரிந்து பாடுவது பரிபாட்டு ஆகும்.

இந்தத் தலைச்சங்க காலப் பரிபாடல் இசை நூல் என்பதற்கு உரிய சான்றாவது: 'தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல்' என்னும் உளவியல் முறைப்படி (Psychological Method) இப்போது கிடைத்துத் தெரிந்திருக்கிற கடைச்சங்கப் பரிபாடல் நூலின் துணைகொண்டு முதற்சங்கப் பரிபாடல் நூலை அணுகுவோம். நம் கையிலுள்ள கடைச்சங்கப் பரிபாடல் நூல் ஓர் இசை நூல் என்பதை, ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பண்ணின் பெயரும் பண் அமைத்தவர் பெயரும் தரப்பட்டிருப்பதைக் கொண்டு தெளியலாம். எடுத்துக்காட்டு: இரண்டாம் பாடல்: நன்னாகனார் இசை; பண்ணுப் பாலையாழ். பத்தொன்பதாம் பாடல்: மருத்துவன் நல்லச்சுதனார் இசை; பண் காந்தாரம்.

இக்குறிப்பைக் கொண்டு, கடைச்சங்கப் பரிபாடல் நூல் இசை நூல் என்பது பெறப்படும். எனவே, தலைச்சங்கப் பரிபாடல் நூலும் இசை நூல் என்பது தன்னில் தானே தெரிய வரும். இது பின்னரும் விளக்கப்படும். 'எத்துணையோ பரிபாடல்' என்னும் தலைச்சங்க நூலுக்குப் 'பெரும் பரிபாடல்' என்னும் பெயர் உள்ளதாகப் பிற்காலச் செய்யுள் ஒன்று தெரிவிக்கிறது. குறள் பாக்களால் ஆன நூல் 'திரு' என்னும் சிறப்பு அடைமொழியும் சேர்த்துத் 'திருக்குறள்' என்னும் பெயரால்

வழங்கப்படுதல் போல, பரிபாடல் என்னும் ஒருவகைப் பாடல்களால் தொகுக்கப்பட்ட நூல், 'பெரும்' என்னும் ஒருவிதச் சிறப்பு அடைமொழியும் சேர்த்துப் 'பெரும் பரிபாடல்' என்னும் பெயரால் சுட்டப்படலாயிற்று. கலிப் பா வகையால் ஆன நூலும் இவ்வாறே கலி — கலித் தொகை என வழங்கப் பெறுகிறது.

## 2. முதுநாரை; 3. முதுகுருகு :

பரிபாடலுக்கு அடுத்தன 'முதுநாரை', 'முதுகுருகு' என்னும் நூல்களாகும். நாரையும் குருகும் கொக்கு இனத்தைச் சேர்ந்தன. உயரமாயிருப்பவரை 'நெட்டைக் கொக்கு' என்று வேடிக்கையாகக் கூறுவது உலகியல். இதுபோல, நீளமான பாடல்களின் தொகுப்பாக இந்நூல்கள் இருந்திருக்கலாம்; அதனால் இப்பெயர் பெற் றிருக்கலாம். நாரை, குருகு ஆகிய பறவைகளைப் பற்றிய நூல்களாகவோ — அவற்றை விளித்துக் கூறும் நூல்களாகவோ இவை இருந்திருக்கலாம் எனக் கூறுதல் சிறப்புடைத்தன்று; அகநானூற்றுப் பாடல்களின் முற்பகுதி, அமைப்பினால் 'களிற்றியானைநிரை' எனப் பெயர் பெற்றாற்போல, நூற்பாடல்களின் அளவு—அமைப்பைக் கொண்டே இப்பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம் என்பதே ஏற்புடைத்து. இவையிரண்டும் இசை நூல்கள். சான்று வருமாறு:-

சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் தமது உரைப்பாயிரத்தில்,

> "இனி இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை பெருங் குருகும் பிறவும்......... முதலாவுள்ள தொன்னூல்கள் இறந்தன"

என ஒரு செய்தி தெரிவித்துள்ளார். பெருநாரை பெருங்குருகு என இரண்டு இசைத் தமிழ் நூல்கள் இருந்ததாக

உரையாசிரியர் கூறியுள்ளார். பெருநாரையும் முதுநாரையும் ஒன்றாகத்தானே இருக்க முடியும்! பெருங்குருகும் முதுகுருகும் ஒன்றுதானே! எனவே, அடியார்க்கு நல்லார் உரையின்படி முதுநாரை, முதுகுருகு என்னும் இரண்டும் இசைத் தமிழ் நூல்கள் என்பது தெளிவாகும்.

**4. கலி:**

இடைச் சங்க கால நூல்களாகக் கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை அகவல் என நான்கு நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள், வெண்டாளி தவிர மற்ற மூன்றும் இசைத் தமிழ் நூல்கள் எனத் தெரிய வருகின்றன.

கடைச்சங்க காலத்தினதாகக் கூறப்படும் 'நூற்றைம்பது கலித்தொகை' என்னும் தொகை நூலைப் போலவே, இடைச்சங்க காலத்திலும் "கலி" என்னும் பெயரில் ஒரு நூல் தொகுக்கப்பட்டிருந்தது. கலிப்பாக்களால் ஆன நூல் கலியாகும். பரிபாடலைப் போலவே கலிப்பாவும் இசைப் பாட்டாகும்; பரிபாடல் நூலைப் போலவே, கலி நூலும் இசைத் தமிழ் நூலாகும். சான்று வருக:-

தொல்காப்பியம்-செய்யுளியலில் உள்ள "ஒற்றொடு புணர்ந்த' என்னும் (242-ஆம்) நூற்பாவின் உரையில், உரையாசிரியர்களாகிய பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் முறையே பின்வருமாறு ஒரு கருத்து தெரிவித்துள்ளனர்:

"அவ்வியாவன கலியும் பரிபாட்டும் போலும் இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன" (பேரா.).

> "அவ்வாறு வருவன, கலியும் பரிபாட்டலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன என்றுணர்க (நச்சர்)

இவ்வுரைப் பகுதிகளால், கலிநூலும் பரிபாடல் நூலும் இசைத்தமிழ் நூல்கள் என்பது புலனாகும்.

கிடைத்திருக்கும் கடைச்சங்க காலக் கலித்தொகை நூல் நூற்றைம்பது பாடல் கொண்டது. கிடைக்காத இடைச்சங்க காலக் கலிநூலோ, இன்னும் மிகுதியான பாடல்களைக் கொண்டதாகும். அதனால் இதனைப் 'பெருங் கலித்தொகை' என்னும் பெயரால் செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயர் வீட்டு ஓலைச் சுவடிப் பாடல் குறிப்பிடுகிறது. இந்தப் 'பெருங் கலித்தொகை' நூலினின்றும் வேறு பிரித்துக் காட்டவே, இதனினும் சிறிய கடைச் சங்கக் காலக் கலித்தொகை நூல் 'நூற்றைம்பது கலி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5. குருகு

அடுத்தபடியாகக் 'குருகு' என்னும் நூல் குறிப்பிடப் பட்டுள்ளது. தலைச்சங்கத்தனவாகக் கூறப்பட்டுள்ள முது நாரை, முதுகுருகு என்னும் நூல்கள் பற்றிக் கூறியுள்ள கருத்துகளை யெல்லாம் இதற்கும் கொள்ள வேண்டும். தலைச் சங்கக் குருகு நூல் முதுகுருகு எனில் இவ்விடைச் சங்கக் குருகு சிறு குருகு நூலாக இருக்கலாமோ—என்னவோ! எங்ஙனம் இருப்பினும், இஃதும் தமிழிசைப் பாடல் தொகை நூல் என்பது போதரும்.

## 6. வியாழ மாலை அகவல் :

மாலை என்னும் சொல்லைக் கொண்டு வியாழ மாலை அகவல் என்னும் நூலை ஒரு தொகை நூலாகக்

கொள்ளலாம். இஃது ஓர் இசைத் தமிழ் நூல் என்பதற்கு, வியாழம் என்னும் சொல்லும் அகவல் என்னும் சொல்லுமே போதிய சான்றுகளாகும். விளக்கம் வருமாறு:—

முதலில் அகவல் என்னும் சொல்லை எடுத்துக் கொள்ளலாம். இறையனார் அகப்பொருள் உரையின் ஓலைச் சுவடிப் படிகள் (பிரதிகள்) சிலவற்றில் 'வியாழ மாலை அகவல்' என நீளமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்நூல், அதே உரையின் வேறோர் ஓலைச் சுவடியில் 'அகவல்' எனச் சுருங்கக் குறிப்பிடப்பட்டுள்ளது. சீவக சிந்தாமணி என்னும் நூல் சிந்தாமணி எனவும், புறப் பொருள் வெண்பா மாலை என்னும் நூல் வெண்பா மாலை எனவும் இறுதிப் பகுதியால் பெயர் வழங்கப் படுவது போல, வியாழ மாலை அகவல் என்னும் இந் நூலும் அகவல் என இறுதிப் பகுதியால் வழங்கப்பட்டது போலும்! முதலியார்க்குள்ளும் செட்டியார்க்குள்ளும் சிறப்புப் புகழ் பெற்றவர்களை முழுப் பெயர்களால் சுட்டாமல், முதலியார் எனவும் செட்டியார் எனவும் இனப் பெயர்களால் குறிப்பிடுவதுபோல, அகவல் நூல்கள் பல இருக்கவும், சிறப்பு கருதி இந்நூல் அகவல் எனப் பாப் பெயரால் சுட்டப்பட்டது போலும்! பாவால் பெயர் பெற்ற பரிபாடல், கலி என்னும் தொகை நூல்களைப் போலவே, இந்நூலும் அகவல் பாக்களின் தொகுப்பு நூல் என்பது புலனாகலாம்.''

அகவல் என்பது வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நால்வகைப் பாக்களுள் ஆசிரியப் பாவைக் குறிக்கும். தொல்காப்பியம் — செய்யுளியலில், இந்நால்வகைப் பாக்களைப் பற்றிய சிறு விவரம் ஓரிடத்தில் தரப்பட்டுள்ளது. நான்கின் விவரம் முறையே வருமாறு :-

"அகவல் என்பது ஆசிரி யம்மே" (77)

"அஃதன் றென்ப வெண்பா யாப்பே" (78)
"துள்ளல் ஓசை கலியென மொழிப" (79)
"தூங்கல் ஓசை வஞ்சி யாகும்" (80)

இந்நூற்பாக்களின் பொருள் முறையே வருமாறு:—

1 ஆசிரியப் பாவிற்கு அகவல் ஓசை உரியது (அகவல் என்பது அகவிக் கூவி அழைக்கும் எடுப்பான ஓசை)

2 அகவல் ஓசையில்லாதது. (அகவாத நடுத்தர ஓசை உடையது) வெண்பாவாகும்.

3 துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது.

4 தூங்கல் ஓசை வஞ்சிப் பாவிற்கு உரியது.

இவற்றுள் அகவல் என்பதை மட்டும் நாம் எடுத்துக் கொள்வோம். உரையாசிரியர்களுள், பேராசிரியர், "அகவிக் கூறுதலான் அகவல் எனக் கூறப்பட்டது" என்றும், நச்சினார்க்கினியர் "அகவிக் கூறலின் அகவலாயிற்று" என்றும் விளக்கம் தந்துள்ளனர். மற்றும் பிங்கல நிகண்டில்,

"அகவல் என்பதும் அழைத்த லாகும்." (238)
"அகவலும் எடுத்தல் ஓசைப் பெயரே" (351)

எனக் கூறப்பட்டிருப்பதும் இங்கே கருதத்தக்கது.

ஈண்டு இவ்வளவு கூறியதன் காரணம், அகவல் என்பது இசை சார்ந்தது என அறிவிக்கும் நோக்கமே. அகவிப் பாடும் ஆண் மகன் 'அகவலன்' என்று அழைக்கப்பட்டான். இதனைப் பதிற்றுப் பத்தில் உள்ள,

"கண்டி நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே"

என்னும் பாடல் (43) பகுதியால் அறியலாம். அடுத்து அகவிப் பாடும் பெண்டிர் 'அகவல் மகளிர்' என அழைக்கப்பட்டனர். இத்னைக் குறுந்தொகையில் உள்ள,

"அகவல் மகளே அகவல் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவல் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே" (23)

என்னும் பாடலால் அறியலாம். இதுகாறுங் கூறியவற்றால்; அகவலுக்கும் பாடுதலுக்கும் உள்ள தொடர்பு தெரிய வரும்; வரவே இந்த அகவல் நூலும் ஓர் இசைத்தமிழ் நூல் என்பது தெளிவாகும்.

அடுத்து, 'வியாழம்' என்னும் முற்பகுதிக்கு வருவோம்: செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயர் வீட்டு ஓலைச் சுவடியில், 'அகவல்' என்னும் இறுதிப் பகுதி இன்றி, 'வியாழ மாலை' என்னும் முற்பகுதி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. உலக வழக்கில், பெயர்களின் பிற்பகுதிகளை விட்டுவிட்டு முற்பகுதிகளை மட்டும் சுருக்கமாகச் சொல்லும் மரபு உண்டு என்பதை அனைவரும் அறிவர்.

இந்த 'வியாழம்' என்னும் பெயர் இசையோடு நெருங்கிய தொடர்பு உடையது. குறிஞ்சிப் பண் வகையில் 'வியாழம்' என ஒரு பண் உண்டு. இதனைத் திவாகர நிகண்டு ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் உள்ள,

" சாவகக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி,
வியாழக் குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி,
ஆகுங் குறிஞ்சிக்கு அடுத்தபல் பெயரே" (146)

என்னும் நூற்பாவால் அறியலாம். மற்றும், குறிஞ்சி யாழில் வியாழக் குறிஞ்சி யாழ் என ஒரு யாழ் உண்டு என்பதை, பிங்கல நிகண்டின் அநுபோக வகை என்னும் பகுதியிலுள்ள

" —...... ........ ........ வியாழக் குறிஞ்சி.
பஞ்சமம், தக்கணாதி, சாவகக் குறிஞ்சி,

ஆநந்தை யென இவை ..............
குறிஞ்சி யாழ்த்திற மாகக் கூறுவர் '' (21)

என்னும் நூற்பாவால் அறியலாம். மற்றும் ஒரு சான்று வருமாறு :-

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்'' எனச் சுந்தரரால் பாராட்டப் பெற்றவரும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் யாழ் வல்லுநரை உடன் வைத்துக் கொண்டு பாடி வந்தவருமாகிய திருஞான சம்பந்தர், தம் தேவாரப் பதிகங்களுள் இருபத்தைந்து பதிகங்களை வியாழக் குறிஞ்சி என்னும் பண் அமைத்துப் பாடியுள்ளார். இதனாலும், வியாழம் என்பது குறிஞ்சிப் பண் வகையைச் சார்ந்தது என்பது புலனாகும். மேலும், இடைச்சங்கக் காலந்தொட்டு கி.பி. ஏழாம் நூற்றாண்டினராகிய சம்பந்தர் காலம் வரையும் அதற்குப் பின்னரும் 'வியாழம்' என்னும் பண் பெற்றிருந்த செல்வாக்கு விளங்கும்.

எனவே, வியாழ மாலை அகவல் என்னும் நூல், குறிஞ்சி யாழ் கொண்டு இசைக்கும் குறிஞ்சிப் பண் அமைந்த அகவல் பாடல்களின் தொகுப்பு என்பது புலனாகும். இதற்கு மேலும் அரண் செய்யும் வகையில் சிலப்பதிகாரத்தில் தக்கதோர் அகச்சான்று உள்ளது. வடநாடு சென்று வெற்றி வாகை சூடி மீண்ட சேரன் செங்குட்டுவன், அகவல் பாடும் அகவல் மகளிரைக் கொண்டு, மறவர்கட்கு இசை விருந்து அளித்தானாம். இதனைச் சிலப்பதிகாரம்—நடுகற் காதையில் உள்ள,

"வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇ
..........................................
அந்தீங் குறிஞ்சி அகவல் மகளிரின்
மைந்தர்க்கு ஓங்கிய வருவிருந்து அயர்ந்து'' (25-36)

என்னும் பகுதி தெரிவிக்கிறது. ஈண்டு, குறிஞ்சி, கவர்ச்சி யானது - தித்திப்பானது என்னும் பொருளில் 'அந்தீங் குறிஞ்சி என்று சிறப்பிக்கப்பட்டிருப்பதும், அடுத்து அகவல் என்பதோடு தொடர்புறுத்தப் பட்டிருப்பதும் நுணுகி நோக்கி மகிழ்தற்குரியது.

எனவே, வியாழ மாலை அகவல் என்னும் நூல் ஒரு தமிழிசை நூல் என்பது உறுதி.

### 7. நூற்றைம்பது கலி; 8. எழுபது பரிபாடல்:

கடைச்சங்க நூல்களாகிய எட்டுத்தொகை நூல்களுள், நூற்றைம்பது கலி என்னும் கலித்தொகையும் எழுபது பரிபாடல் என்னும் பரிபாடலும் இசைத் தமிழ் நூல்களாம். முதற் சங்க நூலாகிய (எத்துணையோ) பரிபாடல் நூலும், இடைச்சங்க நூலாகிய கலி என்னும் நூலும், இசைத் தமிழ் நூல்கள் என்பது முன்னர் நிறுவப் பட்டுள்ளது. எனவே, கடைச் சங்கத்தைச் சேர்ந்த இவ்விரு நூல்களுங் கூட இசைத் தமிழ் நூல்களே என்பது பெறப்படும். பரிபாடல் நூலிலுள்ள ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், இசையும் இசை அமைத்தவர் பெயரும் கூறப்பட்டிருப்பது ஈண்டு மீண்டும் நினைவுகூரத் தக்கது.

### 9. கூத்து: 10. வரி: 11. சிற்றிசை: 12. பேரிசை:

கடைச்சங்க நூல்களாக இறுதியில் கூறப்பட்டுள்ளவை கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்பனவாகும். வரி என்பது இசைப்பாட்டு; எனவே, இந்நூல் இசை நூலாகும். கூத்து என்பதில் வரிக் கூத்து என்பதும் உண்டு. வரிக் கூத்து என்றால், இசை நாடகம் என்பதாகும். எனவே, இங்கே கூறப்பட்டுள்ள கூத்து என்பது இசை நாடக நூலாக இருக்கலாம். இறுதியாக உள்ள சிற்றிசை, பேரிசை என்னும் நூல்கள், தம் பெயராலேயே தாம் இசை நூல்கள்

என்பதை அறிவிக்கின்றன. இவை அழிந்தனவா அழிக்கப் பட்டனவா என்பது தெரியவில்லை.

இனி, இறையனார் அகப்பொருள் உரையில் குறிப் பிடப்படாத - சங்க காலத்தை ஒட்டிய இசைநூல்கள் சிலவற்றைக் காண்போம்:

## 13. இசை நுணுக்கம்; 14. இந்திர காளியம்:

சிகண்டி முனிவர் இயற்றிய இசை நுணுக்கம் என்னும் நூல் ஓர் இசை நூல் என்று விதந்து கூற வேண்டியதில்லை. முன்னர்க் கூறப்பட்டுள்ள தமிழ் இசை நூல்கள் எல்லாம், பண்ணமைந்த பாடல் நூல்களாகும். இசை நுணுக்கம் என்பதோ, இசை யிலக்கணம் கூறும் நூல் என்பது பெயராலேயே தெரிகிறது. கிடைக்காத இவ்விசை யிலக் கண நூலில், இசையின் நுட்பக் கூறுகள் கூறப்பட்டிருக்க வேண்டும்.

யாமளேந்திரர் இயற்றிய இந்திர காளியம் என்பதும், இசை நூல் என்று கருதப்படுகின்றது. மேற் கூறப்பட்டுள்ள இரண்டு நூல்களைப் பற்றிய குறிப்பு, சிலப்பதிகார உரைப் பாயிரத்தால் அறியப்படுகின்றது. இவ்வாறு இன்னும் பல நூல்கள் இருந்து அழிந்து போயிருக்கலாம். ''இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங் குருகும் ... ... ... முதலாக உள்ள தொன்னூல்கள் இறந்தன'' எனச் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் கூறியிருப்பது ஈண்டு மீண்டும் நினைவுகூரத்தக்கது.

## 15. பஞ்சமரபு:

அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் இசை நாடக நூலும் சிலப்பதிகார உரைப் பாயிரத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. இந்நூல் கிடைக்கப் பெற்று வெளியிடப்

பட்டுள்ளது. இந்த நூலில், இசை, முழவு, கூத்து, தாளம், அபிநயம் ஆகிய ஐந்தும் இடம் பெற்றுள்ளன.

சிலப்பதிகார உரைப் பாயிரத்தால் அறியப்பட்டன வாகக் கூறப்பட்டுள்ள நூல்கள் சிலப்பதிகாரக் காலத்தை ஒட்டியவை எனலாம்.

## 16. பதினாறு படலம்:

அகத்தியரின் மாணாக்கராகிய தொல்காப்பியர் முதலான பன்னிருவர் தலைக்கு ஒன்று வீதம் இயற்றிய பன்னிரண்டு பகுதிகளின் தொகுப்பே பன்னிருபடலம் என ஒரு கருத்துச் சொல்லப்படுதல் போலவே, 'பதினாறு படலம்' என்பதும் ஒரு தொகைநூலாக இருக்கலாம். இஃது ஓர் இசைத்தமிழ்ப் பாடல் நூல் அன்று; இசை யிலக்கணம் கூறும் இலக்கண நூலாகும். இதற்குரிய சான்று வருமாறு:-

சிலப்பதிகாரம் — புகார்க் காண்டம் — கானல் வரி, என்னும் தலைப்பின் தொடக்கப்பகுதியில் கூறப்பட்டுள்ள எட்டு வகை இசை யொலிச் செயல்களுள் ஒன்றாகிய 'தெருட்டல்' என்பதை விளக்கத் தொடங்கிய சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர்,

"தெருட்டல் என்பது செப்புங் காலை
உருட்டி வருவ தொன்றே மற்றவ்
ஒன்றன் பாட்டுமடை ஒன்ற நோக்கின்
வல்லோர் ஆய்ந்த நூலே யாயினும்
வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாயினும்
பாட்டொழிந் துலகினில் ஒழிந்த செய்கையும்
வேட்டது கொண்டு விதியுற நாடி"

என வரும்......இவை இசைத் தமிழ்ப் பதினாறு படலத்துட் கரண வோத்துட் காண்க" — எனக் கூறியுள்ளார்.

இந்த உரைப் பகுதியின் வாயிலாக, சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் 'பதினாறுபடலம்' என்னும் இசைத் தமிழ் நூலினை அறிமுகம் செய்துள்ளார். அவர் காலத்துக் கிடைத்திருந்த இந்நூல் இப்போது இல்லை. மற்றும், சிலம்பு-கானல் வரி-தொடக்கப் பகுதியிலுள்ள பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னும் எண்வகை இசை ஆய்வுகளை விளக்கப் போந்த அரும்பதவுரையாசிரியர். இவற்றை விளக்கும் பதினாறு படலம் என்னும் நூலிலுள்ள எட்டு இசையிலக்கண நூற்பாக்களைத் தந்துள்ளார். இசைத்தமிழ் இலக்கணத்தை இவ்வளவு விளக்கமாகச் சொல்லும் பதினாறு படலம் நமக்குக் கிடைக்காமற் போனது தீப்பேறே.

**7. சிலப்பதிகாரம் :**

கடைச்சங்க காலத்தை ஒட்டிய நூல்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம், இயல்-இசை-கூத்து என்னும் முப்பகுதிகளும் அடங்கிய முத்தமிழ்க் காப்பியம் என்று புகலப் பெறுகிறது. இந்நூலில் இசையிலக்கணம், இசைக் கருவியிலக்கணம் முதலிய இசை தொடர்பான செய்திகள் பல விவரிக்கப்பட்டுள்ளன. மற்றும், இந்நூலிலுள்ள, கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலிய பகுதிகள் இசைப் பாட்டுகள் உடையனவாகும். இன்னும் வளர்த்துவது ஏன்? தமிழ் இசையில் சிலப்பதிகாரத்துக்கும் பங்கு உண்டு.

**18. பரத சேனாபதீயம் :**

**19. மதிவாணர் நாடகத் தமிழ் நூல் :**

ஆதிவாயிலார் இயற்றிய 'பரதசேனாபதீயம்' என்னும் நூலும் பாண்டியன் மதிவாணனார் இயற்றிய 'மதிவாணர்

நாடகத் தமிழ்' என்னும் நூலும் இப்போது கிடைக்காத தொன்னூல்களாம். நாடகத் தமிழ் நூல்களாகிய இவற்றிலும், சிலப்பதிகாரம் போலவே, இசை பற்றிய கூறுகள் நிரம்ப உண்டு. இசையின்றிக் கூத்து ஏது? இவ்விரு நூல்களும் சிலம்பு-உரைப்பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 20. பன்னூல்கள்:

பரதம், முறுவல், சயந்தம், செயிற்றியம் முதலான நூற் பெயர்கள் தெரிய வருகின்றன. இவற்றைச் சேர்ந்த சில நூற்பாக்கள் (சூத்திரங்கள்) மட்டும் கிடைத்துள்ளன; நூல்கள் முழுமையாகக் கிடைத்தில.

### தொல்காப்பியம்:

'கல்யாண சந்தடியில் தாலி கட்ட மறந்தாற்போல்' பல நூல்களைப் பற்றிப் பேசும் ஆரவாரத்தில் தொல்காப்பியத்தை மறப்பதற்கில்லை.

இதுகாறும் முழுமையாகக் கிடைத்திருக்கும் தமிழ் நூல்களுள் தொல்காப்பியமே முந்தியது. இற்றைக்கு இரண்டாயிரத்தைந் நூறு அல்லது மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகத் தொல்காப்பியம் கருதப்படுகிறது. இந்நூலின் செய்யுளியல் என்னும் பகுதியில் இசைப்பாட்டு இலக்கணம் இயம்பப்பட்டுள்ளது. ஆசிரியப் பாவுக்கு அகவலோசையும் வெண்பாவுக்கு அகவாத செப்பல் ஓசையும், கலிப்பாவுக்குத் துள்ளல் ஓசையும், வஞ்சிப் பாவிற்குத் தூங்கல் ஓசையும் உரியன எனக் கூறப்பட்டிருப்பது கருதத்தக்கது. ஓசைக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பாட்டு என்பதே பாடப்படுவதுதானே! பாடுவது என்றால் இசையுடன் பாடுவதேயன்றோ? எனவே, இசையிலக்கணம் கூறியுள்ள தொல்காப்பியமும் ஒரு வகையில் இசை நூலாகும்; இவ்விலக்

கணப்படி இயற்றப் பெற்ற நால் வகைப் பா—பாவினப் பாடல் நூல்களும் இசைத்தமிழ் நூல்களேயாம்.

தொல்காப்பியத்துக்கு முன்பே பல இசை நூல்கள் இருந்தன என்பதைத் தொல்காப்பியர் செய்யுளியலில் பின் வருமாறு கூறியிருப்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்:

"நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே" (10)

என்னும் இரு நூற்பாக்களிலும் 'இசை' என்னும் சொல் இடம் பெற்றிருப்பது கருதத் தக்கது. மற்றும்,

"வரைவின்று என்ப வாய்மொழிப் புலவர்" (74)
"யாப்பென மொழிப யாப்பறி புலவர்" (77)
"நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே" (153)
"ஒத்தென மொழிப உயர்மொழிப் புலவர்" (168)

எனக் கூறியிருப்பதனாலும், பல இடங்களில், என்ப, மொழிப, என்மனார் புலவர் என்று கூறியிருப்பதனாலும், தொல்காப்பியருக்கு முன்பே பலர் இசைப் பாடல் நூல்களும் இசையிலக்கண நூல்களும் இயற்றியிருந்தமை புலனாகும்.

இலக்கியம் இருந்தாலேயே அதையொட்டி இலக்கணம் தோன்றும். எனவே, தொல்காப்பியம் என்னும் இலக்கணம் இருப்பதைக் கொண்டு இலக்கியங்கள் இருந்தன என உணர வேண்டும், செய்யுளியல் உரையில் பல்வேறிடங்களில் பேராசிரியர் கூறியுள்ள பின்வரும் தொடர்கள் எண்ணத்தக்கன:-

"இலக்கணம் உண்மையின் இலக்கியம் காணாமாயினும் அமையும்" —"இவற்றுக்கு உதாரணம் காணாமையின் காட்டாமாயினாம்; இலக்கணம் உண்மையின் அமையும் என்பது — இலக்கணம் உண்மையின் இலக்கியம் பெற்றவழிக் கண்டு கொள்க"—

இதனால், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே, தமிழில், இசை இலக்கிய—இலக்கண நூல்கள் பல இருந்தமை புலனாகும்.

**தமிழ் இசையின் தொன்மை:**

தமிழ் இசையின் தொன்மை பற்றிப் பலராலும் பேசப் படுகிறது. இதற்கு ஆராய்ச்சி தேவையில்லை. குறிப்பிட்ட ஒரு குழு மக்களால் தமிழ் என்னும் மொழி பேசப்படத் தொடங்கிய போதே தமிழ் இசையும் தோன்றிவிட்டது, தமிழ் எழுத்துகள் உருவாக்கப்பட்டு நூல்கள் இயற்றப் படத் தொடங்கியதற்கு முன்பே தமிழிசை தோன்றி விட்டது. இசைக்குக் கல்வி இன்றியமையாததாக அன்று இல்லை. இன்றும் கல்வி கற்காத பலர் இசைப் பாடல்கள் பாடுவதைக் கேட்கலாம். அவற்றுள் சில:-

தாலாட்டுப் பாடல், நிலாப் பாடல், விளையாட்டுப் பாடல், கும்மிப் பாடல், கோலாட்டப் பாடல், வழிநடைப் பாடல், ஏற்றப் பாட்டு, உழவுப் பாட்டு, ஒப்பாரிப்பாட்டு, பல்வேறு தொழில்கள் செய்யும்போது பாடும் பாடல்கள், பொழுதுபோக்குப் பாடல், நாடோடிப் பாடல் — இன்ன பிறவாம்.

இவை மரபு வழி மரபு வழியாக—அன்று தொட்டு இன்றுவரை, வாய்-செவி மூலமாகக் கற்கப்பட்டுப் பாடப் பட்டு வருகின்றன.

எனவே, தமிழ் இசையின் தொன்மைக்குத் தனியான ஆராய்ச்சி வேண்டுவதில்லை. இந்தத் தொன்மைச் சிறப்பு, தமிழ் மொழிக்கு இருப்பதல்லாமல், உலகில் உள்ள எல்லா மொழிகட்கும் உண்டு.

தமிழில் இசை இல்லை என்று குறை கூறும் குறைமதியோர்க்காக வேண்டுமென்றால், தமிழ் இசையை ஒழித்து-மறைத்துப் பிற இசைகளைப்புகுத்தி நிலைநாட்ட முயலும் கொலைகாரர்க்காக வேண்டுமென்றால், தமிழ் இசையின் தொன்மைப் பெருமையை எடுத்து இசைக்கலாம். இந்தச் சூழ்நிலையில் வேண்டுமென்றால் இஃது இன்றியமையாத தாகும். தமிழ் இசை வாழ்க!

**கருத்து வழங்கிய கருவூலங்கள்:**

தொல்காப்பியம்
தொல்-பேராசிரியர் உரை
தொல்-நச்சினார்க்கினியர் உரை
இறையனார் அகப்பொருள் உரை
கல்வி உளவியல் நூல்
பரிபாடல்
அகநானூறு
திருக்குறள்
சீவகசிந்தாமணி
புறப்பொருள் வெண்பாமாலை
செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயர் வீட்டு ஓலைச் சுவடி
திவாகர நிகண்டு
பிங்கல நிகண்டு
சுந்தரர் தேவாரம்
சம்பந்தர் தேவாரம்
சிலப்பதிகாரம்
சிலம்பு-உரைப்பாயிரம்
சிலம்பு-அரும்பத உரை
சிலம்பு-அடியார்க்கு நல்லார் உரை
இன்ன பிற

# 19. ஒரு புது முதலியாரின் அறிமுகம்

வேளாள முதலியார், தொண்டைமண்டல முதலியார், செங்குந்த (நெசவு) முதலியார், சேனை முதலியார், சைவ முதலியார் என்னும் பல வகை முதலியார் இனத்தை அறிந்துள்ள நமக்கு, மற்றொரு புது 'முதலியார்' அறிமுகம் ஆகிறார். அவர்தான் திருவாளர் 'முருங்கை' முதலியார்; அஃதாவது முருங்கை மரத்தைத்தான் சொல்கிறேன்.

அமுதசாகரம் என்னும் நூலின் 162-ஆம் பாடலில், முருங்கை மரம் "ஊருடை முதலி" என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை "ஊருடை முதலியார்" என்னும் பெயரால் 'ஜூபிலி' தமிழ்ப் பேரகராதி குறிக்கின்றது. இம்மரம், வைத்திய மலையகராதியில், 'ஊருடை' என்று சுருங்கப் பெயர் வழங்கப்பெற்றுள்ளது; சாதிப் பட்டத்தை உதறி எறிந்து விட்ட இவ்வகராதி ஒரு 'சீர் திருத்தக்காரன்' போலும்? முருங்கை தொடர்பாகச் சில செய்திகள் ஈண்டு நினைவுகூரத்தக்கன:

1) "வீட்டுக்கு ஒரு முருங்கை மரமும் ஒரு கறவை எருமை மாடும் இருந்தால் போதும்" என்று சொல்வது உலகியல். முருங்கைக் கீரையைக் கொண்டு துவட்டல், கடையல்-மசியல், கூட்டு, சாறு, குழம்பு ஆகிய கறி வகை செய்யலாம்; முருங்கைப் பூவால் 'கூட்டு' செய்யலாம்; முருங்கைக் காயால் கூட்டு, பொரியல், குழம்பு ஆகிய கறி வகை செய்யலாம். கறவை எருமை மாடு இருந்தால், பால், தயிர், மோர், நெய் ஆகியவற்றிற்குக் கருப்பு (பஞ்சம்) இல்லை. விருந்தினர் திடீரென வரினும், வெளியில் போய்க்

கறிகாய் தேடாமல் சமைத்து உணவு அளிக்கலாம். இதனால் தான், மேற்கூறிய முது மொழி எழுந்தது.

எனவே, ஊருணி போல, ஊரார்க்குப் பயன்படுகிற முதல் (capital) பொருளாயும் முதன்மையான பொருளா யும் இருப்பதால் முருங்கைக்கு 'ஊருடை முதலியார்' என்னும் பெயர் அளிக்கப் பெற்றது போலும்! இங்கே இன்னொரு கருத்தும் நினைவுகூரத்தக்கது.

2) சிற்றூர்களில் முருங்கை மரம் இல்லாத வீட்டார், வேறொருவர் வீட்டில் இருக்கும் மரத்தைச் சொந்தமாகப் பயன்படுத்திக் கொள்வதும் உண்டு. இதனாலும், முருங்கைக்கு, "ஊருடை முதலியார்" என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கலாமோ? மற்றொரு கருத்தையும் இங்கே சொல்லாமல் விடுவதற்கில்லை. என் சொந்தச் சிற்றூரில் எங்கள் வீடு உட்படப் பெரும்பாலான வீடுகளிலும், (வீட்டுத்) தோட்டத்தில் முருங்கை மரம் இருப்பதில்லை; தெருவிலேயே வைத்து வளர்க்கப்பட்டு வருகின்றது.

இதற்கு உரிய காரணமாகப் பலர் ஏதேதோ சொல்வ துண்டு. ஆனால் யான் ஒரு காரணம் கூறுவேன்:

3) பொதுவாக மரங்கள், மாந்தர் வெளிவிடும் தீய காற்றாகிய கரியகக் காற்றைத் (carbondioxide) தாம் உள் ளிழுத்து வளர்கின்றன என்பதைப் பலரும் அறிவர். இந்தக் கரியகக் காற்று முருங்கை மரத்துக்கு மிகவும் தேவை. வீட்டுத் தோட்டத்தில் உள்ள முருங்கையினும், தெருவில் உள்ள முருங்கையே, நடமாடும் மக்கள் பலர் விடும் கரியகக் காற்றை மிகவும் பெறுகிறது; அதனால் நன்கு வளர்கிறது. தோட்டத்தில் வைத்துப் பார்த்து உருப்படாமற் போனதை அறிந்த மாந்தர் தெருவில் வைத்து வளர்க்கலாயினர். (இந்தக் கருத்தை என் மருமகள் சொல்ல அறிந்துகொண் டேன் யான்.)

மற்ற இனத்தாரினும், நெசவு முதலியார்கள் மிகுதியா யுள்ள சிற்றூர்களில், முருங்கை தெருவில் செழிக்கிறது. இதற்கு உரிய காரணமாவது; மற்ற இனத்தினர் வீட்டுக் குள்ளேயோ அல்லது ஊருக்கு வெளியிலேயோ வேலை செய்வது பெரும்பான்மையாகும். ஆனால், இந்த இனத் தினர் இருக்கும் தெருக்களில், காலை முதல் மாலை வரை மக்கள் புழக்கம் இருந்து கொண்டேயிருக்கும். அல்லி பிடித்தல், பாவு சுற்றுதல், பாவு தோய்தல் முதலிய நெசவு தொடர்பான வேலைகள் நாள் முழுதும் தெருவில் நடந்து கொண்டேயிருக்கும். இதனால் தெருவில் முருங்கை செழிக் கிறதோ!

யான் எதையும் உறுதியாகச் சொல்லத் துணியவில்லை; இதனை ஓர் ஆய்வுக் கருத்துரையாகவே இங்கே வைத் துள்ளேன். முருங்கை பழையது எனினும், 'முதலியார்' என்னும் அதன் பட்டப்பெயர் பலருக்குப் புது அறிமுகமே யன்றோ?

(குறிப்பு:- இக்கட்டுரை சாதி அடிப்படையில் இன்றி ஆய்வு அடிப்படையில் எழுதப்பெற்றுள்ளது.)

# 20. கவிக் குரல்

1

1960-ஆம் ஆண்டு பொங்கல் நாள் அன்று, புதுவை சக்தி நிலையத்தின் சார்பில் 'உலகு உய்ய' என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்திற்கு நான் தலைமை தாங்கியபோது, கவியரங்கின் முடிவில் தலைமையுரையாக நான் வழங்கிய பாடல் பகுதியை இவண் தருகிறேன். நீண்ட தொடர் கருத்தாக இருப்பதால் ஆசிரியப் பாவாகப் படைத்துள்ளேன். இதோ பாடல்:

### "உலகு உய்ய"

"உலகம் நலமாய் உய்ய வேண்டுமால்!
உலகம் உய்ய என்செய வேண்டுமோ?
உலகம் உய்க எனும்வாய் வாழ்த்தால்
உலகம் நன்றாய் உய்ந்து விடுமோ?
இந்நாள் வரையஃ துய்ய வில்லையோ?
பன்னெடு நாளாய்ப் பாரகம் உளதே!
இப்பா ரதனில் எப்பொருள் இல்லை?
அலைகடல் இல்லையோ ஆறுகள் இல்லையோ
மலைகள் இல்லையோ மரஞ்செடி இல்லையோ
மண்வளம் இல்லையோ மக்கள் இல்லையோ
உண்பொருள் இல்லையோ உறையுள் இல்லையோ
போற்றுநூல் இல்லையோ புலமை இல்லையோ
ஆற்றல் இல்லையோ ஆராய்ச்சி இல்லையோ
மல்லல் உலகத்து இல்லாத தென்னை?

எல்லாம் இருந்தும் ஏனுய்ய வில்லை?
நல்ல உள்ளம் நானிலத் தில்லை
எல்லாரும் உய்ய என்ன வேண்டும்?
பாதாங்கீர் வேண்டா பசுங்கூழ் போதும்
ஆனால் அக்கூழ் அனைவர்க்கும் வேண்டும்
மாளிகை வேண்டா மண்குடில் போதும்
ஆனால் அக்குடில் அனைவர்க்கும் வேண்டும்
ஒரு சிலர்க்கு மட்டில்
பாதாங் கீரோ? பட்டின் ஆடையோ
மாடமா ளிகையோ கூடகோ புரமோ?
மிகப் பலர்க்குப்
பழங்கூ ழுணவோ பழங்கந்த லுடையோ
மழையினை ஏற்கும் மண்குடில் உறையுளோ?
இன்னும் ஒருசிலர்க் கேதும் இல்லையே?
என்றெல் லோர்க்கும் எல்லாம் கிடைக்குமோ
அன்றே உலகம் உய்ந்த தாகுமால்!
ஒருசிலர் உய்வது உலகுய்வ தாமோ?
என்ன உலகம்! என்ன அமைப்பு!
என்ன சமூகம்! என்ன அரசியல்!
என்ன கல்வி! என்ன ஆராய்ச்சி!
என்ன அறிவியல்! என்ன மதங்கள்!
எல்லாம் பகட்டு எல்லாம் தோல்வி
தன்னலம் ஒன்றே தரையினர் குறிக்கோள்.
தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்
உண்மை யானே உய்யுமிவ் வுலகம்
என்று புறமும் நன்று நவிலுமால்!
வறுமை பிணிபகை வையகத் தின்றி
உடல்நலம் பல்வளம் ஒற்றுமை ஓங்கின்
உலகம் உய்ந்ததாய் ஒப்புக் கொள்ளலாம்
இவற்றினும் வேறே என்ன வேண்டும்?
இவற்றினை உலகம் எய்தும் வழிஎது?

தன்னல மின்றித் தரைநலம் பேணல்
விட்டுக் கொடுத்தல் கட்டுப் பாடு
கடின உழைப்பு கலங்கா உறுதி
ஐம்புல நுகர்வுக் கடிமைப் படாமல்
அடக்கி யாண்டு உடல்நலம் ஆக்கல்
மக்கட் பண்பு மனநலம் பேணல்
ஒழுக்கம் ஓம்பல் ஒற்றுமை பெருக்கல்
ஒப்புர வறிந்தே உலகோ டொட்டுதல்
இனைய பண்புகள் யாவர்க்கும் இருப்பின்
உலகம் உய்வ துறுதி!
உய்வழி யறிந்தே உலகம் உய்கவே!''

## 2

காட்சி கொடுக்காத கடவுளை நோக்கி, தன்மேல் இரங்கி ஏன் காட்சி தரவில்லை என ஓர் அன்பன் நொந்து கேட்பதாக, 'இல்லையோ நீ' என்னும் தலைப்பில் யான் நீண்டதொரு பாடல் தொகுப்பு படைத்துள்ளேன். தொகுப்பிலிருந்து ஐந்து பாடல்களை இங்கே தருகிறேன்.

### ''இல்லையோ நீ''

'பிள்ளையிளம் பருவத்தே பெற்றோர்கள் சொன்னார்கள்
கள்ளமது நீபுரியின் கண்குத்தும் சாமியென்று
வெள்ளைமனப் பெற்றோரால் விளைந்ததுநின் அறிமுகமே
உள்ளத்து நம்பினனே ஒருவன் நீ உண்டென்றே'.

'வெள்ளிக் கிழமைதொறும் விரும்பி மிக என் அன்னை
மெள்ளக் கொண்டுசென்றாள் மேவுமுன்றன் கோயிலுக்கு;
குள்ளக் குறுங்காலால் கோடிவலம் வந்தேனே
கள்ளங் கபடின்றிக் கையெடுத்துத் தொழுதேனே'

'திருவிழா பலகண்டேன் திருநீறும் பூசினனே.
தெருவெலாம் விழுந்தெழுந்து தெண்டனிட்டுக் கும்பிட்டேன்
ஒருபணம் கிடைத்தாலும் உண்டியிலே போட்டுவைத்தேன்
'அரகர மகாதேவா' ஐந்நூறு முறை சொன்னேன்'.

'குழந்தைமையில் நட்டசெடி குமர வயதைக் கடந்து
தழைந்தபெரு மரமாகித் தளிர்விட்டுப் பூத்ததுவே
குழைந்திடுநல் லன்புடனே கோயில்கள் சுற்றிவந்தேன்
பழந்தேங்கா யுடன்சென்று பலபாக்கள் பாடினனே'.

'துறைகள் மூழ்கிவந்தும் தொண்டுபல செய்திட்டும்
முறையாய்ப் பலமுயன்றும் முழுமுதலே கண்டிலனே
இறைவா எங்கொளிந்தாய் ஏனொளிந்தாய் இல்லையோ நீ
இறையே இரங்காயோ என்னசெயின் கண்டிடலாம்?'.

## 3

தமிழக அரசு நடத்திய முதியோர் இலக்கியப் பயிற்சிப் பண்ணையில் நான் பயிற்சி பெற்றபோது, அகவை கடந்தோர் வாசிப்பதற்காக எளிய நடையில் சில பாடல் மடல்கள் எழுதினேன். அவற்றுள், 'ஒரு மாற்றாந்தாய்' என்னும் தலைப்புடைய மடலை இப்போது தருகிறேன்.

பொதுவாக மாற்றாந் தாயைக் கொடியவளாக்கிக் காட்டுவது உலக நடைமுறை. ஆனால் அம்மாற்றாந் தாயை நான் வேறு கோணத்தில் படம் பிடித்துக் கொடுத்துள்ளேன். ஒரு மாற்றாந்தாய் இரங்கத்தக்க தனது எளிய நிலையைத் தானே கூறுவதாக உள்ள அம்மடல் இதோ:-

## ''ஒரு மாற்றாந் தாய்''

1. 'மக்கள் சொல்படி
மாற்றாந் தாய்நான்
மாற்றாள் பிள்ளையை
மாளச் செய்வெனாம்
மந்திர பகவதி
மாயக் காரியாம்.'

2. 'என்னைக் கண்டாலே
யாருக்கும் எளிசு
என்னென்ன குற்றமோ
இசையாய் முடைகிறார்
எவருக்குக் கொடுமை
எப்போது செய்தேன்?'

3. 'நல்லபெண் ணாகவே
நானும் பிறந்தேன்
நானும் மாற்றாந்
தாய்களைப் பழித்தேன்
நமக்கே வருவதை
நாம்அறி வோமா?'

4. 'எந்தப் பெண்ணும்
முதல்மனைவி யானால்
இந்தப் பழியே
இல்லாது தப்புவாள்
இரண்டாம் மனைவிக்கோ
இதுதலை எழுத்து.'

5. 'மூத்தாள் மகனிடம்
முறையாய் நடப்பேன்
முகமது குளிர

முத்தம் கொடுப்பேன்
முதல்தர உணவு
முன்னே அளிப்பேன்.'

6. 'அவ்வளவு செய்தும்
அடைந்தது தெரியுமா?
அம்மா என்பானா
அன்பாய்ப் பழகுவானா?
அடியே என்பான்
அது அவன் குற்றமா?'

7. 'அம்மா செத்ததுமே
அவனைக் கெடுத்தனர்
எவள் வருவாளோ
என்ன செய்வாளோ
என்றே தூபம்
நன்றே போட்டனர்.'

8. 'இப்போது மட்டும்
என்ன வாழ்கிறது?
குறும்புப் பெண்டிர்
'குசுகுசு' என்கிறார்
குத்திப் பேசியே
வத்தி வைக்கிறார்.'

9. 'என்ன செய்வேன்!
யாரிடம் சொல்வேன்!
எனது நிலைமையில்
இருந்தால் தெரியும்.'

**4**

பொதுவாக உலகியலில், பாகம் பிரித்துப் பல ஆண்டு கள் ஆனாலும் பங்காளிகள் சிலர் சொத்துரிமை கொண்டா

டிக்கொண்டேயிருக்கும் பான்மையை வியந்து ஒரு முறை சில பாடல்கள் இயற்றினேன். அவற்றுள் ஒன்றை இங்கே தருகிறேன்.

"ஒருமகன் ஈட்டி யுள்ள
உயர்பொருள் அதனில் பங்கு
தெருமகன் கேட்கான் பற்றான்
திருடனைத் தவிர; தாயார்
தருமகன் மட்டும் பங்கு
தாவெனத் தருவான் தொல்லை
ஒருவயிற் றில் பிறந்த
உறவவன் காட்டும் கத்தி"

(உறவவன் = உறவு அவன். தாயார் தருமகன் = உடன் பிறந்தவன்)

## 5

நாம் பிறந்துள்ள மாந்தர் குலத்தின் மாறுபட்ட பல்வேறு நிலைகளைக் கண்டபோது, என் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த உணர்ச்சியை 'மாந்தர் குலம்' என்னும் தலைப்பில் ஒரு பாடலாக எழுதினேன். தொடர் கருத்தாதலான் இதனை ஆசிரியப்பாவாகவே அமைத்துள்ளேன். இதுதான் அப்பாடல்:-

### "மாந்தர் குலம்"

" அரிது மானிட ராதல் அரிது
பெரிது மானிடப் பிறவி பெரிதாம்
என்றே பலரும் இயம்ப இளமையில்
நன்றே கேட்டு நான்மகிழ் வுற்றேன்
உயிர்களுள் உயர்ந்த மாந்தர் குலத்தில்
பிறந்த எனதுநற் பேற்றை எண்ணி

இறுமாப் புடனே எக்களிப் புற்றேன்.
பன்னாள் கழியப் பாரகந் தன்னில்
என்னே மாந்தரின் இழிசெயல் கண்டேன்
ஒருவரைக் கொன்றுவே றொருவர் வாழ்வது
ஒருவரைப் பறித்தின் னொருவர் தின்பது
போரெனும் பெயரால் பொல்லாத் தலைவர்கள்
ஆயிர மாயிரம் மாந்தரை அழிப்பது
அரசியல் பெயரால் அடாதன செய்வது
கடவுள் பெயரால் களங்கம் புரிவது
கள்ள வாணிகம் கையூட்டு கொள்ளை
கொள்ளி வைத்தல் கொலைபல செய்தல்
பொய்யொடு சூது புரட்டு வாதுகள்
ஐயோ ஐயோ! அளவிலாக் கொடுமை!
இன்ன கொடுமைகள் இழைப்பவர் மிகப்பலர்
இவர்தமை அரக்கரென் றெண்ணினேன்; ஆனால்
இவர்தாம் மாந்தர்போல் இருக்கக் கண்டேன்.
கல்வி யறிவுடன் கலையா ராய்ச்சி
பல்கிய மாந்தர் குலத்தின் பண்பிதா?
பறவைக் குலத்துளிப் பழிச்செயல் இல்லையே
விலங்கினுள் இத்தீ வினைகள் இல்லையே
எவ்வுயிர்க் குலத்திலும் இத்துணைக் கொடுமை
எவ்விடந் தனிலும் இல்லை யாதலின்,
மன்னுயிர்க் குலங்களுள் மாந்தர் குலமே
இன்னல் புரியும் இழிந்த குலமென
நன்னர்த் துணிந்தேன் நானிக் குலத்தில்
பிறந்த பழிக்குப் பெரிதும் நாணினேன்.
பின்னர் எனக்கோர் எண்ணம் பிறந்தது
என்னே செய்தேன்! ஏனிந் நாணம்?
ஈண்டிக் குலத்தில் யான் பிறந்ததற்கா

மீண்டும் மகிழ்ச்சி மேவப் பெற்றேன்
அதற்குக் காரணம் அறிய வேண்டுமா?
ஆய உயிர்கள் அனைத்தும் ஓம்பிய
தூய புத்தர் தோன்றிய தெக்குலம்?
தம்மை வருத்தியோர் தமக்கும் இரங்கிய
பெம்மான் சேசு பிறந்த தெக்குலம்?
முல்லைக் குத்தேர் முகமலர்ந் தீந்த
வள்ளல் பாரி வந்த தெக்குலம்?
மயிற்குப் போர்வை மகிழ்ந்து போர்த்தித்
துயர்தீர் பேகன் தோன்றிய தெக்குலம்?
கன்றினைத் தேரின் காலில் இழந்து
நொந்த பசுவின் நோயது தீர்க்க
மைந்தனைக் கொன்ற மனுநீதி எக்குலம்?
புறாவிற் காகப் பொன்னுடல் ஈந்த
செறாநல் அருள்மிகு 'சிபி'தான் எக்குலம்?
வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடிய வடலூரர் வள்ளலார் எக்குலம்?
தம்மைப் பிறர்க்காத் தந்து முடிந்த
எம்மான் காந்தி எந்தக் குலமோ?
இவர்தமைத் தேவரென் றெண்ணினேன்; ஆனால்
இவர்களும் மாந்தரா யிருக்கக் கண்டேன்.
எல்லாரும் நம்குலம் எழிலுறும் இந்த
நல்லார் அனைவரும் பிறந்தது நம்குலம்
என்றநல் லெண்ணம் எழுந்த காலை
என்றன் குலத்தை ஏத்தினேன் போற்றினேன்
மாந்தர், அரக்கர், மாண்புறு தேவரென
மாந்தர் குலத்துளே மன்னும் மூவகை.
மாந்த ருட்சிலர் மாறுவர் அரக்கராய்;
மாந்த ருட்சிலர் மன்னுவர் தேவராய்,

தேவ ராகா தொழியினும் அரக்கராய்
மாறாது மாந்தராய் இருப்பினும் சாலும்.
ஏன்,
அனைவரும் தேவர் ஆகலாம்
முனையின் மாந்தரால் முடியாத துண்டோ?"

### சுந்தர சண்முகனாரின் உழைப்புகளுள் சில:

| | ரூ. கா. |
|---|---|
| ...ர் மணம் (புதினம்) ... | 20—00 |
| ...ழ் அகராதிக் கலை (தமிழக அரசின் பரிசு பெற்றது) ... | 40—00 |
| தமிழ் இலக்கிய பாலம் ... | 20—00 |
| கெடிலக்கரை நாகரிகம் ... | 50—00 |
| பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசு பெற்றது) ... | 5—00 |
| தமிழ் நூல் தொகுப்புக் கலை ... | 35—00 |
| History of Tamil Lexicography (தமிழக அரசின் பரிசு பெற்றது) ... | 5—00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் ... | 20—00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-1 ... | 140—00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-2 ... | 200—00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் (புதுவை அரசின் ஐயாயிரம் ரூபாய் பரிசு பெற்றது) ... | 30—00 |
| உலகு உய்ய (ஒருமைப் பாடு) ... | 30—00 |
| பாரதி தாசரொடு பல ஆண்டுகள் ... | 12—00 |
| இலக்கியத்தில் வேங்கட வேலவன் ... | 5—00 |
| கருத்துக் கண்காட்சி ... | 20—00 |
| உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு ... | 15—00 |
| தமிழ்க் காவிரி ... | 12—00 |
| கடவுள் வழிபாட்டு வரலாறு ... | 15—00 |
| தொல் திராவிட மொழி-கண்டுபிடிப்பு ... | 20—00 |
| சுந்தர காண்டச் சுரங்கம் ... | 18—00 |